ஓர் செந்தமிழ் மாதப் பத்திரிகை.

எல்லாரும் ஓர் குலம், எல்லாரும் ஓர் இனம்,
எல்லாரும் இந்தியா மக்கள்;
எல்லாரும் ஓர் நிறை, எல்லாரும் ஓர் விலை,
எல்லாரும் இந்நாட்டு மன்னர்.

ரா. நாராயணஸ்வாமி, ஆசிரியர்.
ரா. சுப்ரமண்யம், பொறுப்பாசிரியர்.

மாலை	ஸ்ரீமுக-தை	மணி
5	1934ஞு ஜனவரி-பிப்ரவரிமீ	10

வாழிய காந்தி மஹான்.

பண்டித ஜனுப் K. அப்துல் சுகூர் சாகிப் அவர்கள்.

அகவற்பா.

திருவளர் செல்வப் பெருவள நல்கு
நந்தாய் நாட்டை விந்தையாய்ப் படர்ந்த
வறுமையா மிருளின் சிறுமையை யோட்ட
வந்தவ தரித்த எந்தைநீ வாழி.

சுதந்திர மின்றி நிதந்தரித் திராய்
அன்னியர் தமக்குச் சென்னியைத் தாழ்த்தி
அடிமைக ளாய்வாழ் கொடுமையே தவிர்க்கக்
கடல்கடந் தேகிய அடலோய் வாழி.

ஒரு கூட்டம் இந்தியர் சேர்ந்து எந்தத் தொழில் முறையிலேனும் இறங்கி அதைச் சாதிப்பது தற்போது முடியாதபடி அவ்வளவு கொடிய வேற்றுமை நம்முள் ஏற்பட்டுள்ளது.

197897

சாந்தமும் பொறையு மேந்திட வெமர்க்குச்
சத்தியாக் கிரக சித்தியாம் பொருளைச்
சபர்மதி தன்னில் தபனுை யமர்ந்து
போதிக்க வந்த நீதனே வாழி. 12.

நஞ்சோ தாரின் பஞ்சம் போக்க
நலந்தரு சர்க்கா நிலந்தனிற் சுழன்றே
நாதமே புரியின் தீதெலாம் போமென்
றெங்குமு ழங்கிய நங்கோ வாழி. 16.

பன்னெடு நாளாய் அன்னியர்க் கடிமை
பட்டுவாழ் தளையின் கட்டையே தகர்க்கக்
கதருடை யொன்றே நிதரிச னமெனக்
கோவணத் துடன்வாழ் கோவே வாழி. 20.

வானுடு புகழ மேனுடுற்று
வட்ட மேஜைமுன் திட்டமா யெமர்க்கு
சுயரா ஜியமதை அயரா துபெற
வந்தலாய் நிலவுங் காந்திநீ வாழி. 24.

தீண்டா மையினி வேண்டா வுலகோர்
சோதர ராகி யேதமி லாது
சாந்தமெ னுய்வாள் ஏந்தியே போர்க்கு
வம்மெனுங் காந்தி செம்மல்வா ழியவே. 28.

தாலாட்டு.

திரு. எஸ். தேசிகவிநாயகம் பிள்ளை அவர்கள்.

ஆராரோ ஆராரோ ஆரிவரோ ஆராரோ

மாமணியோ முத்தோ மரகதமோ மன்னவர்தம்
தாம முடிமீது தயங்கும் வயிரமதோ.

முல்லை நறுமலரோ முருகவிழ்க்கும் தாமரையோ
மல்லிகைப் பூவோ மருக்கொழுந்தோ சண்பகமோ.

தெள்ளமுதம் உண்டு தெவிட்டாக் கனியுண்டெம்
உள்ளங் குளிர உரையாடும் பைங்கிளியோ.

நமது ஆண்மை யெங்கே? ஆத்ம வீர மெங்கே! அச்சமும் போனசையுந் தவிர நம்மிடம் ஏதேனு முண்டோ?

"பாரதி"யின் வாசகர்களுக்கு.

திரு. A. ராமசாமி அவர்கள்.

மனித வாழ்க்கைக்கும், நாகரீகத்திற்கும் பொருள் முக்கிய சாதனமாயிருப்பது போலவே, அறிவு வளர்ச்சிக்கும், சமூக முன்னேற்றத்திற்கும், அரசியல் விவகாரங்களுக்கும் பத்திரிகைகள் முக்கிய சாதனங்களாயிருக்கின்றன. முற்காலத்தில் பத்திரிகை யென்னும் பெயரையே மக்கள் அறிந்திருக்கமாட்டார்கள். அக் காலத்தின் நிலைமையெல்லாம் இக் காலத்திய மாந்தருக்குச் சிறுபிள்ளைத்தனமாகக் காணப்படுகின்றன. ஆங்கிலேயர் இந்நாட்டிற்கு வந்ததன் பயனாகச் சென்ற நூற்றாண்டில் சில பத்திரிகை

கற்கண்டு சீனி கனியுங் கனிந்தொழுகு
சொற்கொண் டெமக்குச் சுகமளிக்கும் பூங்குயிலோ.

நெஞ்சிற் கவலையெலாம் நீக்கித் திருமுகத்தில்
புஞ்சிரிப்பைக் காட்டியெம்மைப் போற்றும் இளவரசோ.

பல்லக்கில் அம்மான் பவனி வரும்பொழுது
மெல்ல மடியிருந்து விளையாடும் பைங்கிளியோ.

ஆரடித்தார் நீயழுதாய் அடித்தாரைச் சொல்லியழு
சீரெடுத்த செல்வச் சீமான் திருக்குமாரா.

பாலை விரும்பினையோ பணியாரம் வேண்டினையோ
சோலைப் பசுங்கிளியே சுந்தரமே சொல்லியழு.

சப்பாணி கொட்டித் தளர்ந்தனையோ அல்லதுன்றன்
கைப்பாவைக் காகக் கலங்கி அழுதனையோ.

தித்திக்கும் தேனும் தினைமாவும் கொண்டுன்றன்
அத்தை வருவாள் அழவேண்டாம் கண்மணியே.

மாங்கனியும் நல்ல வருக்கைப் பலாக்கனியும்
வாங்கி உன் அம்மான் வருவார் அழவேண்டாம்.

ஆராரோ ஆராரோ ஆரிவரோ ஆராரோ.

சுதந்திரம் என்ற ஒலி இப்போது அடிக்கடி காதில் கேட்கிறது. ஆனால் இருளில் உண்மை வழி தெரியாது தடவிக்கொண்டிருக்கிறோம்.

கள் தோன்றின. இவ்விருபதாம் நூற்றாண்டில் அநேக பத்திரிகைகள் வெளிக்கிளம்பியிருக்கின்றன. இக் காலத்தில் பத்திரிகை பிறவாத நாடில்லை; பத்திரிகை உலவாத நகரமில்லை. பத்திரிகைகளின் பயனாகவேதான் தேசத்தின் மூலை முடுக்குகளிலெல்லாம் சுதந்திர ஆவேசம் பொருந்திய சப்தங்கள் பிரதி த்வனிக்கின்றன. அரசியல் கிளர்ச்சிகள், சமூக சீர்திருத்தக் கிளர்ச்சிகள், அறிவு ஆராய்ச்சிக் கிளர்ச்சிகள் முதலிய பல்வேறு துறைகளில் மக்கள் தங்கள் அறிவைச் செலுத்தி உண்மையையும், ஒற்றுமையையும், சுதந்திரத்தையும் நிலைநாட்டப் பாடுபடுகின்றனர். இவ்வாறாய காரியங்களுக்குப் பத்திரிகைகள் ஊன்றுகோல்களாயிருக்கின்றன. இதனால் உலக மக்களிற் பெரும்பாலார் பத்திரிகைகளின் பிரயோஜனத்தை யறிந்தவர்களெனக் கூறலாம்.

நமது தேசத்தில் நம் நாட்டு ஜனத்தொகையைப் பொருத்தவரையில் இதர தேசங்களை யொப்பிட்டுப் பார்க்கும்போது, பத்திரிகைகளின் மதிப்பை யுணர்ந்தவர்கள் மிகச் சிலரேயெனக் கூற வேண்டியிருக்கிறது. பின்னும் மற்ற நாடுகளைவிட நமது நாடு மிகக் கேடான நிலைமையிலிருக்கிறதென்றுங்கூடச் சொல்லவேண்டியிருக்கிறது. ஏனெனில், நமது நாட்டில் பத்திரிகை பிறந்தால், அதை ஆதரிப்பவர் மிகச் சிலரேயாவர். இதற்குக் காரணம் அறியாமைதான். இவ்வாறுரைப்பதைக் கேட்டுச் சிலர் வியப்படையலாம். அறியாமையென்றுரைப்பதற்கும் அறியாமையேதான் மூலகாரணமென்றும் வார்த்தையைத் திருப்பிச் சொல்லவும் முற்படலாம். ஆனால் சற்று யோசித்துப் பார்த்தால் உண்மை விளங்காமற்போகாது. நமது நாடு வறுமையுடைய நாடு என்றும், போதிய அளவு படிப்பும், பணமும் நம்மவரிடம் இல்லாததுதான் முக்கிய காரணம் என்றும் சமாதானம் கூற முற்படலாம். ஆனால் ஜீவனத்திற்கு மட்டிலும் போதிய வருப்படியுள்ளவர்களாயும், ஏதோ ஒரு குறிப்பிட்ட புஸ்தகத்தைத் தவிர வேறு புத்தகங்களோ, பத்திரிகைகளோ படிக்கத் தெரியாதவர்களாயுமுள்ள மக்களைத் தவிர்த்து, மற்ற ஜீவனத்திற்கு மேல் சற்று மிச்சப்படுத்தக் கூடியவர்களையும், எடுத்த புத்தகம் அல்லது பத்திரிகை படிக்கத் திறமையுள்ளவர்களையும் மட்டிலும் எடுத்துக்கொண்டு, அவர்களுக்குள் பத்திரிகைகளை ஆதரிப்பவர் எவ்வளவு பேர் என்று கணக்கிட்டுப் பார்க்கும்போது உண்மை விளங்கும். உதாரணமாக நான் வசிக்கும் நகரம் சுமார் பதினாயிரம் ஜனத்தொகையுடையது. இதில் பணமும், படிப்பும் வேண்டிய அளவு கிடைக்கப்

தமிழ் நாடு முற்றும் ஒளியும், தெளிவும், மணமும், பணமும், தொழிலும், எழிலும் பெற்று விளங்கிய விதத்தை எண்ணி யெண்ணி அத்தகைய உண்மைத் தமிழ் நிலையை எனது ஆவி கூவி யழைக்கிறது.

பெறாதவர்கள் எண்ணாயிரம் பேர் என வைத்துக்கொண்டபோதிலும், மீதி இரண்டாயிரம் மக்கள் போதிய அளவு எதையும் படிக்கவும், பத்திரிகை, புத்தகம் முதலியவற்றை வாங்கவும் திறமையுடையவர்களென்பதில் சந்தேகமில்லை. இவர்களிலும் முதலாளிகளிடம் அகப்பட்டுக்கொண்டு அல்லும் பகலும் ஓய்வில்லாமல் உழைக்கக் கூடியவர்களாயும், பேராசை கொண்டோ, அல்லது குடும்பத்திற்குப் போதிய பணமில்லாமல் அநேக வேலைகளில் தலையிட்டுக்கொண்டோ, நிற்க நேரமில்லாமல், வர்த்தகத்திலும், கைத்தொழிலிலும், விவசாயம் முதலியவற்றிலும் ஓயாமற் பாடுபடக் கூடியவர்கள் சுமார் 1500 பேர் என்று வைத்துக்கொண்டபோதிலும், மீதி 500 பேர் நிம்மதியாக ஏதாவது பொழுது போக்குவதற்கு வழி பார்க்கக் கூடியவர்களாகவே இருப்பார்களென்பதில் சந்தேகமேயில்லை. இந்த 500 பேர்களுக்கும் வரக்கூடிய பத்திரிகைகளோ தின, வார, மாதப் பத்திரிகைகளெல்லாங் கூடி 30-க்கு மேல் கிடையாது. இதில் இரவலாகப் பத்திரிகையை வாங்கிப் பார்ப்பவர்கள் பத்திரிகை யொன்றுக்கு 5 பேர் வீதம் வைத்துக்கொண்டபோதிலும் $150 + 30 = 180$ பேர் தான் பத்திரிகை பார்க்கப் பிரியமுடையவர்களாயிருக்கிறார்களென்று கூறமுடியும். மீதி 320 பேரும் பத்திரிகையின் பிரயோஜனத்தைப் பற்றிச் சிறிதும் தெரிந்துகொள்ளாதவர்களாகவும், பத்திரிகையைத் துவேஷிக்கிறவர்களாகவுமேதான் இருக்க முடியும். இந்த ஒரு நகரத்தின் செய்தியே இப்படியிருக்கும்போது, இனித் தமிழ் நாடு முழுவதும் எப்படியிருக்கும் என்பதை வாசகர்களே யூகித்துணர்ந்து கொள்ளட்டும். ஆகவே பத்திரிகைகளை ஆதரிக்காததற்குக் காரணம் அறியாமை யென்பதில் குற்றமென்ன இருக்கிறது?

நிற்க, இனி எடுத்த விஷயத்தைத் தொடுத்து முடிப்போம். ஒரு பத்திராதிபர் எவ்வளவு உயரிய நோக்கங் கொண்டவராயிருந்தபோதிலும், பத்திரிகா நிர்வாகத்தில் எவ்வளவு திறமை வாய்ந்தவராயிருந்தபோதிலும் வாசகர்களின் ஆதரிப்பு இல்லாமற் போமாயின் ஆசிரியரின் நோக்கமும், திறமையும் எல்லாம் வீணேயாகும். ஆதரிப்பவர்களின் எண்ணிக்கை எவ்வளவுக்கெவ்வளவு அதிகப்படுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு பத்திரிகாசிரியரின் உற்சாகமும் பெருகுகின்றது. அந்த உற்சாகமே பத்திரிகையின் மேன்மைக்கும், பொலிவுக்கும் ஆதாரமாயிருக்கின்றது. சாதாரணமாகப் பெரிய மூலதனத்தை ஆதாரமாகக்கொண்டு நடைபெறும் பத்திரிகைகளையும், ஆசிரியரின் கைப்பொறுப்பில் ஏதோ ஒரு சிறிய தொகையை ஆதாரமாகக்

யவனர் நமது துறைகளில் கப்பலை நிறுத்திக்கொண்டு நமது தமிழ் நாட்டுக் கைத்தொழிற் பொருள்களை வாங்கப் பொன் மலை குவித்துக் காத்திருக்கும் காட்சியை மீண்டும் என்று காண்போம்?

கொண்டு நடைபெறும் பத்திரிகைகளையும் கவனித்தால் இவ் வுண்மை விளங்காமற் போகாது. ஆசிரியர் எவ்வளவோ திறமை வாய்ந்தவரா யிருக்கலாம். மக்களின் வாழ்க்கையையே மாற்றி வைக்கத்தக்க போராற்றலும், அபார யோசனைகளும் உள்ளவரா யிருக்கலாம். ஆனல் அவை நாட்டுக்குப்பயன்படுவதற்கு மார்க்கம் பத்திரிகையேயல்லவா? அப் பத்திரிகையை ஆதரிப்பதற்கு ஏராளமான வாசகர்கள் தயாரா யிருந்தாலன்றி ஆசிரியரின் திறமையும், யோசனைகளும் நிறைவேறுவதற்கு மார்க்கமெங்கே? ஆகவே பத்திரிகாபிவிருத்திக்கு வாசகர்களின் ஆதரவே முக்கிய காரணம்.

நமது "பாரதி" அதன் பெயருக்கேற்ப பல வழிகளிலும் சிறக்க வேண்டி யிருக்கிறது. ஆசிரியர் திரு. ரா. நாராயணஸ்வாமி அவர்கள் சிறந்த தேச பக்தரும், பத்திரிகா நிர்வாகத்தில் அதிக திறமையும், விருப்பமும், அனுபவமும் உடையவ ரென்பது வெளிப்படை. அவருடைய விருப்பப்படி "பாரதி"யை உயர்த்துவதற்கு வாசகர்களின் ஆதரவு அத்தியாவசியமா யிருக்கிறது. ஆதரிப்பாளர் அதிகமில்லாத குறைவால் தற்போதைய "பாரதி"யைத் தம் இஷ்டப்படி சிறப்பிப்பதற்குச் சாத்தியப்படாமல் ஒரு கிராமத்திலிருந்து கொண்டு அவதிப்படுகிறார். அவருடைய எண்ணங்களும், யோசனைகளும் அளவற்றன. "பாரதி"யை பாரதியாகவே ஆக்கிவிடலா மென்று பிரயத்தனப்படுகிறார். ஆனல் ஆதரவை நோக்கும் போது, அவரது முயற்சிகள் சற்று தவக்க மடைகின்றன. எனவே, "பாரதி" சிறந்து மற்றெல்லாப் பத்திரிகைகளையும் விட உயர்ந்த நிலைமையே யடைவதற்கு இன்னும் ஏராளமான சந்தாதாரர்கள் தேவை. இப்போதைய நிலைமையிலேயே "பாரதி" அளவிலும், அழகிலும் சாதாரணமானதாகக் காணப்பட்ட போதிலும், அதில் காணப்படும் விஷயங்கள் நல்ல அறிஞர்களால் மதிக்கப்படக் கூடியவையாயும், அதன் ஆசிரியர் பத்திரிகாபி விருத்தியில் ஊக்கமுள்ளவராயு மிருக்கிறார் என்பதையும், பல பத்திரிகைகளும், பல அறிஞர்களும், பல புலவர்களும் "பாரதி"யைப் பற்றிக் கொடுத்துள்ள அபிப்பிராயங்களாலேயே நன்கு அறியக்கூடியதா யிருக்கிறது. இதனல் தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் "பாரதி" ஒரு சிறந்த மாதச் சஞ்சிகை யென்பது வெளிப்படை. எனினும் "பாரதி" அப் பெயருக்கேற்ப பின்னும் பல வழிகளில் சிறக்க வேண்டி யிருக்கிறது. இதற்கு வாசகர்களாகிய ஆதரிப்பாளரின் துணை மிகவும் இன்றியமையாததது. ஏனெனில் சந்தாதாரர்கள் தான் பத்திரிகைக்கு ஜீவ நாடி போன்றவர்கள்.

எழிலுங் திருவும், இளமையினிடமே யுள்ளன. ஒரு நாட்டின் சக்தி, வீரம், அன்பு, அழகு, இன்பம், தேசு, சக்தி, தைரியம், சதம், சுத்தம், சுதந்திரம் என்னும் குணங்கள் இளமை யென்னும் சொல்லில் ஒலிக்கின்றன.

மரத்திற்கு எப்படி அதன் வேர்கள் ஆதாரமாயும், மரத்தைப் போஷிக்கும் தாய்கள் போலவும் இருக்கின்றனவோ அப்படியே ஒரு பத்திரிகைக்குச் சந்தாதாரர்கள் இருக்கின்றார்கள். ஆதலால் ஒவ்வொருவரும் முயன்று இரண்டு சந்தாதாரர்கள் வீதம் சேர்த்து "பாரதி"யைச் சிறப்பிக்க வேண்டியது ஒவ்வொரு தமிழபிமானமுள்ள வாசகர்களுடைய முக்கிய கடமையாகும்.

இன்னும் எவ்வெவ் வகையில் "பாரதி" சிறக்க வேண்டு மென்ற எண்ணம் பலருக்குண்டாகலாம். இதற்கு "பாரதி" என்ற பதப் பொருளை விளக்கி மேலே கூறுவாம். "பாரதி" என்பதற்கு சரஸ்வதி அல்லது கலைமகள் என்பது ஒரு பொருள். அதாவது கல்வித் தெய்வம் என்பதாகும். பாரத தேச மக்களின் சக்தியாகிய தெய்வம் என்பது மற்றொரு பொருள். இவ் விரண்டில் எப் பொருளை அடிப்படையாய்க் கொண்டு இப் பத்திரிகை தோன்றி யிருந்த போதிலும் சரி. அப் பொருளுக்கேற்ப பத்திரிகை பல வழிகளிலும் சிறக்க வேண்டி யிருக்கிற தென்பது எனது அபிப்பிராயம். இரண்டாவது பொருளையே கொண்டதா யிருப்பின் நமது நாட்டைப் பற்றிய அநேக விஷயங்கள் அவசியமானவை. உதாரணமாக பழங்காலத்து பாரத நாட்டுச் சிற்பச் சித்திரங்கள், தற்காலச் சிற்பச் சித்திரங்கள். அவற்றின் மாறுபாடுகள், பழங்காலத்து வீரர்கள், தற்காலத்து வீரர்கள், சரித்திராசிரியர்கள், புலவர்கள், பண்டிதர்கள் இவர்களின் வேலைத் திறமைகள், அவர்களின் ஞாபகச் சின்னங்கள், அரசர்கள், கீர்த்தி பெற்ற ராஜ தந்திரிகள் முதலியவர்களின் காரியத்தாலான பலாபலன்கள் அவர்களின் சித்திரப் படங்கள் முதலியவைகளையும் மற்றும் எழுத்துக்கள், ஆலயங்கள் அவற்றின் சரித்திர சம்மந்தமான மாறுதல்கள், ஆயுதங்கள், இயற்கை யமைப்புகள், தத்துவ ஞானிகள், சீர்திருத்தக்காரர்கள், அவர்களின் காரியங்கள் முதலிய எவ்வளவோ விஷயங்களைக் கொண்டு திகழ வேண்டியதா யிருக்கிறது. "பாரதி" என்பதற்கு கல்வித் தெய்வம் என்ற பொருளின்படியே வைத்துக்கொண்ட போதிலும், இப்போது கூறப்பட்ட விஷயங்களே யன்றி, இலக்கண, இலக்கிய சம்பந்தமானதும், வான சாஸ்திரம், பூசர்ப்ப சாஸ்திரம், சிற்ப சாஸ்திரம், ஜீவ தத்துவ சாஸ்திரம், சங்கீத சாஸ்திரம் முதலிய அநேக விஷயங்களும், அவற்றின் பழங்கால நிலைமை, தற்கால நிலைமை, இடையிலேற்பட்டு வந்த மாறுதல்கள் முதலிய பல விஷயங்களும் காணப்பட வேண்டியதா யிருக்கிறது. இவ்வாறுவதற்குப் பத்திரிகையின் பக்கங்களும் அள

ஜப்பான், அமெரிக்கா, ஜெர்மனி, ரஷ்யா, ஆஸ்திரியா ஹங்கேரி முதலிய தேசங்கள் முன்னேறி விடுதலை பெற்றது அந் நாட்டு வீர இளைஞர்களாலன்றோ?

வும் பெருகுவது மாத்திரமல்லாமல் தாள்களும் உயர்ந்த கிளேஸில் அமைய வேண்டும். பல வர்ணச் சித்திரப் படங்களும், பல புகைப் படங்களும் பல உதாரணச் சித்திரப் படங்களும் பதிப்பிக்கப்பட வேண்டுமானால் அதற்கேற்ற உயர்ந்த தாள்கள் அவசியமாகும். இவ்வளவு சீரும் சிறப்பும் கொண்டிருக்க வேண்டியது "பாரதி" யென்னும் பெயருக்கேற்றதாகும்.

மேலே சொல்லப்பட்டதைப் போன்ற விஷயங்களிற் சில ஏற்கெனவே "பாரதி"யில் காணக்கிடைக்கின்றன வாயினும், இது மட்டிலும் போதாது சென்னையில் பிரபல தேசீய வாதியாகிய திருவாளர். K. நாகேசுவர ராவ் அவர்களால் வெளியிடப்படுகிற தெலுங்கு "பாரதி"யில் நாம் முன் கூறியதைப் போன்ற விஷயங்கள் பல காணப்படுகின்றன வாயினும் "பாரதி" என்னும் பெயருக்கேற்ப அதுவும் போதிய அளவு உயர்ந்த நிலைமையை யடையவில்லை யெனக் கூற வேண்டி யிருக்கிறது. ஆயினும் அதையும் அதே அளவில் தெலுங்கு நாட்டில் வெளியிடப்படுகிற "கிருஹ லக்ஷ்மி" என்ற உயர்ந்த மாத சஞ்சிகையையும் மெச்சிப் புகழாத தெலுங்கர் அந் நாட்டில் இல்லை. அப் பத்திரிகைகளால் ஆராய்ச்சியாளர் பலர் பல ஆதாரங்களைக் கண்டறிகின்றார்கள். சித்திர விற்பன்னர்கள் பலர் அதைக் காமுறுகின்றார்கள். புலவர்கள் பலர் புதுப்புது விதமான கவிகளால் அதன் பக்கங்களை அலங்கரிக்கின்றார்கள் (சிறப்புகிறார்கள்) என்றால் அவற்றின் உயர்வைப்பற்றி வேறாகக் கூறுவானேன்? அவ் வித் உயர்வை நமது தமிழ்ப் "பாரதி" யடையவேண்டும். பஞ்ச திராவிடங்களிலும் தமிழொன்றே தாய்மொழி யென்றும், ஏனைய தெலுங்கு, மலையாளம் முதலிய நான்கு திராவிட மொழிகளும் சேய் மொழியென்றும் தமிழபிமானிகள் கூறுவது மாத்திரமல்லாமல் "எலும்பைப் பெண்ணாக்கியதும், முதலையுண்ட பாலனை யழைத்ததும், மறைக் கதவினைத் திறந்ததும் தமிழ் மொழியே" யென்று முன்னோர் பாடி வைத்த பாட்டையும் ஆதாரமாக எடுத்துப் பாடி ஆனந்திப்பார்கள். அவ் விதத் தமிழ் மொழியில் தோன்றியுள்ள நமது தமிழ்ப் "பாரதி"யைத் தெலுங்குப் "பாரதி"யினும் சிறந்து விளங்கும்படி செய்ய ஒவ்வொரு தமிழபிமானியும், தமிழ்ப் புலவரும் பாடுபடவேண்டியது அத்தியாவசியமாகும்.

ஏனெனில் தமிழ் நாட்டில் மேலே கூறப்பட்ட விதமான பத்திரிகை யொன்றும் நாளதுவரையில் புறப்படவில்லை. வங்காளத்தினின்றும் வெளியிடப்படும் "மாடென் ரெவியூ" என்னும் ஆங்கில

நமது இந்திய விடுதலைக் கிளர்ச்சியில் அரும் பெரும் தியாகம் செய்த வீர இளைஞர்களை நீங்கள் நன்கு அறிந்து அவர்கள் இரத்தத்தை உங்கள் நாடிகளில் துடிக்கச் செய்தல் வேண்டும்.

ஏ. இரங்கசாமி அய்யங்கார்.

திரு. என் வேங்கடரமணன் அவர்கள்.

இந்திய அரசியல் வானத்தில் ஒளி வீசா நின்ற சிறந்த நட்சத்திரங்களுள் ஒன்றாக விளங்கியவர்களில் ஏ. இரங்கசாமி அய்யங்காரும் ஒருவர். இருள் சூழ்ந்த இந்திய அரசியல் உலகத்தில் சிறிது ஒளியைப் பரப்பி, இந்தியரின் கண்களுக்குக் காட்சியளித்து வந்த சிறந்த ஒரு சில விண்மீன்களும் ஒவ்வொன்றாகக் காலன் வாய்ப்பட்டு வீழ்ந்துவருவது இந் நாட்டின் துரதிர்ஷ்டமாகும். "வெண்ணெய் திரண்டு வருகையில் தாழியுடைந்தா"லன்ன, இந்திய அரசியலில் புதிய மாறுதல்கள் தோன்றப்போகும் இவ்வரிய சந்தர்ப்பத்தில், அரசியல் ஞானத்திலும், பொருளாதார சாஸ்திரத்திலும் மேலான அறிவைப் படைத்து, அதன் பயனைப் இந் நாட்டுப் பொது மக்களுக்கும், அரசாங்கத்தாருக்கும் அரிய யோசனைகள் கூறி உதவிபுரியக்கூடிய நிலையில் விளங்கிய இரங்கசாமி அய்யங்கார் அவர்கள் மறைந்தமை, பொதுவாக இந்தியாவுக்கும், சிறப்பாகத் தென்னிந்தியாவுக்கும் பெருநஷ்ட மென்பதிற் றடையில்லை. பத்திரிகையுலகில் இந்தியாவின் சார்பாக ஒப்பற்றத் தனிச் சிறப்புற்றுப் பிரபஞ்சத்தில் விளங்கிவரும் "ஹிந்து"ப் பத்திரிகையை இத்துணைச் சிறப்புக்கு இலக்காக்கிய பெருமை இரங்கசாமி அய்யங்காருடையதன்றோ? ஒற்றுழையாமை போன்ற அரசியல் போராட்டம் பாரத நாட்டில் வீறுகொண்டு எழும்பி நின்றகாலத்தும் நடுவு நிலைமை சிறிதுங் குன்றாது அரசாங்கத்தாருக்கும், பொது மக்களுக்கும் இடையில் நின்று "ஹிந்து"ப் பத்திரிகை செய்துவந்த தேச சேவையை யாரால் மறக்க முடியும்? தேசீய விடுதலைப் போரில் முன்னணியில் நின்று வேலை செய்துவரும் "காங்கிரஸ்" மகா சபையினிடத்து ஆழ்ந்த பற்று உடையவரா யிருந்தும் அமிதவாதச் செயல்களில் தலையிடாது நேரிய முறையில் தங் கடனாற்றி வந்த பெருந்தகைமை நமது அய்யங்காருடையதேயாகும். மிதவாதிகளிடையிலும், அமிதவாதிகளிடையிலும், அரசாங்கத்தாரிடையிலும் ஒன்றுபோல் அபிமானம் பெற்று, அனைவருள்ளத்தையுங் கொள்ளைகொள்ளும் பான்மையில் அய்யங்கார் தேச ஊழியம் செய்து வந்ததுபோல் பலரால் செய்ய முடியாதென்பது திண்ணம்.

இந்திய ஜன சமூகத்திற்கு அடிப்படையாக விளங்கிவரும் விவசாயிகளின் குறைகளைப் போக்குவது இந்திய ஜனத் தலைவர்களின் முதற் கடமையென்ற கருத்தைக்கொண்டு இரங்கசாமியார் செய்துவந்த முயற்சிகள் பலப்பல. தமிழ் நாட்டில் தமிழ் மொழியில் தலைசிறந்து விளங்கும் "சுதேச மித்திரன்" பத்திரிகையை ஆங்கிலப் பத்திரிகைகளைப் போன்று பல துறைகளிலும் அபிவிருத்தி யடையச் செய்து, அதன் வாயிலாகத் தமிழகத்தாருக்கு அரசியல் ஞானத்தையும், தேசாபிமானத்தையும், தமிழ் மொழிப் பற்றையும் ஊட்டி, தமிழன்னையைத் தட்டியெழுப்பித் தனியரசியல் அமர்த்த வேண்டி அய்யங்கார் ஆற்றிய முயற்சிகளைத் தமிழர் மறப்பினும், தமிழ் மொழி மறக்க முடியாதன்றோ? தமிழிலும், ஆங்கிலத்திலும் தாராளமாக எழுதுவதிலும், உபந்நியசிப்பதிலும் அவருக்கிருந்த ஆற்றல் அதிசயிக்கத் தக்கதாகும். விஷயங்களை எடுத்துத் தெளிவாக விளங்கவைப்பதில் மிகத் திறமை யுடையவர். பிறப்பால் பிராமண சமூகத்தவராயினும் ஆசார சீர்திருத்தங்களில் அபிமானம் படைத்து விளங்கினார். மித்திரன் மூலமாகத் தமிழருக்கும், ஹிந்துவின் மூலமாக உலக மக்களுக்கும் ஒருங்கே ஊழியஞ் செய்து, ஒப்புயர்வற்ற பத்திரிகாசிரியராய், அரசியற் புலவராய், பொருளாதார நிபுணராய், பொதுஜன சேவையாளராய்ப் பெயர்பெற்றுக் காலஞ்சென்ற இரங்கசாமி அய்யங்கார் அவர்களின் வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கத்தினைத் தமிழராயினோர் அறிந்திருத்தல் அவசியம்.

பிறப்பும், படிப்பும், பத்திரிகைப் பழக்கமும்

தஞ்சை ஜில்லாவில் நிலச்சுவான்தாரராகப் பெருமை யுற்றிருந்த நரசிம்ம அய்யங்கார் என்ற பெரியாரின் திருக்குமாரராக நமது இரங்கசாமி அய்யங்கார் 1877-ம் ஆண்டு ஜூன்மீ 16-ம் தேதி பிறந்தார். இவருக்கு ஒரு சகோதரரும், நான்கு சகோதரிகளும் உண்டு. இவரது தந்தையாகிய நரசிம்ம அய்யங்கார் கல்வி யறிவும், உலகியல் ஞானமும், பெருந்தன்மையும் படைத்தவரா யிருந்தார். அக்காலத்தில் நாட்டில் செல்வாக்கும், நன்மதிப்பும் வாய்ந்திருந்த திவான் பஹதூர் எஸ். ஸ்ரீனிவாச ராகவ அய்யங்காரென்பவர் நமது இரங்கசாமி அய்யங்காரின் தாய்மாமனாக விருந்தார். ஸ்ரீனிவாசராகவ அய்யங்கார் சிறந்த கல்வியாளராக விளங்கினார். அவர் "புஸ்தகம் ஹஸ்த பூஷணம்" என்றபடி சதா அறிவு தரும் நல்ல நூல்களைப் படித்துக்கொண்டே யிருப்பார். இரங்கசாமி அய்யங்கார் சிறு வயதில் தந்தையாரிடத்தும், தாய்மாமனிடத்தும் நெருங்கிப் பழகிவந்ததன் பயனாய் அடக்கம், பொறுமை, பெருந்தன்மை முதலிய குணங்களைப் பெற்றதோடு, கல்வியில் பேரூக்கங் காட்டினார். எனவே, ஊக்கமுடையோராகப் பள்ளியிற் படித்துப் படிப்படியாக உயர் வகுப்புகளில் தேர்ச்சியடைந்து வந்து சர்வகலாசாலைப் பட்டத்தைப் பெற்றார். உடனே சென்னைத் துரைத்தனத்தாரின் இலாகாவில் எழுத்தாளராக உத்தியோகம் பெற்றார். சின்னாட்களில் பி.எல். என்ற சட்டப் பரீக்ஷையில் தேர்ச்சியடைந்து, தஞ்சாவூரில் வக்கீலாகத் தம் வாழ்க்கையைத் தொடங்கினார். அத் தொழிலில் அவர் மிகத் திறமையைக் காட்டிவந்தாராயினும், உண்மையை மறைத்து யுக்தியைக்கொண்டு வாதப் போர்புரியும் வக்கீல் தொழில் அவருக்கு விருப்பமில்லாதிருந்தது. மேலும் அவரிடத் தமைந்திருந்த அறிவாற்றல்கள் நாட்டுக்குப் பயன்பட வேண்டிய நற்காலமும் வந்து வாய்த்தது. எனவே எஸ். கஸ்தூரி ரங்கய்யங்காரின் வேண்டுகோளுக்கிணங்கிச் சென்னைக்குச் சென்று நமது இரங்கசாமி அய்யங்கார் "ஹிந்து" என்ற ஆங்கிலப் பத்திரிகைக்கு ஆசிரியராக வமர்ந்தார். கஸ்தூரி ரங்கய்யங்கார் இவருக்கு இளைய மாமனாவர். "ஹிந்து"ப் பத்திரிகையைக் கஸ்தூரி ரங்க அய்யங்கார் 1905-ம் ஆண்டில் விலைக்கு வாங்கி நடத்த முற்பட்டதினின்றும் இரங்கசாமி அய்யங்கார் அவருக்குத் துணையாக நின்று அப் பத்திரிகைக்கு மானேஜராகவும், உதவி ஆசிரியராகவும் தம் தொழிலை ஆரம்பித்தார். அக் காலத்தில் பத்திரிகாசிரியர் வேலையால் போதிய வருவாய் கிடைக்காதென்பதை யறிந்தும், பொதுஜன சேவைக்கு அத் தொழில் மிகவும் ஏற்புடைத் தென்பதைக் கருதியே இரங்கசாமி அய்யங்கார் அதனை மேற்கொண்டார். மேலும் அப் பத்திரிகையை அதுவரையில் நடத்திவந்தவர்கள் பண முடையால் தங்கள் உற்சாகத்தை யிழந்து, பத்திரிகையை மேலும் தொடர்ந்து நடத்த முடியாத நிலைமையிலேயே அதனை விற்கலாயினர். அந் நிலையில் அப் பத்திரிகையின் பொறுப்பை யேற்று அதனை நடத்துவதற்கு முன்வந்த அய்யங்கார்கள் இருவரின் ஊக்கமும், துணிவும், நம்பிக்கையும், தியாகமும் புகழ்தற்கரியனவன்றோ? இரங்கசாமி அய்யங்காரின் துரைத்தன உத்தியோக அனுபவமும், வக்கீல் தொழிலின் சட்ட ஞானமும் பத்திரிகை நிர்வாகத்திற்குப் பெரிதும் பயன்பட்டன. தேச சரித்திரம், அரசியல், பொருளாதாரம் முதலிய துறைகளைப்பற்றிய ஏராளமான நூல்களைப் படித்துத் தம் அறிவை மேன்மேலும் வளர்த்துக்கொண்டார். அவ் வனுபவத்தைக்கொண்டு அவர் பத்திரிகையில் எழுதிய எழுத்துக்கள் பொதுஜனங்களின் மனத்தைக் கவர்ந்தன. இந்திய அரசியலின் பிறப்பு வளர்ப்புகளைப் பற்றி நன்காராய்ந்து "இந்திய அரசியல்" என்ற பெயரால் ஒரு புத்தகத்தை எழுதி வெளியிட்டார். அஃது படித்த மக்களின் பெரும்பாலரது மனக் கண்ணைத் திறந்துவிடலாயிற்று. இரங்கசாமி அய்யங்காரின் பெயரும் பிரகாசிக்கத் தொடங்கியது. "ஹிந்து"ப் பத்திரிகையும் வளர்ச்சியுற்று நன்னிலையை யடையலாயிற்று.

பத்திரிகைத் தொழிலும் பாரதி சேவையும்

தமிழ் நாட்டில் பழம் பெருமை வாய்ந்த "சுதேச மித்திரன்" பத்திரிகையை ஆரம்பித்து நடத்திவந்த தேசபக்தராகிய ஜி. சுப்பிரமணிய அய்யரவர்கள் தமது தளர்ந்த வயதை முன்னிட்டு, மித்திரன் பொறுப்பை ஏற்று நடத்துமாறு நமது இரங்கசாமி அய்யங்காரைக் கேட்டுக்கொண்டார். அவ் வழைப்பை உவப்புடன் ஏற்றுக்கொண்டு நமது அய்யங்கார் அவர்கள் "ஹிந்து"வை விட்டு நீங்கி, 1915-ம் ஆண்டில் "சுதேச மித்திரன்" காரியாலயத்தை வந்தடைந்தார். மித்திரன் முழுப் பொறுப்பையும் தாமே ஏற்று அப் பத்திரிகையைக் காலத்திற்கேற்பப் புதிய முறையில் மேன் மேலும் வளர்த்துவர முற்பட்டார். உலகில் தோன்றிய ஐரோப்பிய மகா யுத்தமும், அதன் காரணமாய் எங்கும் எழும்பிய சுதந்திர தாகமும் மித்திரனின் அபிவிருத்திக்கு அதிக உதவி யளித்தன. சுதேச பாஷையில் பத்திரிகையை, அதிலும் ஒரு பெரிய தினசரிப் பத்திரிகையை, ஆங்கிலப் பத்திரிகைகளுக் கிணையாக அன்றாடச் செய்திகளைப் பெற்று வெளிவருவ தென்பது எவ்வளவு கஷ்டமான காரியமென்பதைப் பத்திரிகைத் தொழிலில் சிறிது அனுபவம் படைத்த எவரும் நன்குணர்வர். அய்யங்காரவர்கள் உற்சாகமுடையவராய் "சுதேச மித்திர"னைத் தமிழ் நாட்டில் ஓர் ஒப்பற்ற சிறந்த பத்திரிகை யாக்குவதற்கான முயற்சிகள் செய்தார். அரசியல், பொருளாதாரம், விஞ்ஞான வளர்ச்சி, சமூக வியல், பாரத நாட்டின் பழம் பெருமை, நாகரீகம், கல்வி, விவசாயம். தொழில் முதலியவை களைப்பற்றித் தமிழில் எளிய நடையில்; தெளிவான முறையில் ஆராய்ந்து அவர் மித்திரனில் வெளியாக்கிய கட்டுரைகள் தமிழகத்தாருக்கு நவீன அறிவைக் கொடுத்து வரலாயின. மித்திரனுக்கு வாசகர்கள் ஏராளமாகப் பெருகினர். அதற்கேற்பப் பலவகை மக்களுக்கும் பயன்படும் முறையில் பல புதிய துறைகளைத் தாங்கி மித்திரன் வெளிவரலாகியது. பத்திரிகையின் உருவமும், உள்ளுரையும் ஒருங்கே பெருகலாயின. அவ்வாறு அய்யங்கார் பத்திரிகையின் நிலையை ஒருவாறு ஸ்திரப்படுத்தியவுடன், பத்திரிகைத் தொழிலுடன் வாளாயிருந்து விடாமல், நாட்டில் நடைபெற்றுவந்த பொதுஜன நன்மைக்கான இயக்கங்களிலும் பங்குபெற முற்பட்டார். இந்திய தேசீய (காங்கிரஸ்) மகா சபையினிடத்தில் ஆரம்பத்தினின்றும் அவருக்கு அபிமானம் அதிகம். எனவே, காங்கிரஸ் நிகழ்ச்சிகளில் அவ்வப்போது அவர் கலந்துகொண்டு வந்தார். அன்னி வசந்தம்மையாரால் தோற்றுவிக்கப்பட்ட ஹோம் ரூல் லீக்கின் காரியதரிசியாக அரிய வேலை செய்தார். இந்தியாவின் இராஜீய இயக்கங்களின் சக்தியை ஒருமுகப்படுத்துவதற்காக உழைத்து வரலானார். பொதுக் கூட்டங்களில் ஆங்கிலத்திலும், தமிழிலும்

உருக்கமாக உபந்நியாசங்கள் புரிவதில் வன்மை பெற்று விளங்கினார். பொதுஜனங்கள் எங்கும் இவரை மகிழ்ந்து குதூகலமாக வரவேற்றனர். 1919-ம் ஆண்டில் மாண்டேகு-செம்ஸ் போர்டு மசோதா ஆலோசனையி லிருந்தபோது அதற்குச் சாட்சியம் கூறுமாறு நமது அய்யங்கார் இங்கிலாந்துக்கு அழைக்கப்பட்டுச் சென்றார். அங்கு இந்திய தேசீய மகாசபையின் நோக்கங்களுக்கேற்ப இந்திய மக்களின் கோரிக்கைகளை ஆங்கில அதிகாரிகளுக்கு எடுத்துக் கூறித் திரும்பினார். ஒரு சுதேச பாஷைப் பத்திரிகையின் ஆசிரியராகிய அய்யங்கார் அவர்கள் வெகு விரைவில் அகில இந்தியத் தலைவர்களில் ஒருவராயினார். சென்னையிலுள்ள பல கல்வி ஸ்தாபனங்களில் அங்கம் வகித்துக் கல்வி யபிவிருத்தியிலும் கருத்தைச் செலுத்தினார்.

சுயராஜ்யக் கக்ஷியும் சட்டசபை யாகக்ஷியும்

தேசபந்து தாஸ், பண்டித மோதிலால் நேரு முதலியோரின் முயற்சியால் காங்கிரசின் அதிகாரத்தின் கீழ் சுயராஜ்யக் கட்சி காணப்பட்டபொழுது அதில் நமது அய்யங்கார் முதன்மையாக விருந்தார். அக் கட்சியின் வளர்ச்சிக்கு அரும்பாடு பட்டார். சென்னை மாகாணத்தினின்றும் இந்தியா சட்டசபைக்குச் சுயராஜ்யக் கட்சியின் சார்பாக 1923-ம் ஆண்டில் திருச்சி, தஞ்சை ஜில்லாக்களில் அபேக்ஷகராக நின்று மாஜி ஹைகோர்ட் ஜட்ஜ் ஒருவருடன் போட்டியிட்டுத் தேர்தலில் வெற்றியுற்றார். இந்தியா சட்டசபையில் சுயராஜ்யக் கட்சியின் காரியதரிசியாக விருந்தார். பண்டித மோதிலால் நேருவுக்கும், தேசபந்து தாசருக்கும் சுயராஜ்யக் கட்சி இயக்கத்தில் அய்யங்கார் வலது கையாக விருந்து வேலைசெய்து வந்தார். சட்டசபை விவாதங்களில் அய்யங்கார் பேசிய பேச்சுகள் ஒவ்வொன்றும் ஆணித்தரமாக விருந்தன. விஷயங்களைத் தக்க ஆதாரவுகளுடன் புள்ளி விவரங்களோடு எடுத்துக் காட்டி விவாதிக்கும் அய்யங்காரின் வாதத்தின் முன்னால் அரசாங்க அங்கத்தினர்கள் திக்பிரமை யடைவார்களாம். காங்கிரஸ் மகா சபையின் முழுப் பொறுப்பையும் சுயராஜ்யக் கட்சியே ஏற்று நடத்த ஆரம்பித்ததினின்றும் காங்கிரசின் பொதுக் காரியதரிசி வேலையை அய்யங்கார் ஒப்புக்கொண்டு சில வருடங்கள் காங்கிரசை ஒழுங்காக நடத்தி வந்தார். ஸி. ஆர். தாஸ் அவர்களை யுடன்கொண்டு தமிழ் நாடெங்குஞ் சுற்றிச் சுயராஜ்யக் கட்சிக்கு ஆக்கந் தேடினார்.

இந்தியாவின் முன்னேற்றத்திற்கு அடிப்படையாக விருந்துவரும் இந்திய விவசாயிகளிடத்தில் அய்யங்காருக்குச் சிறு வயதி

னின்றே அபிமானம் மிக அதிகம். இம் மாகாணத்தில் அமுலில் இருந்துவரும் நில வரி முறையானது விவசாயிகளுக்குப் பாதகமாக விருக்கிற தென்பதை யறிந்து, அதைத் திருத்துவிக்க வேண்டுமென்று அவர் செய்த முயற்சிகள் அநேகம். காலஞ்சென்ற திவான் பகதூர் இரகுநாத ராவ் முதலியவர்களோடு கூடி நிலச் சுவான்தாரர்களின் கஷ்டங்களைப் பரிகரிப்பதற்கான இயக்கத்தை நாட்டில் நடத்திவந்தார். மைசூர் ராஜ்யத்தில் கட்டப்பட்ட கண்ணம்பாடி அணையைப்பற்றிச் சென்னைத் துரைத்தனத்தார் மைசூர் துரைத்தனத்தாரோடு செய்துகொண்ட உடன்படிக்கையானது காவேரி நீர்ப்பாய்ச்சலின் ஆதரவையே நம்பியுள்ள திருச்சி, தஞ்சை ஆகிய ஜில்லாக்களின் விவசாயிகளைப் பாதிக்கக்கூடிய தென்பதை "ஹிந்து"ப் பத்திரிகையில் அய்யங்கார் சரியான தகவல்களோடு எழுதிய கட்டுரைகள் பலவும் பொதுஜனங்களையும், சென்னைத் துரைத்தன நிர்வாகஸ்தர்களையும் விழிப்படையுமாறு செய்தன. மாண்டேகு-செம்ஸ் போர்டு மசோதா விஷயமாய்ச் சாட்சியங் கூற அய்யங்கார் இங்கிலாந்துக்குச் சென்றிருந்தபோது, இந்தியா மந்திரியின் கவனத்திற்குக் கண்ணம்பாடி அணை விஷயத்தையுங் கொண்டுவந்து, சென்னை துரைத்தனத்தார் செய்த ஒப்பந்தத்தை மாற்ற வேண்டியதன் அவசியத்தை வற்புறுத்தினார். நில வரி முறையைப் பற்றியும் தமது கருத்துக்களை இங்கிலாந்து மக்களின் மனத்தில் நன்கு பதியச் செய்தார். அதன் பயனாகவே 1919-ம் ஆண்டில் பார்லிமெண்டுக் கூட்டுக் கமிட்டியார் தங்கள் அறிக்கையில் நில வரி முறையை இந்தியாவில் சட்டத்தின் மூலமாக நிர்ணயித்துவிட வேண்டுமென்று சிபார்சு செய்தனர். நில வரி நிர்ணய விஷயமாய் அய்யங்கார் செய்த முயற்சிகள் பலவாகும். மெஸ்டன் துரை மகனார் செய்த சிபார்சின் பயனாகச் சென்னை மாகாணம் இந்தியா கவர்ன்மெண்டுக்கு ஆண்டுதோறும் செலுத்திவந்த கப்பத் தொகை வஜா செய்யப்பட்டதும், அந்த லாபத்தை நில வரியைக் குறைக்கும் முகத்தால் செலவிட்டு இம் மாகாணத்திய விவசாயக் குடிகளுக்கு நன்மைபுரிய வேண்டுமென்று அய்யங்கார் வற்புறுத்தினார் 1927-ம் ஆண்டில் அது விஷயமாக அவர் 'மித்திர'னிலும், 'ஹிந்து'விலும் எழுதிய கட்டுரைகள் பல. பலவிடங்களில் நடைபெற்ற விவசாயிகளின் மகாநாடுகளில் தலைமை பூண்டு அய்யங்கார் ஆற்றிய சொற்பெருக்குகளைக் கவனித்துப் பார்க்குமிடத்து விவசாயிகளிடத்தில் அவருக்கிருந்த பேரபிமானம் நன்கு விளங்குகிறது. அவ்வாறு அவர் செய்துவந்த அரிய ஊழியத்தின் காரணமாக இந்தியா சட்டசபைக்கு இரண்டாம் முறை அவர் மீண்டும் போட்டியின்றி அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். எனினும் 1930-ம் ஆண்டில் காங்கிரசின் கட்டளைப்படி அப் பதவிக்கு இராஜினாமா செய்தார்.

"ஹிந்து" பத்திரிகாதிபத்தியமும் இங்கிலாந்துப் பிரயாணமும்

1928-ம் ஆண்டில் "சுதேச மித்திர"னைத் தாம் பழக்கிய தக்க ஆசிரியர்கள் கையில் ஒப்படைத்து, மீண்டும் ஆங்கிலப் பத்திரிகையாகிய "ஹிந்து"வுக்கு இரங்கசாமி அய்யங்கார் ஆசிரியராக வந்தமர வேண்டி நேர்ந்தது. கல்வியும், அனுபவமும் வாய்ந்த சிறந்த ஆசிரியர்களைக்கொண்டு மித்திரனை நடத்திவரச் செய்தபோதிலும், அதன் அதிகாரப் பொறுப்பை அய்யங்காரே பார்த்து வந்திருக்கின்றார். சுதேச மித்திரனுக்குப் பொன்விழா (கோல்டன் ஜூபிலி) நடத்திக் களிப்புறும் பாக்கியத்தையும் அய்யங்கார் சமீபத்தில் பெற்றார். மித்திரனைவிட்டு "ஹிந்து"ப் பத்திரிகையின் ஆசிரியப் பொறுப்பை ஏற்றதுமுதல் 'ஹிந்து'வை முன்னிலும் பன்மடங்கு சிறப்பாக நடத்தத் தொடங்கினார். இந்தியாவிலேயேயன்றி அயல் நாடுகளிலும் 'ஹிந்து'வுக்குப் பிரபலமான செல்வாக்கு ஏற்பட்டதென்றால் அஃது பொய்யாகாது. ஹிந்துப் பத்திரிகையின் வார அநுபந்தமொன்றைச் சிறப்பாகக் கலை வளர்ச்சிக்கெனச் சீரிய முறையில் வெளியிட்டு வந்தார். அய்யங்காரின் ஆங்கில நடையின் சிறப்பையும், கம்பீரத்தையும்பற்றி அயல் நாட்டுப் பத்திரிகைகளும், ஆங்கிலப் பிரமுகர்களும் இன்று புகழ்ந்து கூறுகிறார்கள்.

காந்தியடிகளாரின் காங்கிரஸ் பகிஷ்காரத் திட்டங்களில் அய்யங்காருக்கு விருப்பமில்லாமற் போயினும் காங்கிரஸ் ஆணைக்குக் கட்டுப்பட்டுத் தம் அளவில் அத் திட்டங்களை அனுஷ்டித்தே வந்தார். மகாத்மாஜியிடத்தில் அய்யங்காருக்குப் பெரு மதிப்புண்டு. ஆங்கில துரைத்தனத்தார் இந்திய அரசியலைப்பற்றி விசாரணை புரிவதற்காக வேண்டி நியமித்த சைமன் கமிஷனில், வெள்ளையர்களையன்றி இந்தியரை நியமிக்காமல் விட்டதை முன்னிட்டு, அக் கமிஷனை இந்தியர்கள் பகிஷ்கரிக்க வேண்டுமென்று முதலில் கூறிய இந்தியத் தலைவர்களில் அய்யங்காரும் ஒருவர். காந்தியடிகளாருக்கும், இர்வின் பிரபுவுக்கும் நடைபெற்ற சமாதான உடன்படிக்கையின்படி இங்கிலாந்தில் நடந்த வட்டமேஜை மகாநாட்டுக்குக் காங்கிரஸ் செல்லுவதென்ற முடிவேற்பட்டதன் பின்னர், துரைத்தனத்தாரின் அழைப்புக்கிணங்கி நமது அய்யங்கார் இரண்டாவது வட்டமேஜை மகாநாட்டுக்குப் பிரதிநிதியாக இங்கிலாந்துக்குச் சென்றார். மகாத்மா காந்தியடிகளாரும் காங்கிரசின் சார்பாக அம் மகா நாட்டுக்கு விஜயம் செய்திருந்தாராதலால், அங்கு மகாத்மாவின் இராஜீயக் காரியதரிசியாகவிருந்து அய்யங்கார் வெகுதூரம் உதவிபுரிந்தார். அடுத்த முறை மூன்றாவது தடவையாகக் கூடிய வட்டமேஜை மகாநாட்டுக்கு, காந்

திஜி முதலியோர் பாதுகாப்பில் வைக்கப்பட்டதை முன்னிட்டுத் தாம் பிரதிநிதியாகச் செல்ல அய்யங்கார் விரும்பவில்லை. ஆயினும், கூட்டுக் கமிட்டியாரின் தலைவரின் தனியழைப்புக்கிணங்கி மீண்டும் இங்கிலாந்து சென்று, இந்திய தேசீயக் கட்சியின் விருப்பங்களை எடுத்துக் கூறுவதற்கு வாய்த்த அச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டார். ஸர் தேஜ் பகதூர் சாப்ரு, ஜயகர் முதலிய பல தலைவர்களுடன் கூடி, இந்தியரின் முடிவான லக்ஷியமாக அக் கமிட்டிக்கு ஒரு விண்ணப்பத்தைக் கொடுப்பதற்கு அய்யங்கார் செய்த முயற்சி புகழ்தற்குரியதாகும். அவ் விண்ணப்பத்தில் இந்தியத் தலைவர்கள் முடிவான மிகக் குறைந்த லக்ஷியங்களாகக் குறிப்பிட்ட உரிமைகளையாவது அரசாங்கத்தார் இந்தியாவுக்குக் கொடுக்கத் தவறுவார்களாயின், வேறு எத்தகைச் சீர்திருத்தங்களும் இந்தியரை மகிழ்விக்கா தென்பதை அய்யங்கார் வெகு அழகாகவும், நியாயமாகவும் "ஹிந்து"ப் பத்திரிகையில் எடுத்துக் கூறியுள்ளமைக் கவனிக்கத் தக்கதாகும். இம் மாதத்தில் இந்தியா சட்டசபையில் ஷ்டி விண்ணப்பத்தை வலியுறுத்தும் வகையில் ஒரு தீர்மானம் செய்விப்பதற்கான முயற்சிகள் நடைபெறுவதைக் காணுமிடத்து அவ் விண்ணப்பத்தின் உயர்வும், அவசியமும் இத்தகையதென்பதை உணரலாம். இத்தகைய பெருமைகள் வாய்ந்த ஏ. இரங்கசாமி அய்யங்கார் அவர்கள் சின்னாட்கள் தேக அசௌக்கியமுற் றிருந்ததன் காரணமாய், தமது அருமை மனைவியாரையும், ஒரு புதல்வரையும், இரு புதல்விகளையும், தமது சகோதரரையும் வருந்தவிட்டுத் தமது **57**-வது வயதில், **1934**-ம் ஆண்டு பிப்ரவரிமீ **4**-ம் தேதி இரவு **1-45** மணிக்கு மைலாப்பூரிலுள்ள தமது மாளிகையில் பூதவுடலை நீத்துப் புகழுடம்பைத் தாங்கினார். பத்திரிகையுலகம் ஓர் உயர்ந்த பத்திராசிரியரை இழந்தது. இந்திய அரசியல் உலகம் ஓர் அறிவாளியைப் போக்கடித்துக்கொண்டது. பாரதத் தாய் ஓர் அரிய புத்திரனைப் பறிகொடுத்தாள். என் செய்வது! அய்யங்காரின் ஆன்மா சாந்தியடையுமாக. ஓம்: சாந்தி: சாந்தி: சாந்தி.

ஸ்ரீமான் சோமசுந்தர பாரதியாரவர்கள்

ரா. நாராயணஸ்வாமி, ஆசிரியர், "பாரதி."

பேராசிரியர் S. சோமசுந்தர பாரதியார், M. A., B. L. அவர்களைப் பற்றித் தமிழகம் நன்கறியும். எனினும் சுருக்கமாக இங்கு கூறுவது அவஸியமாக இருக்கிறது. திருவாளர். பாரதியார் திருநெல்வேலி ஜில்லா வாசி. கவிச் சக்கிரவர்த்தி சுப்ரமண்ய பாரதியாருடன் எட்டையாபுரத்தில் கல்வி பயின்றவர். அவருடன் நெருங்கிய நண்பர். ஆனதுபற்றி பாரதியாரது திருப்பாடல்களுக்கு முன்னுரையாக அவர், கவி பாரதியாரது சரித்திரத்தை எழுதி உதவியிருக்கிறார். எம். ஏ. பட்டம் பெற்று ஆங்கிலத்தில் சிறந்து விளங்குவதைப் போன்றே தமிழ் ஆழ்ந்து பயின்று தமிழ் மொழியிலும் வல்லுநராய் மிளிர்கிறார். நாவன்மையுடன் கைவன்மையிலும் மிக்கார். தமிழ்ப் பிரசங்கம் புரியக் கற்கும் மாணவர்கள் இவரது இனிய பிரசங்கங்களைக் கேட்டுப் பழக வேண்டும்; தமிழன்பர்கள் இவரது ஆராய்ச்சிகளை இவரது வாயிலாகச் செவி மடுக்க வேண்டும்; இந்தியக் குயில் சரோஜினி தேவியார் ஆங்கிலத்தில் பிரசங்கம் செய்யும் பொழுது பாரதியாரது தமிழ் மொழிபெயர்ப்பைப் பொதுஜனங்கள் கேட்க வேண்டும்; ஆனந்திக்க வேண்டும்.

இவர் பாஷாபிமானிமட்டு மல்ல; உயர்ந்த தேசாபிமானி. நியாயவாதித் தொழிலைத் தூத்துக்குடியிலும், மதுரையிலும் திறம்பட நடத்தி வந்தவர். தூத்துக்குடி ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனியில் பெரிதும் உழைத்தவர். தமிழ் நாட்டில் பலப்பல மகாநாடுகளிலும் சபைகளிலும் அநேக அரிய பெரிய பிரசங்கங்கள் செய்தவர்.

தமிழர்கள் இவரை ஏற்றவாறு ஊக்கி யிருப்பின் என்றே இவர் தனது சட்டப் புஸ்தகங்களைத் தூக்கி எறிந்து விட்டுத் தமிழ்க் கடலில் ஆழ்ந்து நம்மவர்களின் தமிழ்த் தாகத்திற்கு தமிழமிர்தப் பானம் கொடுத்துக்கொண்டே வந்திருப்பார். கவி ரவீந்திரர் ஏற்படுத்தியிருக்கும் சாந்தி நிகேதனம் என்னும் விஸ்வ பாரதிக்குத் தமிழர் ஏராளமாய்ப் பொருளுதவி செய்திருப்பின், தமிழுக்காகவும், தமிழர் கலைகளுக்காகவும் ஒரு பீடம் அங்கு ஏற்படுத்தப்பட்டிருக்கும். அந்த பீடத்திற்குப் பேராசிரியராய் இவரே சென்றிருப்பார். இவரைத் தவிர்த்து வேறு யார் அதற்குத் தகுதி?

சில மாதங்களுக்கு முன்னர் அண்ணாமலை சர்வகலாசாலை ஸ்தாபகர் செட்டி நாட்டு ராஜா கனம் ஸர். அண்ணாமலை செட்டியாரவர்கள்

ஆராய்ச்சி மேடை.

திருக்குறள் மூலமும் உரையும்

பதிப்பாளர்:—த. குப்புசாமி முதலியார்.

பிரசுரர்:—தமிழ் நூற் பதிப்பகம், காஞ்சிபுரம்.

விலை அணு 8,

ஒரு நாட்டின் பொதுமக்களிடையே கல்வியையும், அறிவையும் பரப்புவதற்குரிய பல வழிகளில், அந் நாட்டு மொழியிலுள்ள சிறந்த

இவரது கல்வியின் ஆற்றலையும், ஆராய்ச்சியையும், ஆழத்தையும் கேட்டறிந்து, வக்கீல் பாரதியாரவர்களைத் தனது சர்வகலாசாலையின் தமிழ் இலாகாவிற்குத் தலைமை ஸ்தானம் வகிக்குமாறு கேட்டுக் கொண்டார். அபார மொழிப்பற்றால் மதுரையம்பதியில் மாதம் 1-க்கு ரூ. 1000-க்கு மேற்பட்ட தனது தொழில் வருமானத்தையும், பசுமலையில் தனது விஸ்தாரமான சுகமான வாசஸ்தானத்தையும் விட்டு விட்டு, சிதம்பரம் அண்ணாமலை சர்வகலாசாலையில் தமிழ்த் தலைமைப் பேராசிரியர் பதவிக்கு மாதம் 1-க்கு ரூ. 500 சம்பளத்தில் ஒப்புக்கொண்ட இவரைப் போற்றுகிறோம். இவரது தியாகம் பெரிது பெரிது. இவர் இப் பதவிக்குச் சென்றதால், இவருக்கு மதிப்பில்லை. ஆனால் இவரால் அண்ணாமலை சர்வகலாசாலைக்குப் பெரும் பெருமை ஏற்பட்டதென்றே சொல்லல் வேண்டும்.

இவருக்குத் தக்கபடி தமிழகம் ஊக்கம் அளித்திருப்பின், இவரது பேனா முனையிலிருந்து அநேக உயர் நூற்கள் வெளிவந்திருக்கும். இவருக்குப் பட்டம் கொடுத்த சென்னை சர்வகலாசாலையார் இவரது ஆழ்ந்த கல்வியை மதித்து இவருக்கு மகா பண்டித பட்டங்கள் (D. Lit., Ph. D.) கொடுத்திருக்க வேண்டும். இதில் சென்னை சர்வ கலாசாலையார் தவறிவிட்டார்கள். சென்னை சர்வகலாசாலை கௌரவ பட்டங்கள் வழங்குவதில் மிக மிகக் கஞ்சத்தனமாயிருக்கிறது ஏனோ? இனியேனும் சென்னை சர்வகலாசாலையார் இவரது கல்வியைக் கௌரவிக்கும் பொருட்டு இவருக்குப் பட்டங்களுக்கு மேல் பட்டங்கள் கொடுப்பார்களாக! இவரைக் கனப்படுத்துவது தமிழ் அன்னையைக் கனப்படுத்துவதாகு மென்று சொல்லத் தேவை யில்லை. தமிழ் மாது இவருக்கு வெற்றிக்கு மேல் வெற்றி கொடுப்பாளாக! சோமசுந்தர பாரதியார் வாழ்க! வாழ்க!! நெடுங் காலம் வாழ்க!!!

இலக்கியங்களைத் திருத்தமாகப் பதிப்பித்துக் குறைந்த விலைக்குக் கிடைக்கும்படி செய்வதும் ஒன்றாகும். நம் நாட்டு மக்களில் பெரும்பாலோர் வறுமைப் பிணியால் பீடிக்கப்பட்டுக் கிடத்தலின் அவர்கள் நூல்களை அதிக விலை கொடுத்து வாங்கிப் படிக்க இயலாமற் போகின்றது. சிறந்த நூல்களை அடக்க விலைப் பதிப்புகளாகப் பதிப்பித்துப் பொருள் வருவாய் ஒன்று மட்டுமே கருதாது, பிறர் நலத்தையும், நாட்டு முன்னேற்றத்தையும் உடன்கருதி வெளியிடுவோர் தம் மொழிக்கும், நாட்டுக்கும் சிறந்த தொண்டு செய்தோராவர்.

இப்படிப்பட்ட ஒரு சிறந்த தொண்டு காஞ்சிபுரம் தமிழ் நூற் பதிப்பகத்துரிமையாளர் திருவாளர். குப்புசாமி முதலியாரவர்களால் செய்யப்பட்டுள்ளது. தமிழ் நாடு செய்த தவப் பயனாய் அவதரித்து, தமிழ் நாடு மட்டுமன்றி உலகம் முழுவதும் உய்யும் வண்ணம் பொது மறை வகுத்த திருவள்ளுவ தேவரது "திருக்குறள்," சாதி, சமய, கால, இட, நிற வேறுபாடுகளைக் களைந்து அனைவரும் ஏற்றுக்கொண்டு கையாளுவதற்குரிய ஒழுக்க முறைகளை அமைத்திருப்பது யாவரு மறிந்ததே. இச் சீரிய நூல் பொதுவாக எல்லோரும், சிறப்பாகத் தமிழரும் போற்றிப் படித்துப் பயன் பெறுதற்குரிய தொன்றாதலின், இதனை மிகவும் குறைந்த விலையில் பதிப்பித்து, ஏழைகளும் வாங்கிப் பயனடையும்படி செய்துள்ள முதலியாரவர்களது மொழிப் பற்றும், பிறர் நலம் பேணலும் மிகமிகப் போற்றற்பாலன. புத்தகம் நல்ல கடிதத்தில் அழகிய எழுத்துக்களால் பிழைகளின்றி ஆக்கப்பட்டிருக்கிறது.

பரிமேலழகர், மணக்குடவர் முதலியோருடைய உரைகள் மிகவும் உயர்ந்த நடையில் அமைந்திருப்பதால், அவற்றின்கண் நிலவும் நயங்களனைத்தும் துய்க்கக் கூடியவர் இலக்கிய இலக்கணங்களை நன்கு கற்றுணர்ந்தோராகிய சிலரே. ஆதலால் மற்றோரும் குறளைப் படித்து நன்கு உணரவேண்டும் என்ற அவாவினால் உந்தப்பட்டு, இவ்வுரையை மிகவும் எளிய இனிய நடையில், வாலாஜாபத் இந்து மத பாடசாலைத் தலைமையாசிரியராகிய திருவாளர். கி. வீரராகவன் அவர்கள் எழுதியுள்ளார்கள். அவர் கூறுகிறபடி நூற் கருத்துக்குப் பொருத்தமில்லாது பரிமேலழகர் வலிந்து பொருள்கொண்ட சில பல இடங்களில் பொருந்தும்படி திரு. வீரராகவன் அவர்கள் புதிய உரை வகுத்திருப்பது கவனிக்கத் தக்கது.

மிகவும் சுருங்கிய காலத்தில் இரண்டு பதிப்புக்கள் வெளிவந்து பதினாயிரம் பிரதிகள் வரையில் செலவாகியிருப்ப தொன்றே இந் நூலின் பெருமையை விளக்கப் போகிய சான்றாம். இந் நூல் பொதுவாக எல்லாத் துறைகளிலுமுள்ள தமிழரனைவருக்கும் பெரிதும் பயன்படும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. இதைத் தமிழ் மக்

கள் ஆதரித்து, இதைப்போன்ற ஏனைய சிறந்த தமிழ் இலக்கியங்களையும் இம் முறையில் பொது மக்களுக்குக் குறைந்த விலையில் கிடைக்கும்படி செய்ய, பதிப்பாசிரியரை ஊக்குவார்கள் என்று நம்புகிறேன்.

ஆறுமுக முதலியார், B.A.

மிருகங்களின் அருங் குணங்கள்.

ஆசிரியர்:—பி. நவநீதம் நாயுடு.

வெளியிட்டவர்:—கே. டி. தேவராஜலு நாயுடு கம்பெனி.
261, சைனு பஜார் ரோடு, சென்னை.

நூல்——கிரவுன் $\frac{1}{8}$ அளவில் சுமார் 50 பக்கங்கள் கொண்டது.

விலை அணா 4.

முகவுரையில் ஆசிரியர் கூறுகிறபடி தமிழ் நாட்டில் (ஏன்? நம் நாட்டிலேயே!) ஆரம்ப பாடசாலைகளில் கல்வி கற்கும் சிறுவர் சிறுமிகள் படிக்கும் பாடப் புத்தகங்களில், பெரும்பாலும் இயற்கைக்கு மாறான முறையில் 'ஓநாயும் ஆட்டுக்குட்டியும்' பேசியதுபோன்ற கதைகளே மிகுந்து காணப்படுகின்றன. அவற்றைப் படித்த குழந்தைகள், மிருகங்கள் ஒன்றுக்கொன்று பேசுவதில்லையென்ற உண்மையை யுணர்ந்தவுடனே, அக் கதைகளை யலக்ஷியம் செய்வதோடு, அவற்று லறிந்த கருத்துக்களையும் மறந்துவிடுகின்றனர். பகுத்தறிவின் முக்கியத்தைப்பற்றிப் பேசப்படும் இக் காலத்தில், பழைய முறைகள் நீக்கப்பட்டு, இயற்கைக்கு ஒத்த முறையில் கதைகள் அமைத் தெழுதப்பட வேண்டு மென்பதை அறிவாளிகள் ஒப்புக்கொள்ளுவர். அம் முறையில் இதனாசிரியர் மிருகங்கள், பட்சிகள் முதலியவற்றைப்பற்றி இயல்பாக நடக்கக்கூடிய முறையில் சுமார் 22 கதைகளை, எளிய தமிழ் நடையில், சிறு சிறு வாக்கியங்களாக எழுதி, நல்ல கடிதத்தில், பெரிய எழுத்துக்களில், படங்கள் சிலவுஞ் சேர்த்துப் பதிப்பித்திருக்கிறார். இக் கதைகளிலும் இரண்டொன்று எழுதப்பட்டுள்ள முறையில் அசம்பவமாகக் காணப்படினும் ஆசிரியரின் இம் முதல் முயற்சியைப் பாராட்டுகிறோம். இஃது ஆரம்பப் பாடசாலைகளில் துணை வாசகமாக வைக்கத்தக்க தென்பதி லையமில்லை. எனவே "டெக்ஸ்ட் புக்" சங்கத்தார் இதனை அங்கீகரித்துப் பாடசாலைகளுக்குப் பயன்படுத்துவார்களென எதிர்பார்க்கின்றோம்.

N. V.

நாலிரு நவீனக் களஞ்சியம்.

இரண்டு பாகங்கள்.

ஆசிரியர்:—"கலைமகள்."

வெளியிட்டவர்.—தமிழ் நூற் பதிப்புக் கழகம், காஞ்சீபுரம்.

நூல்:—கிரவுன் $\frac{1}{8}$ அளவில் ஒவ்வொரு பாகமும் சுமார்
180 பக்கங்கள் கொண்டது.

விலை பாகம் 1-க்கு ரூ. 0—10—0.

இவ் விரண்டு பாகங்களிலும் பாகம் ஒன்றுக்கு நான்கு கதைகள் வீதம் எட்டுக் கதைகள் நவீன முறையில் எழுதப்பட்டிருக்கின்றன. ஆபாசமான முறையில் எழுதப்பட்ட நாவல்கள் பல மலிந்துவரும் இக் காலத்தில், இந் நவீனக் கதைகள் ஒவ்வொன்றும் சில அனுபவ நீதிகளைப் புகட்டும் பான்மையில், நல்ல தமிழ் நடையில் எழுதப்பட்டிருப்பது போற்றத் தக்கதாகும். கதைகள் சிறியனவா யிருப்பினும் கதைகளின் அமைப்பும், கருத்துக்களும், வர்ணனைகளும் சுவை தருகின்றன. கதா பாத்திரங்களின் சம்பாஷணைகளில் ஒருவர்க்கொருவர் பேசும் வார்த்தைகள் இரண்டு பக்கங்களுக்கு மேற்பட்ட உபந்நியாசங்களாக விருத்தல் இயல்புக்கு மாறானதாகும். இரண்டோரிடங்களில் இக் குறை காணப்படுகிறது. அவற்றைத் துண்டித்துச் சிறு சம்பாஷணைகளாக வமைத்தல் நலமாகும். இவற்றை எழுதியவர் "கலைமகள்" என்ற (புனை?) பெயர் பூண்ட பெண்பாலென வறிந்து மகிழ்கின்றோம். இதனை வெளியிட்டு வாசகர்களுக்கு எட்டச் செய்த காஞ்சிபுரம், தமிழ் பதிப்புக் கழகத்தார் செய்துவரும் தமிழ்த் தொண்டு தமிழ் மக்களால் பாராட்டப்பட வேண்டும். வாசகர்கள் இக் கதைகளைப் படித்துக் களிப்புறுவார்களாக.

N V.

மாதர் சுதந்தரம்
அல்லது
பெண் மக்கள் பெருமை.

ஆசிரியர்:—சாமி. சிதம்பரனார்.

கிடைக்குமிடம்.—"குடி அரசு புத்தகசாலை," ஈரோடு.

ஆசிரியக் குறிப்புகள்.

பீஹாரில் பூகம்பம்

காடும் மலையும் கடலகமும் மனிதனால் சிருஷ்டிக்க முடியாது. ஆனால் இயற்கையின் கோபத்தால் நிலவுலகின் இயற்கை முற்றிலும் கெட்டுவிடும். பீஹார் பூகம்பமே இதற்குச் சாட்சி. பீஹார்வாசிகளுக்கு அடிக்கடி வெள்ளத்தால் ஆபத்து ஏற்பட்டுக்கொண் டிருக்கிறது. சென்ற முறையும் அப்படியே. 2, 3 வருடங்களாக விளைச்சல் சேதமாகிவிட்டது. "பட்ட காலிலே படும்; கெட்ட குடியே கெடும்" என்ற பழமொழிக்கு பீஹார் இலக்கா யிருக்கிறது. ஜனவரி 15-ம்௳யில் இந்தியாவில் பூமி ஆடினது. ஆனால் பீஹாரில் அதிகம். இதனால் எத்தனையோ பெரிய கட்டிடங்கள் இடிந்து விழுந்தன. ஆயிரக் கணக்கானவர்கள் பூமியில் புதைந்தனர். முஜாபர்பூர், மாங்கீர்,

நூல்:—கிரவுன் $\frac{1}{8}$ அளவில் நல்ல தாளில் 132 பக்கங்கள் கொண்டுள்ளது.

விலை ரூ. 0—10—0.

ஆசிரியர் தோழர் சாமி. சிதம்பரனார் அவர்கள் பகுத்தறிவு இயக்கத்தின் சார்பில் நாட்டின் முற்போக்கிற்கு உழைத்து வருபவராகும். தற்கால நிலையில் இந்தியப் பெண்கள் உலகம் இருந்துவரும் அடிமை வாழ்க்கையினின்றும் விடுவிக்க வேண்டுமென்று கருதும் அன்னார், இந் நூலின் முகத்தால், நம் நாட்டு மாதர்கள் அடையவேண்டிய முற்போக்கிற்கான முறைகள் பலவற்றைச் சுமார் 14 கட்டுரைகளில் எழுதியிருக்கின்றார். பெண்களின் கற்பு, வலிமை, கல்வி, மணம், சொத்துரிமை, சீர்திருத்தம் என்பனவற்றைப்பற்றி எடுத்துரைக்கப் பட்ட கருத்துக்கள் இக் கால நிலைக்கேற்ப ஆடவர் பெண்டிர் ஆகிய இருபாலாரு மறியத் தக்கனவாகும். பழமை விரும்பிகளாகிய வைதிகர்களுக்கு இரண்டொரு கருத்துக்கள் முரணாகத் தோன்றலாம்; எனினும் அவைகளை வாலிப உலகம் இன்று உவந்து ஏற்றுக்கொள்ளக் கூடியதேயாம். எனவே ஜனசமூக நன்மையை நாடும் ஒவ்வொருவரும் இதனைப் படித்தல் நலமெனக் கூறுகிறோம். இதில் மலிந்து காணப் படும் அச்சுப் பிழைகள் மறுபதிப்பில் நீக்கப்படவேண்டுவ தவசியம்.

N. V.

பாட்னா, தர்பங்கா, ஜமால்பூர் முதலியபட்டினங்களும் சுற்றுப் பிரதேசங்களும் பாழடைந்து விட்டன. பயிர் பச்சைகள் பாழாய்ப் போயின. சர்க்கரை ஆலைகள் நாசமாய்ப் போயின. வயல்கள் மணலடித்து மேடாய்க் கிடக்கின்றன. கிணறுகள் குளங்குட்டைகள் தூர்ந்து விட்டன. ரோட்டுகள் வெடித்துக் கிடக்கின்றன. மேடுகள் பாழுங் குழிகளாகவும் குழிகள் பெரும் மேடுகளாகவும் மாறி விட்டன. சுமார் 1 லட்சம் ஏக்கர் கரும்புப் பயிர் நாசமாய்விட்டது. குடி தண்ணீர்ப் பஞ்சம் உண்டாகி யிருக்கிறது. பூமி வரண்டு பாழ்பட்டு விட்டது. உடுக்க உடையின்றி, உண்ண உணவின்றி, உறங்க உறைவிடமின்றி எத்தனையோ லட்சக் கணக்கான ஜனங்கள் தவித்துக்கொண்டிருக்கிறார்கள். குடிக்கப் பாலின்றி பல ஆயிரக் கணக்கான குழந்தைகள் அழுதுகொண் டிருக்கின்றன. வறுமையாலும், பிணியாலும், பசியாலும் பீஹார் துடி துடித்துக்கொண்டிருக்கிறது. அச் சேதமடைந்த பிரதேசத்து ஜனங்களின் ஒரு நாள் சாப்பாட்டுக்கு மட்டும் 25 லட்சம் ரூபாயாகுமென்று ஒருவர் கூறுகிறார்.

வருடந்தோறும் ஏறக்குறைய 1000 சிறிய பூகம்பங்கள் உலகில் உண்டாகின்றன. ஆனால் 1923-ம்௵ ஜப்பானில் உண்டான பூகம்பமே மிகப் பெரிதாகும். 1693-ம்௵ சிசிலியிலும், 1908-ம்௵ மெசினாவாலும் பெரிய பூகம்பம் உண்டானது. பீஹாரில் பூகம்பத்தால் உண்டான உயிர்ச் சேதமும் பொருட் சேதமும் போன்று பூர்வ, மத்திய அல்லது தற்கால இந்தியாவின் சரித்திரத்தில் கிடையவே கிடையாது. நேபாளத்திலும் 3000 உயிர்களுக்கு மேலாகச் சேதம். அங்கு தலைமை நகரம் காட்மாண்டு உட்பட மூன்று பட்டினங்களும் சேதமடைந்தன. இதனால் பெரும் பஞ்சம் ஏற்படக்கூடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

நமது சக்கிரவர்த்தியா ரவர்கள் பீஹார் வாசிகளுக்கு ஒரு அனுதாபச் செய்தியுடன் 150 பவுன் உதவி அனுப்பினார்கள். வைஸ்ராய் லார்டு வில்லிங்டன் அவர்கள் 5000 ரூபாய் உதவி அளித்ததுடன் பீஹார் கஷ்ட நிவாரண நிதி சேர்த்துக்கொண் டிருக்கிறார். பாபு ராஜேந்திரப் பிரசாத் அவர்களும் பீஹாருக்கு நிதி சேர்த்துக்கொண்டு வருகிறார். 1923-ம் ஆண்டில் ஜப்பானில் பிர்மாண்டமான பூகம்பம் உண்டானபொழுது, அத் தேசவாசிகள் எவ்வளவோ தாராளமாய் உதவி செய்தார்கள். அப்பொழுது அதற்கு ஜப்பான் சக்கிரவர்த்தியவர்கள் ஒரு கோடி என் (1 என் = ரூ. 1–8–0) தனது சொந்தத்திலிருந்து கொடுத்தார்கள். ஜப்பான் சர்க்கார் தனது பொக்கிஷத்திலிருந்து 30,780,000 என் உதவி செய்தது.

பீஹார் வாசிகள் நமது சகோதரர்கள். அவர்கள் படும் பாட்டை நினைத்தால் நெஞ்சம் உடைகிறது; கண்ணீர் வடிகிறது. அனாதை

களாகிவிட்ட அவர்கள் மறுபடியும் வாழ்க்கை தொடங்க வேண்டுமானல், நாம் தகுந்தபடி உதவி செய்தாகவேண்டும். தவித்துக்கொண் டிருக்கும் பீஹார் வாசிகள் கடவுளையும் உங்களையும் எதிர்பார்க்கிறார்கள். உதவி செய்யுங்கள்! உங்களால் அனுப்பப்பெறும் ஒவ்வொரு பைசாவும் அவர்களுக்கு மிகுந்த உதவியாயிருக்கும்.

ஆசிரியர் ரங்கசாமி அய்யங்கார் மறைவு

ஆ! **5—2—1934**-ல் ஹிந்துப் பத்திரிகையின் ஆசிரியரான ஸ்ரீமான் ஏ. ரங்கசாமி அய்யங்காரவர்கள் காலங் கடந்து விட்டார்கள் என்று கேட்க அகில இந்தியாவும் வருந்துகிறது. "ஹிந்து" என்னும் ஆங்கில தினசரிப் பத்திரிகையை இந்தியாவில் உயர்தரத்தில் நடத்தி, பெரும் புகழ் பெற்று, அத் தொழிலில் சித்தி பெற்றவர். தேச பக்தர் G. சுப்ரமண்ய அய்யரவர்களுக்குப் பிறகு "சுதேச மித்திரன்" என்ற தமிழ் தினசரிப் பத்திரிகையின் நிர்வாகத்தை ஏற்று இத் தாய்ப்பாஷைப் பத்திரிகை மூலமாய்ப் பாமர ஜனங்களுக்குத் தேச பக்தி புகட்டியதைத் தமிழகம் என்றும் மறவாது. "சுதேச மித்திரன்" பத்திரிகையை ஆங்கிலப் பத்திரிகைக்கு நிகராகவே நடத்தி வந்தார். "சுதேச மித்திரன்" இற்றை நாள் வளர்ச்சிக்கு இவரே காரணமாகும்.

பெரிய தேச பக்தர். சிறந்த காங்கிரஸ் வாதி. "இந்திய அரசியல் தத்துவ சாஸ்திரம் (Indian Constitution) என்ற அவரது நூல் பலரால் போற்றப் பெற்றது. காங்கிரஸ் சுயராஜ்ய கட்சியில் அவர் ஆற்றிய தொண்டு சிறந்தது. இந்திய சட்டசபையில் அங்கத்தினராயிருந்து அவர் தேசத்திற்குச் செய்த சேவை சிலாக்கியக் கூடியது. மாண்ட்போர்டு மசோதாவைப் பரிசீலனை செய்த பார்லிமெண்டுக் கூட்டுக் கமிட்டி முன் சாட்சியம் கொடுக்க 1919-ஆம் லண்டன் சென்றார். இரண்டாவது சர்வகட்சி மகாநாட்டுக்கு சர்க்கார் அழைப்பின் மீது லண்டன் போனார் அப்பொழுது காந்தி அடிகளுக்கு அரசியல் காரியதரிசியாகவும் உழைத்தார். விவசாயிகளுக்கும், மாதர்களுக்கும் பொது ஜனங்களுக்கும் இன்னும் ஒவ்வொரு நல்ல இயக்கத்திற்கும் சிரத்தையுடனும் ஊக்கத்துடனும் தனது பத்திரிகைகள் மூலமாக அரிய சேவை செய்திருக்கிறார்.

இவர் மூலம் இந்திய மாதா ஒரு அரிய பெரிய பத்திராதிபரை இழந்து தவிக்கிறாள். இவர் ஆத்மா சாந்தி அடைவதாக!

பொறுப்பாசிரியர் ரா. சுப்ரமண்யம் அவர்களால்,
சுமந்து உத்தமபாளையம் ஆனந்தா பிரசில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

197897

மாதப் பத்திரிகையை யறியாதார் யார்? அப் பத்திரிகையை மெச்சாத அறிஞர்கள் எவர்? அவ்வித உயரிய பத்திரிகை நம் தமிழ் நாட்டில் எங்கேனும் உண்டா? சென்ற நூற்றாண்டில் நடந்துவந்த "ஜன விநோதினி" முதலியவைபோன்ற தமிழ் மாசிகைகள் தற்போதுண்டா? அவையும் மேற்கூறிய ஆங்கில மாதப் பத்திரிகைக்கு ஒப்பாகாதெனப் பலர் இயம்புகின்றனர். பல மாதங்கட்கு முன்பு "சாரதா" என்னும் தெலுங்கு மாதப் பத்திரிகை "மாடென் ரெவியூ" அளவில் தோன்றி, அதையே பின்பற்றி விளங்கியது. ஆயினும், சில மாதங்களில் அஃது நின்றுவிட்டது. இப்போது அந் நாட்டில் நடைபெறுகிற "பாரதி," "கிருஹ லக்ஷ்மி" என்னும் பத்திரிகைகளும் அதே "மாடென் ரெவியூ"வை ஞாபகமூட்டிக்கொண்டு விளங்குகின்றன. ஆனல் தமிழ் நாட்டிற்கு அவ்வாறாய தமிழ் மாசிகை அத்தியாவசியமல்லவா? நம் தமிழர்களின் கலைகள் வளர்ந்து நாட்டிற் புகழடைய வேண்டாமா? நம் தமிழர்களும் அவ்வாறாய அறிவாற்றல் படைத்தவர்களே யென்பது உலகத்திற்குத் தெரியவேண்டாமா? நம் தமிழ் நாட்டின் இயற்கை, செயற்கை வனப்புகளைப் பற்றிப் பிறர் மெச்சவேண்டாமா? தமிழ் நாட்டிற்கு அவ்வித ஒப்புயர்வற்ற பத்திரிகை யில்லையென்ற குறை நீங்கவேண்டாமா? இவ்வாறாவதற்கு வாசகர்களே! உங்களுடைய ஒப்பற்ற ஆதரவும், ஊக்கமும், தூண்டுதலும் அத்தியாவசியமல்லவா? "பாரதி" மேலே கூறப்பட்ட விதமாகச் சிறந்து விளங்கவேண்டுமென்று நீங்கள் ஒருமிக்க ஆதரவு காட்டினல், அஃது ஆகாமலிருக்க ஏதுவுண்டா? ஆகவே சகோதர வாசகர்களே! இன்றே நமது பாரதியைச் சிறப்பிக்கத் தகுந்த உதவியும், ஆதரவுமளித்து, அதன் ஆசிரியரை உற்சாகப் படுத்துங்கள். வாசகர்கள் படுத்தும் உற்சாகத்தால்தான் ஆசிரியர் விரைந்து பத்திரிகையை ஓங்கச்செய்ய இயலும். ஆகவே தமிழ் நாட்டின் பெருமையைக் காட்ட, தமிழ் நாட்டின் சிறப்பை விளக்க, தமிழ் நாட்டின் நாகரீகத்தைப் பொலிவுறச் செய்ய, தமிழ் நாட்டுச் சிற்பிகளையும், ஆராய்ச்சியாளரையும் நாட்டிற்கு நன்கு அறிமுகப் படுத்த மேற்கூறிய விதமாகப் "பாரதி" ஒப்புயர்வற்றுத் திகழ இன்றே முனைந்து ஒன்றுபட்டு ஆசிரியருக்கு ஊக்கமளித்து, ஆக்கம் பெருக்கி, "பாரதி"யை பாரதியாகவே ஆக்க முற்படவேண்டுமாய் வேண்டிக்கொள்ளுகிறேன்.

இந்த சமயத்தில் ஆசிரியருக்கும் சில விஷயங்கள் சொல்ல விரும்புகிறேன். மேற்கூறிய விதமாகப் பத்திரிகையை அளவிலும்,

---

தமிழர் முன்னே தன் முயற்சியால் சுதந்திரமாய் உண்டனர், உடுத்தினர், பாடினர், பேசினர், வளர்ந்தனர், மகிழ்ந்தனர். இப்போது?

பக்கங்களிலும் உயர்த்திச் சிறப்புறச் செய்வதில் சிறிது கஷ்ட நஷ்டங்கள் ஏற்பட்டபோதிலும், அவற்றைப் பொருட்படுத்தாமல் சந்தாத் தொகையை இரண்டிலிருந்து 5 அல்லது 6 ரூபாயாக்கித் தமிழ் நாட்டில் தலைசிறந்த பத்திரிகை யில்லையென்ற குறையை நிவர்த்தி செய்யுமாறு கோருகிறேன். மேலே குறிப்பிட்ட தெலுங்கு 'பாரதி' நல்ல கிளேஸ் கடிதத்தில் மிகுந்த பக்கங்கள் கொண்டு "மாடென் ரெவியூ" அளவில் ஆறு ரூபாய் சந்தாவுக்கு நடைபெற்று வருகின்றது. ஆனால் திரு. K. நாகேசுவர ராவ் அவர்கள் "ஆந்திர பத்திரிகா" என்னும் பிரசித்தமான தேசீய தினப் பத்திரிகையைப் பல வருஷங்களாக நிர்வகித்து வருகிறபடியாலும், அவருடைய அரும் பெரும் முயற்சிகளெல்லாம் அந்தத் தினப் பத்திரிகையைச் சார்ந்திருக்கிறபடியாலும் அதில் கிடைக்கும் பெரிய லாபத்தைக்கொண்டு "பாரதி"யை 6 ரூபாய் சந்தாவுக்கு நடத்திவருகிறார். ஆனால் தமிழ்ப் "பாரதி"யும் ஏராளமான சந்தாதார்களைக் கொண்டு நிலவுமாயின், இதுவும் அதைப்போலவே கம்பீரமான தோற்றத்தோடு நாம் குறிப்பிட்ட சந்தாவுக்கே வந்துலவுமாறு செய்யலாம்.

ஆகவே இது விஷயமாக வாசகர்களுக்குப் பத்திரிகைப் பார்த்தவுடன் ஒரு புத்துணர்ச்சி யுண்டாகுமாறு அளவில் பெருக்கி, அவர்களுடைய மனத்தைக் கவரத்தக்க ஏற்பாடு செய்யுமாறு "பாரதி" ஆசிரியரைக் கேட்டுக்கொள்ளுகிறேன். "பாரதி" புதிய உருவத்தில் சிறந்த கட்டுரைகளுடனும், பற்பல படங்களுடனும் பெரிய பத்திரிகையாக வெளிவரும்படி செய்யுமாறு "பாரதி"க்கு உயர்ந்த சந்தாக் கொடுத்து உதவி, ஆசிரியரை உற்சாகிக்குமாறு "பாரதி"யின் வாசகர்களை வேண்டிக்கொள்ளுகிறேன்.

கீழ் குறிப்பிட்டவர்களிடம்
நமது பத்திரிகையும் பிரசுரங்களும் கிடைக்கும்.

K. N. Sankaran Pillai,
No. 281, 2nd Division, Maradana,
COLOMBO.

N. P. Ramaswamy Esq.,
PALLATUR, P. O.,
(Ramnad Dt.,)

தமிழறிவும், தொழிற் பெருக்கமுமே தமிழ் நாட்டின் தேவை.

ராவ் பகதூர்
பி. சுந்தரம் பிள்ளையவர்கள், எம்.ஏ.

திரு. M. S. பூரணலிங்கம் பிள்ளை அவர்கள், B.A., L.T.

முன்னுரை

முப்பத்தைந் தாண்டுகளின் முன்னர் திருவனந்தபுரம் மாராயர் கல்லூரியில் தத்துவஞான போதகாசிரியராக விருந்து, ஆங்கிலம், தமிழ் இரண்டு மொழிகளிலும் புலமை வாய்ந்து, தொன்மை ஆயும் பகுதியில் தலைமையுற்று, உரை, பா பலவியற்றி, அரசியலாரிடம் நன்மதிப்புப் பட்டமெய்திப் பெரும்பெயர் பெற்று விளங்கிய பெரியார் ராவ் பகதூர் சுந்தரம் பிள்ளையவர்கள். இறைவனருள் பெறற்குரியர் இளமையி லிறப்பர் என்ற முதுமொழிக்கிணங்க, இப் பெருந்தகையார் இகந்துறந்துப் பரம் போயபோது அவருக்கு வயது நாற்பத்திரண்டேயாம். அவர் கொல்லமாண்டு 1030 பங்குனி 28-ல் பிறந்து, 1072 சித்திரை 14-ல் சிவபதமடைந்தனர். அவர் மகன் நடராஜ பிள்ளை யென்பவர். அவர் அன்னையீட்டிய பெரும்பொருளுக்கு அதிபதியாயிருந்து வாழ்ந்து வருகின்றனர். மகனறிவு தந்தை யறிவென்பதற்கு இலக்காயிருப்பின் நலம்.

பிறப்பு

கொடுமலையாளக் குடியிருப் புடையேன் என்று தாம் பிறந்த விடத்தை மனோன்மணி யாசிரியர் சுட்டியுளார். சேர நாடுகளிலொன்றாகிய குட்ட நாட்டின் தலைசிறந்த வாணிபத் துறையாகிய ஆலப்புழை யென்னுமூரே பிள்ளையவர்களின் பிறப்பிடம். தந்தை பெயர் பெருமாள் பிள்ளை. பண வாணிபமே அவர் தொழில். பழம் பதியாகிய பாண்டி நாட்டின் கண்ணிருந்து வாணிபங் கருதி, ஆலப்புழை, கொச்சிக்குச் சென்ற பல குடும்பங்களில் பெருமாள் பிள்ளையின் குடும்பமுஞ் சேர்ந்திருக்கலாம். நாஞ்ச நாடு, நாஞ்சில் நாடு,

---

நந் தமிழ் நாடு இன்று தன் மானத்தைக் காக்சப் பல்லாயிரம் மைல்களுக்கப்பாலுள்ள ஒரு சிறு தீவை நோக்கி யிருப்பது வெட்கம்! வெட்கம்!

நன்செய் நாடு என்ற திரிபுப் பெயரால் வழங்கிவரும் நாட்டிலுள்ள வேளாண் குலத்தைச் சார்ந்தவர் அவரென்று யூகிக்கப்படுகின்றது. நன்செய் நாடு ஒழுக்கம் ஆசாரத்திற் பாண்டிநாட்டை ஒத்துளதென்று மனோன்மணி நாடகங் கூறுகின்றது.

கல்வி

சிறுவயதிலேயே இளஞ் சுந்தரம் திருவனந்தபுரத்தில் கல்வி பயில வந்தனரென்று எண்ண விடமுளது. ஏனெனில் திருவனந்தைக் கல்லூரியில் எனது மைத்துனர் காலஞ்சென்ற ஏ. சி. சுப்பிரமணிய பிள்ளை, ராஸ்-ஆர்வியிடம் கலை பயின்ற காலத்தில், அவர் இளஞ் சுந்தரத்திற்கு ஆங்கிலக் கல்வியைத் தொடங்கிக் கொடுத்தனரென்று உலகஞ் சொல்லுவதுடன் இருவரு மென்னிடங் கூறியுள்ளர். சென்னையில் மில்லர், கூப்பர் என்ற இரு பெரும் வித்தகர்களும் முறையே ஆண்மை சிறந்த ஆட்சியிலும், விழுமிய வொழுக்கத்திலும் புகழ் பெற்றிருந்தாங்கு திருவனந்தையில் ராஸ்—ஆர்வி யென்பார் மிகுந்த மதிப்பும் மேன்மையும் பெற்றிருந்தனர். இருதரத்தாரின் மாணவரும் இருதலை நகரிலும் பல்லாயிரவரெனில் மிகையாகாது. அத்தகைய ஆசிரியரின் அடிகிடந்து ஆங்கிலக் கல்வியில் அதிகத் திறமெய்தி 1876-ல் பி.ஏ. பட்டம் பெற்றனர்.

முயற்சி

பின்னர் சுந்தரர் திருநெல்வேலிச் சீமைக்கு வந்து ஆண்டுள்ள ஏ. வி. ஸ்கூலுக்குத் தலைமை பூண்டனர். அவர் தலைமைபுரிந்த 1879—80 ஆகிய ஈராண்டளவில் ஏ. வி. ஸ்கூல் இந்துக் காலேஜாயிற்று. கல்லூரியின் முதலாண்டு கழியு முன்னர் சுந்தரர் தத்துவதர்க்க நூலில் எம்.ஏ. பரீட்சையில் தேறினர். திருநெல்வேலி என்ற சாலிபுரத்தில் வதிந்திருந்த ஈராண்டளவில் கல்லூருக்கடுத்த கோடகநல்லூரிலிருந்த திருவாய்ந்த பெயர்பெற்ற வேதாந்தி சுந்தர சுவாமிகளிடம் நம் சுந்தரருக்குப் பழக்கமுண்டாயிற்று. அன்னாரிடம் வேதாந்த வுண்மைகளைக் கற்றுச் சுந்தரரும் வேதாந்தியாயினர். நெல்லையம்பலத்தில் வடக்கு ரத வீதியில் இரட்டை வீடொன்றில் அவர் குடியிருந்தபொழுது யான் அவரை நேரிற் காண நேர்ந்தது. அப்பொழுது யான் பகுத்தறிவு பெறாத காலமாயினும், அன்று தொட்டு அவர்மீது எனக்கு ஆர்வமுண்டாயிற்று. என்னுடைய தந்தைக்கு இளைய சோதரி மகளின் மணாளனுக்கு மணம் நிகழ்ந்த

அயல் நாட்டு வாலிபர்களின் வீரத்தை நோக்குங்கள். இப்பொழுதாவது உங்களுக்கு வீரம் எழும்பவில்லையா? மூடப் பழக்க வழக்கங்களை ஒழியுங்கள்; அடிமையை நசுக்குங்கள்!

ஞான்று, ஏறுநெற்றியெங்கும் பூதியணிந்து உடற்சுமை சுமந்து மண ஆசி கூறியபோது, அவரை மறுமுறை கண்டனன். மறுநாள் அவரும் மணமகனும் ஞானம் பேசினபோதுங் கூடவிருந்தனன். அதன்பின் யான் திருவனந்தைக்குச் சென்ற காலங்களிலெல்லாம் அவரைக் கண்டுபேசாமல் வந்ததில்லை. 1897-ல் அவர் திடீரென்று காலஞ் சென்றபொழுது அவருடைய பதவிக்குத் தக்கவன் யானென்று சென்னையிலிருந்த மில்லர்—கூப்பர், சத்தியநாதர் ஆதிய பெரியார் ரெசிடெண்டுக்கும், கல்லூரித் தலைவருக்குங் கடிதம் விடுத்தனர். சிறிது காலத்தில் அப் பதவியே எடுபட்டுப் போமென்று அத் தருணம் மாராயர் கல்லூரித் தலைவர் மிச்சலென்ற மேனாட்டு அருங்கலை நிபுணர் சென்னையில் சத்தியநாதருக்குப் பதிலளித்தவாறு அது எடுபட்டுப் போயினமையால், என் முயற்சி நிறைவேறாமற் போயிற்று.

முயற்சி—சிரஸ்ததார்

1883-ல் திவான் இராமய்யங்கார் ஆட்சியில் மாராயர் கல்லூரியில் ஆசானாகவிருந்த நம் சுந்தரர் பிறவகை சிரஸ்ததாராக நியமனம் பெற்றனர். அப்பொழுது கல்லூரித் தலைவர் ராஸ் அவ்வாண்டு நிறைவறிக்கையில் சுந்தரரைப்பற்றிப் பின்வருமாறு வரைந்தனர். "சுந்தரம் பிள்ளை எனது துணையாசிரியர்களில் அதிக உபயோகமும் திறமையு முடையவர்களி லொருவர். அவர் கல்லூரியை விட்டுப் போவதைக்குறித்து வருத்தமுறுகிறேன்." இதனை அந் நாட்டு மன்னரும் ஆமோதித்ததுமன்றித் தம் மநுபவமு மஃதே என்றனர். திவானாயிருந்து திரும்பிய கனம் சேஷய சாஸ்திரிகளும் "சுந்தரர் திருவாங்கூரிலுள்ள மிகப் பிரபலமான மக்களி லொருவர்" என்றனர்.

சிறிது காலம் அவ் வாட்சிப் பதவியிலிருந்து மீளவும் கல்லூரிக்கே ஏகினர். நீரிழிவால் பிளவை நோய் கண்டு திடீரென்று மரணமாகும்வரை அவர் ஆசிரியராயிருந்து, நயவுரையோடு அரும்பொருள் பல அநேக மாணவருக்கு அருத்தி வந்தனர். அம் மாணவர்களிற் பலர் அரிய பல பதவிகளி லமைந்தனர்.

நூல்கள்

தொன்மை யாராய்ச்சிப் பகுதிக்குத் தலைமை பூண்ட நம் சுந்தரர் 'திருவாங்கூர் முதல் மன்னர்களின்' வரலாறுகளை வரைந்து விளக்

இளைஞர்களே எல்லாம் உங்கள் கையில் இருக்கிறது. எல்லாவற்றையும் தலைவர்களிடம் ஒப்புவித்துவிட்டு கைகட்டி உட்கார்ந்திருக்கும் காலம் போய்விட்டது.

கினர். 1891-ல் மனோன்மணீய மென்ற அருமையான நாடகம் ஆங்கில நாடக முறையில் அவரால் அமைக்கப் பெற்றது. அதன் சில பாகங்களை ஆக்கியோரே கிறிஸ்தவ கலாசாலை மாதப் பத்திரிகையில் மொழிபெயர்த்து வெளிப்படுத்தினர். அதே பத்திரிகையில் 1892 செப்டம்பர் மாதத்தில் அவ் வரிய நாடக நூலின் நயங்களை இராஜம் ஐயர் என்ற கலை வல்லார் எடுத்தோதினர். டாக்டர் ஜி. யூ. போப்பையரும் சீமையினின்று வெளிப்பட்ட 'இந்தியன் மாகசின் அண்டு ரெவியூ' என்ற பத்திரிகையில் அந் நாடகத்தை வியந்துளர். 1896-ல் அந் நாடகத்தின் ஒரு பகுதி எப்.ஏ. பரீட்சைக்குப் பாடமாக அமைக்கப் பெற்றது. ஆசிரியரின் மாணவர்களில் திறமைவாய்ந்து, பின்னர் நீதிபதியாயிருந்து இக் காலம் உபகாரச் சம்பளம் பெற்று வாழும் கெ. ஜி. சேஷய்யரும் மனோன்மணி நாடகச் சிறப்பைப்பற்றி விரிவுரை வரைந்து விதந்தோதினர். நாடகம் வெளிவந்த வாண்டில் சென்னைப் பல்கலைக் கழகம் சொல்லேருழவராம் சுந்தரரைச் சகாவாக (எப். எம். யூ.) ஏற்றுக்கொண்டது. அவ்வமயம் திவான் சங்கர சுப்பய்யர் 'உம்முடைய உயர்ந்த கல்வித் திறமும், கல்வி விஷயத்தில் உமக்குள்ள மிகுந்த பற்றும், உம் உயரிய வொழுக்கமும் இந்தப் பட்டத்தை நீர் பெறுவதற்கு உமக்கு உரிமையளித்தன. இங்ஙனம் உமக்குக் கண்யமளித்தவர்கட்குக் கண்யமாகுக' என்று ஆசி வரைந்தனுப்பினர். அம் மாதிரியாகவே டாக்டர் என். சுப்பிரமணிய ஐயர், எம்.ஏ., எம்.பி.சி.எம் என்பவரும் எழுதினர். அதில் 'நாள்தோறுஞ் செய்யும் வேலையில் தாங்கள் காட்டிய தங்களது கல்வி, ஆச்சரியப்படத்தக்க சாதுரியம், இவற்றின் ஆழம், அகற்சியை உள்ளவாறே மதிக்கவல்லுனர் உம் மாணவர்களாகிய நாங்களேயாம். சாரமற்ற சரித்திரச் செய்திகளையும், மூலதத்துவ நுட்பங்களையும் எங்கள் கூர்மையில்லாத மனதுகளில் தாங்கள் வெகு எளிதாகப் பதியச் செய்துவித்த திறனையும் நான் இன்றும் நன்றாக நினைவிற்குக் கொண்டுவரக் கூடு'மென்ற வாக்கியங்கள் கவனிக்கற்பாலன.

நாடகக் கதை

மனோன்மணி, பாண்டிய வரசன் சீவகன் மகள். அவள் சேர மன்னன் புருடோத்தமன் மீது விதிவலியால் கனவிற் காதலுற்றனள். வழுதி மந்திரி குடிலன். அவன் அவ் வரச கன்னிகையைத் தன் மகன் பலதேவனுக்கு மணமகளாக்கவும், அதனால் பாண்டிய வரசாட்சியைக் கைப்பற்றவும் நினைத்துப் பல சூட்சிகள் செய்தனன். மதுரையை விட்டகன்று நெல்லையம்பதியில் வழுதி வாழுமாறு ஆங்கு

தாயின் மணிக்கொடியை நாட்டிப் போற்றி அதை உயிர் போகும் வரையிலும் காப்பாற்றுங்கள்.

அரண்மனையொன்று அமைக்கச் செய்தனன். பாண்டியனுக்கு உண்மைத் துணைவர் அவன் குலகுரு சுந்தர முனிவர். ஆயினும் அமைச்சனது புன்சொல்லே அரசனுக்கு ஏற்றதாயிருந்தது. புருடோத்தமன் 'நீரும் வேப்பந்தாரும்' கொடுத்தனுப்புகவென்று வழுதி மன்னனுக்குத் தூதனுப்பியது வெற்றிபற்றியதன்று; மணமகளை மணத்தற் பொருட்டேயாம். முனிவர் தாம் எவருமறியாமற் சமைத்துவைத்த சுருங்கை மணமகன் மணமகளுக்கு நன்மையையும், குடிலனுக்குக் கேட்டையும் விளைத்தது. சேர மன்னனது நுட்பமான அறிவால் குடிகேடு நடத்திய குடிலனது நினைப்பனைத்தும் பாண்டிய வரசனுக்கு வெளிப்படையாயிற்று. மந்திரி கைதியாக்கப் பெற்றான். போர் நின்றது. மணம் நிகழ்ந்தது. உண்மை யுணர்ந்த பாண்டியன் மணமக்கட்கு ஆசி கூறினன். மனோன்மணியின் தோழி வாணி யென்பாள் அவளுடைய காதலன் நடராசனை வதுவை செய்தனள். அனைவரும் மன மகிழ்ந்தனர்.

நூல் நயம்

இந் நாடக நூலில் விளங்கும் நயங்கள் பல. திருவாசகமும், தேவாரமும், திருக்குறளுமே ஆசிரியருக் கருமையான நூல்களாகத் தோன்றுகின்றன. நாலடியாரும், ஒழிவிலொடுக்கமும், கைவல்ய நவநீதமும், நீதிநெறி விளக்கமும் பற்பல விடங்களிற் றிகழ்கின்றன. 'தென்பாண்டி நாடே சிவலோக மாமென முன்வாதவூரர் மொழிந்தனர்'–I-i. 46–7. 'எற்றுண்டகன்று பற்றொன்றின்றி'–II-ii. 148. 'பிறவிப் பௌவம்'–II-iii. 68. 'ஏனைவகை தேறியக் கண்ணும் வினைவகை கோடியமாந்தர் கோடியின் மேலாம்,' 'எதற்குந் திருக்குறள் இடந்தரும்'–II-i. 279–81. 'தினைத்துணை...... பனைத்துணை'–III-i. 110-111. 'மயிரினை யிழக்கினுமாயுமே கவரிமா'–IV-iii. 50. 'நாணுற்பாவை யுயிர் மருட்டுதல்போல்'–IV-vii. 271. 'நறுநெயுறு குடத்தெறும்பு நண்ணலென'–(பா. 24). 'அடல் பெரியர், அருளுவர்'–(பா. 32) (சிவகாமி சரிதை). 'பெரும்போரிலா நாள் பிறவா நாளே'–VI-iii. 168. 'வஞ்சி நாடதனில் நன்செய் நாடெனச் செந்தமிழ் வழங்குந் தேயமொன் றுளது. அத னந்தமில்பெருவள மறியார் யாரே'–II-i. 75-7. 'நீயாள் வஞ்சிநா டதற்குத் தென்கீழ் வாய்ந்த நன்செய் நாடென்றொரு நாடொன் றுளதே—எங்கட் கந்நா டுரித்தாம். அங்கு பரவு பாடையும் விரவுமாசாரமும் நோக்கில் வேறு சாக்கியம் வேண்டா'–II-iii. 75–9. 'நிஷ்டாபரர், கருணாகரர்'–IV-iv-ல் நிகழ்த்துஞ் சொற்பொழிவு வேதாந்தமுங் கைவல்ய

இருளில் கட்சிச் சண்டைகள் எழுப்பிக்கொண் டிருக்கிறோம். வறுமையில் தவித்துக்கொண் டிருக்கிறோம்.

மூமேயாம். 'நீர்மே லெழுத்து,' 'பொன்மலர் நாற்றம்' என்பன நீதிநெறி விளக்கமாகும். இந் நாடகத்தில் மிளிரும் பழமொழிகள் பல. 'மணற்சோற்றிற் கற்றேடுதல் மானும்'–I-iii. 46. 'கைதொடின் மஞ்சளுங் கரியாகும்மே'–III-ii. 131. 'இருதலைக் கொள்ளியி லெறும்பானேனே'–IV-iii. 47. 'கிழவிபேச் சேற்குமோ கின்னரக் காரிக்கு'–V.ii. 9.

இவையன்றி இவ் வாசிரியர் 'அறிவுநூன் முன்னுரை' என்ற இயற்பொருள் விளக்க நூலை இயற்றியவராதலின் மனோன்மணீயத்தில் இயற்பொருள் வழங்கியிருத்தல் வியக்கற்பாற்றே. 'நாங்கூழ், சேவல், தீக்குருவி, முதலை, தேள், கொசு' ஆதியன, நாடகத்தில் நல்லுவமைப் பொருளில் விளங்கும்: தேள்–IV-v. 190. முதலை–IV-v. 125. தீக்குருவி–IV-5. 14–17. சேவல்–II-ii. 12–6, கிளி–I-iv. 12–7 இவை சிலவாம்.

பேராசிரியர் இரங்கநாத முதலியார், எம்.ஏ. அவர்கள் இந்நாடகத்தைப்பற்றி எழுதிய மதிப்புரையாவது: மேனாட்டு மாதிரியில் இத்தகைய நாடகத்தை யாக்கித் தமிழிலக்கியத்திற் களித்தனர் சுந்தரம் பிள்ளை. அன்றியும் நாடக யாப்பினுக்கு அனுசரித்து வந்த தொன்முறையை யொழித்துத் துணிந்து புதுமுறையில் நூலியற்றினர். தமிழினது அருமையுந் தொன்மையும் இளமையும் சிறக்க வாக்கிய தமிழ்த் தெய்வ வணக்க மென்பதை மனப்பாடம் பண்ணாத தமிழ் மாணவரு முளரோ?

தமிழ்பற்றிய ஆங்கில வுரைகள்

மேலும் தமிழ்த் தொன்மை இலக்கியம்பற்றி அவர் ஆங்கிலத்தில் வரைந்துள்ள வுரைகள் பல. அவர் பத்துப் பாட்டி னருமை பெருமைகளை ஆங்கிலம் கற்றாரனைவருக்கும் தெளிவாக எடுத் துரைத்தனர். அன்றியும் ஞானசம்பந்தருடைய கால நிர்ணயத்தைக் குறித்துத் தொன்மை வரலாறுகளை ஆராயும் வெங்கய்யா அவர்களும் மனதார வியந்தோதினர். அன்னாருடைய ஆங்கில நடை பெருமை வாய்ந்த தென்பதை எவருமொப்புக்கொள்வர். 'தமிழகச் சரிதத்தை எழுத முயலுவோன் கோதாவரி, காவிரி, குமரி யாறுகள் பாய்ந்தோடுந் தேயங்களின் வரலாறுகளைத் தமிழிலக்கியங்கள் மூலமாகத்தான் அறியலா' மென்ற வுண்மையை முதன்முதலில் முரசறைவித்தவர் சூழ்ச்சிமிக்க சுந்தரரே. இராமாயணத்தின் உண்மைப் பொருளை எவருமறியும் வண்ணம் வெளிப்படுத்தியவரும் அவரேயாவர். அவ

. பசி பசி யென்று அல்லும் பகலும் கூவிக்கொண் டிருக்கிறோமே? இதற்குச் சரியான பரிகாரம் கிடைக்கவில்லை.

ருடைய வன்சொற்கள் ஆங்கில ஆசிரியர் சுவிப்ட், ஸ்டீல் அவர்களின் சொற்களினுஞ் சுடுமென்பர். அவர் இன் சொற்களோ டிக்கன்ஸ், தாக்கரே அவர்களின் நயவுரைகளினும் நயப்புடைத்தாமெனக் கழறுவர் பலர். தமிழ் மொழியில் அவர் ஆக்கிய கட்டுரைகள் மிகச் சிலவே.

பட்டங்கள்

அவருடைய ஆங்கில வுரைகளையும் தமிழ் மொழியில் அவரியற்றிய மனோன்மணீயத்தையும் பார்த்த அறிவாளிகளின் மதிப்புரைகளைக் கண்ணுற்ற ஆட்சியியலாரும் அவற்றின் சிறப்பினை வியந்து 1896-ல் 'ராவ் பகதூர்' பட்டமளித்தனர். அந்தோ அப் பட்டந் தாங்க அதிக நாளிருந்திலர். முன்னரே எப். எம். யூ., எம். ஆர். ஏ. எஸ்., யப். ஆர். எச். எஸ். பட்டங்கள் கிடைத்திருந்தன.

பொன்றாப் புகழ்

இவர் இறந்த பின் இவருடைய ஞாபகச் சின்னமாக 'சுந்தர விலாசம் ஸ்கூல்' ஒன்று ஏற்படுத்தப்பெற்று நடந்துவந்ததைச் சரிவரச் செவ்வனே நடத்துமாறு 1086-ம் வருஷம் கன்னித்திங்கள் 29-ல் திருவாங்கூர் சமஸ்தானம் ஏற்றுக்கொண்டது களிக்கத்தக்கதே. எஞ் சுந்தரரை என்றும் மறவாமைக்கு மனோன்மணீயம் ஒன்றே போதுமாயினும் மேற்கூறிய ஆங்கிலவுரை நூல்கள் யாவும் அன்னாருக் கேற்பட்ட பல துறைப் புகழையும் விவரித்து விளக்கும்.

பின்னுரை

இதுகாறுங் கூறியவற்றால் நூல்கள் பல தமிழ் மொழியி லியற்றாவிடினும் பிள்ளையவர்க ளாக்கிய நூல்க ளனைத்தும் மணிகளென விளங்கும். ஒவ்வொன்றும் ஒரு புது வழிகாட்டியாகும். துங்கன் சுந்தரரின் பெருமையையும், புலமையையும், ஆற்றலையும் போற்றாத் தமிழன் தமிழக மிரானென்பது திண்ணம்.

"அரியவற் றுளெல்லாம் அரிதே, பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்." —குறள்.

நமது சிறுமையும் பொறாமையும், வழக்கும் வேற்றுமையும் நமது அடிமைச் சங்கிலியை இறுக்கிவிட்டன.

பெண் கல்வி.

பண்டித திரு. A. ராஜகோட்டியப்பன் அவர்கள்.

'பெண் கல்வி' என்ற சொற்றொடர், ஆராய்ந்து பார்ப்பவர்க்கு விளையாட்டு வார்த்தையாகவும், அர்த்தமற்றதாகவும் புலப்படும். பெண் கல்வி என்று ஒன்று உளதாயின், ஆண் கல்வி என்றும் இருத்தல் அவசியமாகும். ஆனால் 'ஆண் கல்வி' என்று குறிப்பிட்டுப் பேசுவதை எங்கும் கேட்டதில்லையே! 'கல்வி' என்ற கருத்தனத்திற்கு உண்மையில் ஆண், பெண் என்ற பால் வேற்றுமையும் உளதோ? 'மனிதர்க்கும்—மற்றைய விலங்கு முதலிய உயிர்ப் பிராணிகளுக்கும் வித்தியாசம் உண்டு' என்பது எங்ஙனம் கணிக்கப்படுகிறது? 'பகுத்தறிவு' என்ற ஒன்றை வைத்தேயல்லவா? இப் பகுத்தறிவை வளரச் செய்வதே கல்வி! ஆண்—பெண் இரு பாலாரும் மனித வர்க்கத்தினரே! பகுத்தறிவு, ஆடவர்க்குப் போலவே பெண்டிர்க்கும் இருக்க வேண்டியதாகும்; வளரச் செய்ய வேண்டியதுமாகும். இது பற்றியே பண்டைக் காலத்தில் நம் நாட்டில் இவ் வேற்றுமையான பாகுபாடின்றியே இரு பாலாரும் கல்வி நலம் துய்த்து வந்தனர். அக் கல்வி நலத்தைப் பெண்டிரும் நுகர்ந்ததனாலேயே, நம் நாட்டுப் பெண்மணிகளிற் பலர் நல்லிசைப் புலமை மெல்லியராக விளங்கினர்; பலர் கற்பின் அருங்கலனாகத் திகழ்ந்தனர். பலர் வீரப் பெண்மணிகளாய்ப் போர்க்கோலம் பூண்டு, முனையின் முன்னணியில் நின்று வாகை புனைந்தனர்; மந்திரக் கிழவருக்கும் மதி மந்திரிகளாய் இலங்கினர்; முடிசூடி இராஜ்ய பரிபாலனமும் புரிந்தனர். கல்வி, ஆடவர்க்கே உரிமையுடையதென்று சில நூற்றாண்டுகட்கு முன்வரையில் நம் நாட்டில் வழங்கியதில்லை. ஆதலால் பெண் கல்வி என்ற சொற்றொடர், கல்வியானது ஆடவர்க்கே உரியதென்றும், பெண்டிர் அதனைக் கைக்கொள்ள அருகதையற்றவர் என்றும் செப்பேட்டில் தீட்டிக் காட்டியது போலத் துலங்குகின்றது. வேதப் பனுவல்களிற் பலவற்றைப் பெண்கள் பாடியுள்ளனர்! சங்க நூல்களிற் சிலவற்றிற்குக் காக்கை பாடினியாரும், காவற்

நம் நாடு அடிமையானதும், நமது மனதும் பல தீமைகளுக்கு அடிமையாகியது.

பெண்டும் இன்னோன்ன வித்தகப் பெண்ணரசிகள் ஆசிரியைகளாகத் திகழ்ந்ததும் பொய்யாய்ப் பழங்கதையாய்ப் போயினவே! ஐயோ!!

'கல்வி' என்ற பதம், வடமொழியில் இலக்கண முறைப்படி பெண்பாலாக வழங்கப் பெறும். அதைக் கொண்டு 'கல்வியே கற்புடைப் பெண்டிர்' எனத் தமிழ்ப் புலவரொருவரும் கூறிப் போந்தனர். இன்னும் தமிழ் நீதி நூல்களில் பெண்களும் கல்விக்கு உரியரென்பதற்குக் கணக்கில்லாத ஆதாரங்கள் காணப்படும். ஆயின் அக் கல்வி சுயநலப் புலிகளாகிய ஆடவர்க்கே உரியதென்பதற்கு இம்மியும் சான்று கிடையாது. ஆகவே இப்பொழுது இவ் வுண்மைக் கட்சி ஏட்டுச் சுரைக்காயாக மாறிவிட்டது.

மேல் நாடுகளில் ஆடவரும் பெண்டிரும் சரி நிகர் சமானமாக உலவுகின்றனர். வேற்றுமையின்றிக் கலந்து கல்வி பயில்கின்றனர்; வித்தியாசமின்றி உழைக்கின்றனர்; உத்தியோகமும் வகிக்கின்றனர்; ஊதியமும் பெறுகின்றனர்; சமூக வாழ்க்கையில் பெருந் தொண்டாற்றுகின்றனர்; சரிநிகர் சமானமாக ஆண், பெண் இரு பாலாரும் சுக வாழ்வு வாழ்கின்றனர். ஆதலாலே அந் நாடுகள் நாகரீகமுடையன வென்று கருதப்படுகின்றன; அவைகளே உலக விவகாரங்களிற் போட்டி போடுகின்றன; முயற்சியின் பலனை அநுபவிக்கின்றன; செல்வக் களஞ்சியங்களாக ஜ்வலிக்கின்றன! நம் நாட்டிலே மாதர், தந்நயம் ஒன்றையே கருதும் ஆடவருக்கு உடல் உயிராதிய வெலாம் உவந்தளிக்கும் அடிமைகள்! இளமையில் அப் பெண்டிர் பெற்றோருக்கு அடங்கியவராம்! வாலிபத்தில் மணாளரது கையிலகப்பட்ட சூத்திரப் பாவைகளாம்! முதுமையில் மைந்தரது கையை எதிர்பார்க்கும் கபோதிகளாம்! பெண்டிர்க்கு ஒரு காலத்திலும் சுயேச்சையென்பதில்லை. ஐயோ! நம் ஆட்வர் அவர்களை உணர்ச்சியற்ற பிண்டங்களாகச் செய்து விட்டனர். அவர்கள் வாயிலாப் பூச்சிகள்; வெறும் பிள்ளை பெறும் இயந்திரங்கள்; இரவும் பகலும் ஆடவர் கையிலகப்பட்ட பட்டி மாடுகள்; அடுக்களையாகிய பஞ்சரத்தில் அடைபட்ட பைங்கிளிகள்; பொன் விலங்கு பூட்டப் பெற்ற குற்றவாளிகள்! கொடுமை! கொடுமை!

ஆயின் ஆடவரே! இனி நும் தந்திரங்கள் பலிக்கா; எத்துணைக் காலம் அவர்களை நீங்கள் அங்ஙனம் வைத்திருக்க முடியும்? அவர்கள் விழித்துக்கொண்டனர்! ஆதலால் நீங்கள் அவர்களை நயமாக வேண்டிக்கொள்ளுங்கள்; நீங்களும் அவர்களது நிலைமைக்கு இரங்குவ

தொட்டில் முதல் கட்டை வரையில் தொத்தில் வாழும் நமது இருள் நிலை பரிதாபம்! பரிதாபம்!

தாகக் கூறிக்கொண்டு மாதர் சுதந்திரத்திற்காகப் பாடுபடுவதாக வெளியேறுங்கள். கோஷா முறையைக் கொண்டாடிய பார்ஸீ மாதர் தம் முக்காட்டைப் பிய்த்துக்கொண்டு வெளியேறிவிட்டனர்! பெண் கொடுமை மலிந்த ஜப்பானிய நாட்டிலும் ஸ்திரீகள் பூர்ண விடுதலையடைந்து வருகின்றனர். அவர்கள் உணர்ச்சி பெற்று ஊதும் சங்கநாதம் நம் மாதரது காதுகளிற் கேட்கின்றன. அவர்களுடைய வெற்றி முழக்கம் நமது பெண்டிரைத் தட்டி யெழுப்புகின்றன. நம் மாதரும் தமது சிறைச்சாலைகளின் கதவுகளை உடைக்கின்றனர். புருஷ சிங்கங்களே! நீங்கள் இன்னும் இவைகளை யறியீரா?

"அடுப்பு ஊதும் பெண்களுக்குப் படிப்பு எதற்கு?" என்று அரற்றித் திரியும் கிழப் பிணங்கள் ஒழிக! "பெண்கள் படிப்பது உத்தியோகம் பார்க்கவா?" எனக் கூறி இள மாணவிகளைப் பரிகசிக்கும் பாமரரும் அழிக! ஞான சூரியன் உதயமாயினன்! நம் நாட்டிற்கு நன்னாளாகிய பொன்னாளும் நெருங்கிற்று. ஆடவரே! பெண்கள் கல்வி கற்பதினால் மேன்மை யடைவர் என்பதை யுணருங்கள். கல்வியினாலேயே மாதர் தங்களை யின்னாரென அறிய முடியும். உலக வாழ்க்கையில் தமக்குரிய கடமையையும் உணர இயலும். குடும்ப சம்ரக்ஷணை, சிசு சம்ரக்ஷணை முதலிய இல்லற ரகஸியங்களை அவர்கள் நன்றாய்த் தெரிந்து கொள்வார்கள். சுகாதாரமே ஒவ்வொரு வீட்டிற்கும், கிராமத்திற்கும், தேசத்திற்கும், உலகத்திற்கும் முன்னேற்றத்தின் அஸ்திவாரம்! ஏழைகளா யிருப்போரும் சுகாதார விதிகளை நல்ல வண்ணம் அநுசரிப்பதால் ஆரோக்கிய திடசாலிகளாக விளங்குகின்றனர். பெருத்த செல்வவான்கள் சுகாதாரக் குறைவினாலேயே நோய் மலிந்த வாழ்க்கையுற்று அல்லல் எய்துகின்றனர். ஒவ்வொரு வீட்டின் சுகாதார சௌகரியங்களையும், எதிர்கால தேச மக்களின் இள முளைகளாகிய நம் சிசுக்களின் சம்ரக்ஷணையையும் ஒழுங்கு பெறக் கவனிக்கும் பொறுப்பாளிகள் யார்? பெண்டிரே! ஆதலால் பெண்டிருக்குக் கல்வி அவசியமென்பது தேற்றம்.

நம் நாட்டின் வீரத் தாய்மார்களே! வீர புருஷர்களே! இனியும் நம் குலப் பெண்களைக் கல்வி யில்லாத பேதையராக்க வேண்டாம்; கோழைகளாக வளர்க்க வேண்டாம்; சுயேச்சை யில்லாத சுத்த சூனியங்களாகச் செய்ய வேண்டாம். இனிநம் நாட்டிற்கு வேண்டப்படுவோர்—யார்? யார்?

சகோதரிகளே! இப்பொழுது உள்ளவர்களைப் போன்ற கோழைத்தனமுள்ள பயங்கொள்ளிகளாகிய புருஷரல்லர்? வீர

ராம ராஜ்யத்தில் விளங்கிய சூரியனே இப்போது இந் நாட்டில் விளங்குகிறான். அதே பூமி தேவியே இப்போதும் அருள் சுரக்கிறாள்.

மற்ற வெறும் பிண்டங்களாகிய பெண்டிரு மல்லர்! உத்தமராகிய சுத்த வீரர்களே தேவை! சிங்கமெனப் பொங்கி யெழும் ஆண்மை வீரரே தேவை! அஞ்சா நெஞ்சினரே தேவை! மங்கலப் பெண்டிரும், மதியூகி மடந்தையரும், அமைச்சுத் துணைபுரியும் அரிவை மாருமே வேண்டப்படுவோர்! உலகறிவு படைத்த உத்தம மாதரே விரும்பத் தக்கோர்! இவர்களே நம் நாட்டிற் பிறக்க வேண்டுமாயின் தாய்மார்களே பொறுப்பாளிகள்! இப்பொழுது பெண்டிரைத் தளை செய்யும் விலங்குகள் சிறுகச் சிறுக நெகிழ்கின்றன. விரைவில் அவைகள் அறவே முறிந்து போகும். அவர்கள் பக்ஷி ஜாலங்களென உலகமெல்லாம் சுற்றித் திரிவர்!

தாய்மார்களே! கனவான்களே! இப்பொழுதே எங்கும் பெண்களுக்குப் போதிய கல்வி யளிக்கும் கல்விச்சாலைகளைத் திறக்க முன் வாருங்கள். வாசகசாலைகளும், நூற் குழுமங்களும் ஏற்படுத்துங்கள். மாதர் சங்கங்களைக் கூட்டச் செய்யுங்கள்! இங்ஙனம் செய்வீராயின், நம் சிறுமிகள் இன்னும் சில நாட்களில் பத்மினி, ஸம்யுக்தை, துர்க்காவதி முதலிய வீர கேசரிகளைப் போல நாட்டின் புகழை நிலை நாட்டுவர்! நைட்டிங்கேல் போல, போர்க்களத்திற் சென்று காயமடைந்த வீரருக்கு வேண்டும் உதவியாளராகத் திகழ்வர்! ஸரோஜனி யம்மையார் போலக் கவியரசிகளாகவும் விளங்குவர்! சொன்மாரி பெய்யும் சோண மேகங்களாகவும் துலங்குவர்! சிவாஜியும், ரஜபுத்திர திலகங்களும் போன்ற மைந்தர்களே நம் சிறுமியரின் சந்ததியராவர்! பட்டங்கள் ஆள்வதும் இனிப் பெண்களே! சட்டங்கள் செய்வதும் அவர்களே! எட்டும் அறிவினிலே பெண்டிர் ஆடவர்க்கு எட்டுணையும் குறைந்தவரல்லர்! அவர்கள் ஊக்கத்திலும் ஆண்களுக்கு இம்மியும் பின் வாங்காதவரே! பெரியோர்களே! இன்னும் தாமதம் செய்யாதீர். பெண்களுக்குத் தாழ்மை செய்தீராயின் நீவிரே நுமது கண்களைக் குத்திக்கொண்டது போலாம்.

தாய்மார்களே! இப்பொழுது சிறுமியரா யிருப்போரேனும் சுதந்திர வுணர்ச்சி பெற்று கல்வி கற்று மேன்மை யடைதற்குரிய வழியைத் தேடும்படி ஆடவர்க்கு அறிவுறுத்தி நல் வழிப்படுத்துவாராக.

உலகை யெல்லாம் உள்ளத்தில் அடக்கிய உயர்ந்தோர் உதித்த நமது ஜாதி வீர ஜாதியாக விளங்க வேண்டும்.

உலக நெறி.

திரு. எஸ். ஆர். அத்தியப்பனர் அவர்கள்.

அஞ்ஞானம் நீக்கி விஞ்ஞானம் பெறுமின்!
ஆசை யுடையவன் மாசை யடைவான்.
இன்பம் விழைவான் துன்ப மடைவான்.
ஈதல் நன்றே! ஈதல் நன்றே!!
உண்ட பின் சிறுநடை உடலுக்கு நன்று!
ஊக்கங் கொண்டோன் ஆக்க மடைவான்.
எம்மதந் தனினும் சம்மதங் கொள்மின்!
ஏக்குற் றிருப்பார் வீக்குற்றுச் சாவார்.
ஐந்து வயதில் பைந்தமிழ் கல்!
ஒழுக்கங் குன்றின் விழுப்பங் குன்றும்.

ஓதா தொழியின் வாதாய் முடியும்.
ஔவியம் கொள்ளல் கௌவியது விடல்.
கங்கணம் கட்டுவீர் கட்குடி யொழிய!
ஙப்போல் நின்று நாடுவீ ருண்மையை.
சக்கரம் போலுங் கைராட்டை சுற்றுவீர்!
ஞயம் படப் பேசலே பயன்றரு(ம்) மொழி.
இடுக்கண் றானே நடுக்க முறுவான்.
இணக்கங் கொண்டு பிணக்கந் தவிர்.
தந்தையுந் தாயுந் தம் பிரானாவர்.
நந்தம் குற்றம் நாட லழகு.

பற்றின்றி வாழ்தலே நற்றவ மாகும்,
மன்னுக! வென்றும் அன்பு மயமே!
இயல்பை யென்றும் ஏத்தி வாழ்வீர்!
இராட்டை சுற்றல் நாட்டிற் கழகு.
இலாகிரி வஸ்து நஞ்செனக் கொல்லும்.
வஞ்சனை யொழித்தல் நெஞ்சை விளக்கல்.
அழகுக் குறுதுணை யாசறு கல்வி.
இளமைக் கல்வி உள்ளம் நிறையும்.
அறவே ஒழிமின்! அயனாட் டுணியை.
அன்னையைப் போற்ற லறிஞர்க் கழகு.

தமிழர் தலை குனிந்து நடப்பதை விடுத்து ஏறு போலத் தலை நிமிர்ந்து நடக்க வேண்டும்.

கண்ணெனப் படுவது கல்வி யாகும்.
காலை யெழுதல் சாலவு(ம்) நன்று.
கிளத்த லென்றும் நலந்தரு(ம்) மொழியை.
கீழ்மை யுறார் தாழ்ந்த வுரையோர்.
குலைத்தல் நன்று அலைவுறு மனதை.
கூரி மதியே குணநிதி யாகும்.
கெழுமி வாழ்தல் விழுமியோர்க் கழகு.
கேட்டினை யொழித்து நாட்டினைக் காப்பீர்!
கைம்பெண் டுன்பம் கடுகி யொழிக!
கொடுங்கோ லென்றும் நடுங்கி வாழும்.

கோபங் கொள்ளின் பாப(ம்) மிகும்.
கௌடிக னாயினும் கருணை காட்டு!
சன்மார்க்க மென்றும் நன்மார்க்க மாகும்.
சாந்தந்தானே சான்றோர்க் கழகு.
சிறந்த பொருளை மறவார் பெரியோர்.
சீற்றம் ஒழித்தல் தோற்றத்திற் கழகு.
சுதந்தரக் கொடியைச் சூழ்ந்து வணங்குக!
சூழ்ச்சி செய்வோர் வீழ்ச்சி யுறுவர்.
செய்தொழில் தன்னை செம்மைப் படுத்துக!
சேதந் செய்மின்! பாதகந் தன்னை.

சைதன்ய முடையோன் தத்துவ ஞானி.
சொல்லுக! வென்றும் நல்லியல் புகலை.
சோகம் விடுத்து யோகஞ் செய்மின்!
சௌக்கியம் என்றும் மெய்க் கின்பம்.

"பாரதி"ப் பத்திரிகையும்;
நமது வெளியீடுகளான புஸ்தகங்களும் மலேயா நாடுகளில்
கீழ் குறிப்பிட்டுள்ளவர்களிடம் கிடைக்கும்.

Messrs. T. Subramanyam & Co.,
7, Batu Road,
KUALA LUMPUR, F. M. S.

The Manager, "India Novel Depot,"
71, Serangoon Road,
SINGAPORE, S. S.

நமது கலைகளை மறந்தோம்; கல்வியிற் குறைந்தோம்.

சுதந்திரத்தின் தன்மை.

திரு T. L. இரகுபதிசர்மா அவர்கள், M. A., L. T.

உயரிய கொள்கைகள் மக்கள் மனதைக் கவர்ந்து அவர்களைத் தீவிரமான முயற்சியில் ஈடுபடும்படி செய்யத் தக்கவை என்று வரையப் புகுந்த ஓர் ஆசிரியர் அவை எவ்வாறு உலகில் பாவுகின்றன வென்பதை விளக்கி யிருக்கிறார். அதற்கு மிகவும் உதவியாய் நிற்பன அவற்றைக் குறிக்கும் சொற்களென்றும், இவை நாளடைவில் சிறிதும் எதிர் பாராத சக்தி யுடையனவாய் விடுவதைப் பற்றி வியந்தும் வரைந்திருக்கிறார். இத்தகைய அநேக சொற்களில் இவ் வியாசத்தின் தலையங்கத்தில் காணப்படுகிற சுதந்திரம் என்னும் சொல் மிக மிகச் சக்தி வாய்ந்தது. மக்கள் மனதைக் கொள்ளை கொண்ட சொற்களில் அதற்கு மிஞ்சிய சொல் கிடையாது. அது தோன்றிய விடத்து மக்களுடைய மற்றெல்லா நோக்கங்களையும் தன் வயப்படுத்தி அதன் சார்பாகத் தாங்கள் கடைப்பிடித்த கொள்கைகளை நிலை நிறுத்தற் பொருட்டுத் தங்கள் இன்னுயிரையும் அர்ப்பணம் செய்துவிடத் தூண்டவல்ல இச் சொல்லின் திறமைதான் என்னே! இதன் பெயரால் உலகில் நடைபெற்ற போர்கள் கணக்கில. ஒவ்வொரு தேச மக்களுடைய அரும் பெரும் தீரச் செயல்களுக்கும் சுயநலமற்ற தியாகங்களுக்கும் அதுவன்றோ ஓர் பெருங்காரணம்! இச் சுதந்திரப் பற்று நாவலர், பாவலர், சிற்பர், ஓவியர் முதலிய நாட்டின் எல்லா வகுப்பினிடையே தோன்றியபோது அது அரும்பிப் பூத்து நறுமணம் வீசும் சொற்பொழிவுகளாகவும், இனிய வீரம் செறிந்த பாக்களாகவும், இயற்கைத் தோற்றத்தினின்று சிறிதும் மாறுபடாததும், மனதிற்கு உற்சாகத்தையும், பரவசத்தையும் உண்டாக்குவதுமான தேசீய உருவங்களாகவும், சித்திரங்களாகவும், மற்றும் பல வகைத் தொழிற் சிறப்புகளாகவும் நமக்கு வழங்குகின்றது. நம் தமிழ் நாட்டின் வீரப் புதல்வரான காலஞ் சென்ற பாரதியார் அமிழ்தினும் இனிய பாக்கள் இத்தகையனவன்றோ? நம் நாட்டின் திலகங்களான கவிச் சக்கரவர்த்தி தாகூர், தியாகமூர்த்தி

தமிழ்ப் பெருமை அனைவருக்கும் பிறக்க வேண்டும். தமிழ் நாட்டின் வாணிபமும் கைத்தொழிலும் முன் போலத் தழைக்க வேண்டும்.

மகாத்மா காந்தி, திலகர், படேல் போல் இன்னும் அநேக அரும் புதல்வர்களை அதுவன்றோ நமக்கு அளித்தது!

உலகில் ஒருவனும் அடிமைத்தனத்தை விரும்புவதில்லை. எல்லோர் மனமும் சுதந்திரத்துடன் கூடிய வாழ்வையே நாடுகின்றது. அவ்வாறாயின் ஏன் உலகத்தின் எப் பாகத்திலும் சுதந்திரம் நிலவி உலகத்தார் யாவரும் சகோதரத்வமும், மனவமைதியும், உள்ளவர்களாக வாழ்ந்து வரக்கூடாது? ஏன் சுதந்திரத்தின் பெயரால் கணக்கற்ற தீங்குகளும், துயரங்களும் மக்களிடையே காணப்பட வேண்டும்? இவற்றிற்கு சுதந்திரம் காரணமாயின் அச் சுதந்திரம் ஒரு மனிதனுக்காவது, ஒரு ஜன சமூகத்துக்காவது போற்றத் தக்க லட்சியமாகுமா? இவ் விஷயத்தைச் சிறிது ஆலோசிக்கும் எவருக்கும் இவை போன்ற பிரச்சினைகள் மனதில் எழாமலிருக்க முடியாது. அவற்றால் நம் போன்றவர்களுக்கு சிறிது திகைப்பு உண்டாவது வியப்பன்று. ஆயினும் சுதந்திரத்தின் அடிப்படையான கொள்கை இன்னவென்று அறிந்து கொள்ளாதவர்களாலேயே தகுதியற்ற, பயனற்ற போர் அதன் பெயராலே தொடங்கப்படுகிறது. அவ்விதப் போரின் முடிவைப் பற்றி நான் அதிகம் விஸ்தரிக்க வேண்டியதில்லை. அது ஒரு சாரார் சுதந்திரத்தை நிலைநிறுத்தத் தொடங்கி மற்றோர் சாரார் சுதந்திரத்தைப் பறிமுதல் செய்து விடுகிறது. உலக சரித்திரத்தில் பல நூற்றாண்டுகளிலும் இச் சம்பவத்துக்குப் போதிய சான்றுகள் உண்டு.

சுதந்திரம் என்ற சொல்லுக்கு சுயேச்சையான வாழ்வு என்று பொருள் கூறலாம். இவ் வாழ்வு எவ் வகுப்பினரும் எக் காலத்திலும் வாழ்வது அசாத்தியம். இயற்கையில் அமைக்கப் பெற்றிருக்கிற எப் பிராணிகளுக்கும், எப் பொருள்களுக்கும் அவ்வித சுயேச்சை யில்லை. எல்லா சிருஷ்டிப் பொருள்களும் சற்றும் விலக்க முடியாத விதிகளின் ஆளுகைக்குட்பட்டு நிற்கின்றன. உலகிலுள்ள ஜீவராசிகளுக்கெல்லாம் ஆதாரமாய் இன்றியமையாததாய் இருக்கும் சூரியனே நியமித்த பிரகாரம் சுழன்று திரிய வேண்டி இருக்கிறது. மற்றும் காற்று, மழை முதலிய பஞ்ச பூதங்களின் சரித்திரமும் இவ்வாறே.

மனித உடலின் கூறுபாடுகளும் அதற்கேற்ற தவிர்க்க முடியாத பசி, தாகம் முதலிய பல தேவைகளும் மனிதன் சுயேச்சைக்குத் தடையாய் நிற்பவை. அவனுக்குப் புறம்பான விஷயங்களிலுமே அவன் முழு சுயேச்சையைக் கட்டுப்படுத்த பல ஏற்பாடுகள் இருக்

தமிழன்ப! "நெஞ்சை யள்ளுஞ் சிலப்பதி காரமென்று அணியாரத்தை" நமது தமிழர் நெஞ்சில் அணிக.

கின்றன. நம்மில் யாராவது தன்னிஷ்ட மென்று சொல்லிக்கொண்டு தேசச் சட்டங்களை மீறி நடப்பது கூடுமா? சர்க்காருக்குக் கட்ட வேண்டிய வரியைக் கட்டாது விடமுடியுமா? பல மனிதர்கள் ஒருங்கு சேர்ந்து வரும் முடிவுகளுக்கு அவர்களில் ஒவ்வொருவனும் கீழ்ப் படிவதால் இச் சுதந்திரம் சற்று குறைவெய்தவில்லையா? ஒரு சங்கத் தார் கோட்பாடுகளும், விதிகளும் அதின் அங்கத்தினர்களுடைய சுதந்திரத்தைச் சிறிதளவு குறைக்கவே செய்கின்றன. ஆயினும் ஆராய்ந்து பார்த்துத் தெரிந்துகொண்ட எவனும் இக் குறைகளைப் பாராட்ட மாட்டான். இவை சமூக நன்மைக்காக இருந்து தீர வேண்டியவை. தனக்குரிய இரண்டொரு காரியங்களில் மட்டும் ஒவ்வொரு மனிதனுக்கும் சுதந்திரமிருக்கிறதே யொழிய மற்றவை களிலெல்லாம் சமூக நன்மையே, தேச நன்மையே பெரிதாகக் கருதப் படுகிறது. ஏனெனின் எவனும் உலகில் தனக்காக மட்டும் வாழ முடியாது. தான் சேர்ந்துள்ள சமூக முன்னேற்றமே தன் முன் னேற்ற மென்பதை யுணர்ந்து அதற்காகத் தன் சுயேச்சையில் பெரும் பாகத்தை விட்டுக் கொடுக்க வேண்டியவனாக இருக்கிறான். இவ் வுணர்ச்சி நாளடைவில் விரிந்து சிறு சமூகங்களிலிருந்து இப்போது உலகத்தை யெல்லாம் தழுவி நிற்கிறது. பல நூற்றாண்டுகளாக உலகில் நடந்தேறிய கணக்கற்ற சமூகப் போர்களின் படிப் பினையை இந் நூற்றாண்டிற்றான் கற்றுக்கொண்டார்கள் போலும். ஆயினும் முழுதும் தெரிந்து கொண்டதாக நாம் நம்புவதற்கில்லை.

அவ்வாறாயின் உலகத்தின் வறுமைக்கும் நாசத்திற்கும் அடிப்ப டையான யுத்தத் தளவாடங்களைப் பரிகரிப்பதற்காகக் கூடிய மகா நாட் டின் கதி இவ்வாறு ஆவதேன்? பணச் செருக்கும், வகுப்பு இறுமாப் புள்ள தேசங்களா லல்லவா சென்ற மகா யுத்தம் தொடங்கப்பட்டது? தற்சமயம் உலக மெங்கும் நாம் காண்கிற வறுமையும், பொருளாதார நெருக்கடியும், பிற தேசத்தினரைத் தங்களுக்கு அடிமைப் படுத்திக் கொள்ள முயன்ற தேசங்கள் உலகினருக்களித்த நன்கொடைகளா கும். பிற நாடுகளை நசுக்கி எந்த நாடும் தான் க்ஷேமமடையக் கருது வது பயனற்ற, தனக்கே கேடு விளைவிக்கக் கூடிய முயற்சி என்ற புத்துணர்ச்சி இப்போதுதான் பரவத் தொடங்கி யிருக்கிறது. இவற் றால் சுதந்திரம் என்பது இக் குறுகிய நோக்கத்தைத் தழுவி நிற்பதல்ல வென்பது நன்கு புலப்படுகிறது. உண்மையான சுதந்திரம் நமக்குப் புறம்பே யுள்ளதல்ல. நம்முள்ளேயே இருந்து நம்முடைய ஜீவியத் துக்கு ஊன்றுகோலாக நின்று நம்மைப் பொம்மை போல் ஆட்டி வைக்கும் நம் மனதிற்கே இச் சுதந்திரம் உரியது. மனச் சுதந்திர மின்மையே மிக வருந்தத் தக்கது. இதன் இயற்கைக் கேற்ப சிந்திக்கவும், சிந்தித்தவற்றைத் தெரிந்து தெளியவும், இவற்றால் உருக்கொண்ட எண்ணங்களை சொற்கள் மூலம் வெளியிடவும் மன திற்கு முழுச் சுதந்திரம் இருக்க வேண்டும். ஆனால் தான் தோன்றி யாய் ஆளுவதில் வேட்கையா யிருக்கும் ராஜாங்கங்கள் இதற்கே பல பல தடைகள் சட்டபூர்வமாய் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். வர வர இவை பயனற்றவை, அடக்குமுறைகளாலும் ஒழித்து விடக் கூடிய தல்ல வென்ற உண்மை ஒவ்வொரு ராஜாங்கமும் உணர்ந்துகொண்டு வருகிறது.

அத்தகைய சுதந்திரத்தை நாட்டில் நிலை நிறுத்த நம் நாட்டுத் தலைவர்கள், தொண்டர்க ளெல்லோரும் ஊக்கத்துடன் உழைப்பாராக.

யவனரும் சோனகரும் தொண்டேவல் செய்த நமது தமிழ்ப் பெருமை என்று மீளுமோ? தமிழர் வீரம் என்று தழைக்குமோ?

கிராம்வெல், உல்ப், நெல்ஸன், வெல்லிங்டன் முதலிய வீரரின் வீரம் இளமையின் சக்தியே யன்றோ?

தீண்டாமையால் ஏற்பட்ட பொருளாதார அநீதிகள்.

திரு. ஸ்ரீ. ஸ்ரீகண்டன் அவர்கள் M. A.

ஹரி ஜனங்கள் ஹரிஜனங்களா யிருக்கும் ஒரே காரணத்தால், அவர்களுக் கேற்படும் நஷ் டம் இவ்வள வவ்வளவன்று. பிராமணர்களுக் குத் தொழில் வகைகளில் பல துறைகள் ஏற்பட் டிருக்கின்றன. அவைக ளெல்லாவற்றிலும் ஈடேறாவிட்டாலும், பிராமணர்களா யிருக்கும் ஒரே காரணத்தால் சாப்பாடு, தக்ஷிணை, தாம்பூ லம் முதலானவைகளைத் தக்க கோலம் பூணுவ தனாலேயே பெறுவதற்கு அருகர்களாய் விடுகிறார்கள். இந்தத் தேசத்தில் மதாபிமானம் மிகவும் தீவிரமா யிருப்பதனால், இந்தக் கடைசித் தொழில் அவர்களுக்கு வெகு காலம் வரையில் பயன்படும் என்பதிற் சந்தேகமில்லை. மற்ற ஜாதியாருக்குள் இப்படிப்பட்ட வரும்படி அதி*மில்லா விட்டாலும், ஆண்டிகள், பண்டாரங்கள் முத லானோர்களிற் சிலர் தேர் என்றும் திருநாள் என்றும் விபூதி வழங்

கிய ஒரே காரணத்தால் பரம ஏழைகளான ஹரி ஜனங்களிடமிருந்து கூட 20, 25 சேகரித்திருப்பதை நான் கண்கூடாகக் கண்டிருக்கிறேன்.

இம்மாதிரியான வரும்படி ஹரி ஜனங்களுக்கு இல்லை என்றால், மற்ற வரும்படிகளாவது இருக்கின்றனவா? என்று பார்ப்போம். ஜவுளி, பலசரக்கு முதலான வியாபாரங்கள் சாதாரணமாக ஹரி ஜனங்களுக்குத் தொழில்களாக இருக்க முடியாது. (முதலில்லாத கஷ்டத்தைத் தவிர) சாதாரண ஜனங்கள் தீண்டாதார்களிடம் இவைகளை வாங்கலாகுமா? வியாபாரம் என்ற தொழிலால்தான் இன்று காலணாப் பெறாத நபர்கள் சில காலத்திற் பெரிய பணக்காரர்களாகித் தங்களுக்கும், ஓரளவு தங்கள் சமூகத்துக்கும் உதவி செய்யக் கூடியவர்களாகிறார்கள். இந்த ஒரு தொழில் மட்டும் அவர்கள் செய்யக்கூடியதாயிருந்திருந்தால், இப்பொழுது ஹரிஜன முன்னேற்றம் அவ்வளவு கஷ்டமான காரியமாயிராது. ஏனெனில், செல்வாக்குள்ளவர்கள் வெகு சீக்கிரத்தில் தங்கள் இனத்தாருடைய தாழ்மையை யுணர்ந்து அதை நீக்க முயல்வார்கள்; தவிர மற்றவர்களுக்குள்ளும் இவர்களைப் போல் முன்னேற வேண்டுமென்ற பேராவலும் அதற்கேற்ற பெரு முயற்சிகளும் உண்டாகும். தோல் வியாபாரம் முதலான ஹரி ஜனங்களுக்கே உரிதான தொழில்களிலுங் கூட, இவர்களுக்குள்ள சமூக நிர்ப்பந்தங்களால் கட்டுப்படாத மகம்மதியர்களும், மற்றவர்களும் இவர்களை முறியடித்திருக்கிறார்கள் என்பது வருத்தத்துடன் குறிப்பிடத் தக்கது.

கூலி வேலைகளிலும் தீண்டாமை என்ற கொடிய வழக்கத்தால் ஹரி ஜனங்கள் அவதிப்படுகிறார்கள். சாதாரணமாகச் செல்வர்களுடைய வீட்டு வேலைக்காரர்களாக அமைவதென்பது இந்த வழக்கத்தால் முடியாமற் போகிறது. (பாதிரிமார்கள், ஐரோப்பியர் முதலானோர் ஜாதி ஹிந்துக்கள் இந்தக் காரணத்தால் செய்யாததோர் உபகாரத்தைச் செய்து வருவது இங்கு வந்தனத்துடன் குறிப்பிடத் தக்கது.) வீட்டில் மாடு கறப்பது, வீட்டைச் சுத்தஞ் செய்வது, தண்ணீரிழுத்தல், விறகு பிளத்தல் முதலியவைகளை யார் வேண்டுமானாலுஞ் செய்யலாம். இதனால் சாதாரணமாக ஹரி ஜனங்களுக்குக் கிடைக்கும் வருமானத்தைக் காட்டிலும் மூன்று நான்கு பங்கு அதிக வருமானம் கிடைக்கும். என்றாலும், தீண்டாமை என்ற பேய் இவர்களுக்கு இந்த அனுகூலங்களெல்லாம் இல்லாமற் செய்கின்றது. துணிகளைத் துவைத்துப் போடும் வேலையால் மட்டும் வீட்டுக்கு

தற்போது சீன தேசம் விழித்து விடுதலைப் போர் புரிவதும் இளைய இரத்தத்தாலன்றோ?

மாதம் 8 அணா முதல் ஒரு ரூபாய் வரையில் கிடைக்கக்கூடும். இம்மாதிரி 7, 8 வீடுகளில் வைத்துக்கொண்டால் கூட மாதம் 5 ரூபாய்க்கு மேல் சம்பாதிக்கும் நபர்களைக் காணலாம். ஆனால் இந்த வழி ஹரி ஜனங்களுக்கு ஏற்படும்படி நாம் செய்யவில்லை. கிணறுகளில் விழும் சாமான்களை முழுகி எடுக்கும் வேலை ஹரி ஜனங்களுக்குண்டோ? வீடுகளில் பாம்புகள் வந்துவிட்டால் அவைகளைப் பிடித்து வெளியேற்றும் வேலையும், செருப்புகளைத் தைத்தும் செப்பனிட்டும் ஜீவனஞ் செய்யும் வேலையுந்தான் அவர்களுக்கு நாம் வைத்திருக்கிறோம்! எல்லாவற்றையும் விட மிகவும் கண்றாவியாக இருப்பது என்னவென்றால், சமூகத்தின் தயவை எதிர்பார்க்கும் தொழிலோ அல்லது வியாபாரத்திலோ ஈடுபட்டிருக்கும் ஹரிஜன நண்பர்கள்கூட அவர்களுக்கு வேலை கொடுத்து உதவ முடியாமற் போவதே யாகும்.

பெண் பிள்ளைகளுக்கும் கூலி வேலைகள் கொடுக்கலாம். வீடு வாசல் கூட்டுதல்; மாவு பண்டங்களை இடித்தல், அரைத்தல்; சீலை தோய்த்தல் முதலான வேலைகளுக்கு உயர்ந்த ஜாதி எனப்படுவோர் சாதாரணமாக வேலைக்காரிகளை நியமிப்பதை நாம் பார்க்கிறோம். இவர்களுக்குச் சாதாரணமாகச் சோறும் கொடுக்கிறார்கள். தவிர, கிராமங்களில் நெல் குத்தும் வழக்க மிருப்பதால், அதிலும் இவர்களுக்கு ஓராதாயங் கிடைக்கிறது. இவை யெல்லாந் தவிர, வயல் காடுகளிற் கூலி வேலைக்குப் போகவும் இவர்களுக்குச் சாவகாசமும் அனுமதியும் உண்டு. இவ்வளவும் தேக நலம் படைத்த எந்தப் பெண்ணும் செய்ய முடியும். ஆனால் ஹரி ஜனப் பெண்களை இவைகளுக்கு லாயக்கற்றவர்களாகச் செய்துவிட்டோம்.

எனவே, பூமி காணிகளில் வேலை செய்யும் ஒரே தொழில்தான் ஹரி ஜனங்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. இதிலும், பலவிதமான காரியங்களுக்கு நமது சமூகப் பழக்கங்களால் அவர்கள் லாயக்கற்றவர்களாக இருப்பதனால், அவர்கள் செய்யும் வேலைக்கேற்பச் சொற்பக் கூலிதான் கிடைக்கிறது. அதிலும் குறைத்துக் கொடுக்கிறதென்ற கொடுமைகளும் இல்லாமலில்லை. கூலி கிடைப்பது கஷ்டமாக இருக்குமிடங்களில், குறைந்த கூலிக்குப் போட்டி போடும் வழக்கமும் ஹரி ஜனங்களுக்குள் மிகவும் அதிகமாய்விட்டது.

தீண்டாமை என்ற வழக்கத்தை யறவே ஒழித்து விட்டால், மனிதருக்கு மனிதர் செய்ய வேண்டிய சாதாரணமான நீதியைச் செய்வது மல்லாமல், ஹரி ஜனங்களுக்குப் பல துறைகளில் வருமானம் கிடைப்பதற்கு வழி செய்து கொடுக்கும் முறையிலும் அவர்க

வறுமை பாவத்தின் வலது கை. மடமை இடது கை. இவ் விரு கைகளால்தான் பாவ மென்னும் கவந்தன் உயிர்களைக் கொல்லுகிறான்.

பாரதப் புதல்வனின் புலம்பல்.

திரு· N. D. சுந்தரவடிவேலு அவர்கள், B.A.

பாரதத் தாயே! நீ முன்னாள் பெற்றிருந்த உயர்வென்னே! இன்னாள் பெற்றுள்ள தாழ்வென்னே! சுதந்திரத்துடன் சுற்றித் திரிந்த நீ இன்று அடிமைச் சிறையில் அவதிப்படுகிறாய். ஒழுக்கம், தத்துவம், இலக்கியம், இசை, ஓவியம், சிற்பம் முதலிய அருஞ் செல்வங்களை வரையாதளித்த நின் வள்ளலெங்கே? உன் பண்டைச் செழிப்பும் கொழிப்பு மெங்கே? எல்லாமிழந்து பண்டைச் சிறப்பிலேயே நின் தாழ்வை மறைக்கவேண்டிய நிலைக்கு வந்துவிட்டனையே!

நின் அன்றைய உயர்வுக்குக் காரணமென்ன? இன்றையத் தாழ்விற்கு வித்தென்ன? அந்நியர் ஆட்சியும் சூட்சியுந்தான் நின் தாழ்வின் காரணமென்பார் ஓர் சாரார். நின் ஜாதி மத பேதமென்பார் மற்றோர் சாரார். இருவர் வாதத்திலும் உண்மையுளது. எனினும் நிதானமாக யோசித்தால் வேறொரு முக்கிய காரணம் இருப்பதையு மறிவோம். உன் உயர்வின் காரணம் உன் பண்டைப் புதல்வ

ளுக்கு நன்மை செய்தபடியாகும். இந்த விஷயங்களெல்லாம் சாதாரணமாக எல்லாருக்கும் தெரியக்கூடியவைகளே. என்றாலும், பொதுவாக ஜாதி ஹிந்துக்களுக்குள் தீண்டாமை விலக்கைப் பற்றி ஏற்படும் விவாதங்களுக்குள், "சக்கிலி பறயன்களைச் சேர்த்துக் கொண்டால் அவர்கள் கஷ்டம் விலகிப் போகுமா? அவர்கள் சுத்தமா யிருக்கும்படி செய்து, தொழில்களும் ஏற்படுத்திக் கொடுத்தால் எவ்வளவு அனுகூலமா யிருக்கும்? அதை விட்டு விட்டு, அவர்களுடன் சம பந்தி போஜனம் செய்தாலும், அவர்களைக் கோவிலுக்குள் கூட்டிக்கொண்டு வருவதிலும் என்ன பிரயோஜன முண்டாகும்?" என்ற வார்த்தை படிக்கடி கேள்விப்படுகிறோம். முற்றிலும் சரி என்று தோன்றக் கூடிய இந்த வாதத்தின் பொய்மையை எடுத்துக் காட்டுவதில் இந்த வியாசம் ஓரளவுக்காவது பயன்படும் என்று நினைக்கிறேன்.

நம் நாட்டின் பொருளைக் கொள்ளை கொள்ளுந் தொழில்களை யெல்லாம் நாம் விட்டுவிட வேண்டும்.

ரின் 'மௌன நிலை.' தாழ்வின் காரணம் உன் இக்கால மக்களின் 'வாய் வீச்சு.'

உன் பண்டைப் புதல்வர் ஆழ்ந்த ஆலோசனைக்காரர்களாகவும், தாங்கள் கண்ட முடிவுகளை வீண் படாடோபமின்றி உலகிற்கு வெளியிடுவோராயும் இருந்தனர். வெறும் ஆரவாரப் பிரியர்களல்லர். அருஞ் செயலாற்றும் வீரர்களாய் விளங்கினர். அதனாலன்றோ இன்றைக்கும் பல நாட்டார் மெச்சி விரும்பிப் பின்பற்றும் அரும் பெருஞ் செயல்களைப் பல துறைகளிலும் இயற்ற முடிந்தது. வெறுங் கூச்ச லிடுவோர்களாகவோ, வாய் வீரர்களாகவோ மாத்திரம் இருந்திருப்பார்களானால், நீ அத்துணைப் பெருமைகளையும் அவர்களால் அடைந்திருக்கமாட்டாயே. பல நூற்றாண்டுகளாக அறிவாளிகளால் மெச்சப்பெற்றதும், உலக மக்களில் பெரும்பாலாரது மதிப்பையும் வியப்பையும் கவர்ந்ததுமான புத்த சன்மார்க்கத்தை நீ ஈன்றளித்தது எதனால்? நின் அரும் புதல்வனின்—ஒப்பிலா மணியின் ஆழ்ந்த சலியாத சிந்தனையாலன்றோ! வெறும் படாடோப வாயாடித்தனத்தால் அல்லவே.

அவ் விதமே தங்கள் சக்திகளை ஒன்றுதிரட்டி, ஆழ்ந்த யோசனையிலும், உயரிய செயல்களிலும், சலியா உழைப்பிலும் செலுத்தி வந்த கர்ம யோகிகள் பலரைப் பெற்றெடுத்தாய். அவர்களின் உழைப்பால் இந்நாள் முன்னேற்ற மடைந்துள்ள நாடுகள் பல காட்டுமிராண்டி வாழ்க்கை வாழ்ந்த அக் காலத்திலேயே பல துறைகளிலும் சிறப்புற்றனையே! இன்று எஞ்சியுள்ள சிறப்பும், நின் புதல்வர்களாகிய விவேகானந்தர், காந்தி, தாகூர், போஸ், ராய், ராமன் போன்ற ஆழ்ந்த சிந்தனைக்காரர்களாலன்றோ நிலைத்திருக்கிறது. ஓய்வு உறக்கமின்றிச் சதா சொன்மாரி பொழியும் தேசாபிமானிகளால், சீர்திருத்தவாதிகளால் அல்லவே.

நின் பிந்திய புதல்வர்கள் அவ் வருங் குணங்களைக் கைவிட்டனர். வீண் பெருமையிலும், களியிலும், கலைக்குதவாத அற்பக் காரியங்களிலும் தங்கள் மகத்தான ஜீவசக்தியைத் தூள் தூளாய்ப் பொடிப் பொடியாய்ச் சிதறவிட்டனர். நின் வீழ்ச்சிக்கு அடிகோலினர். சக்தி செத்துப்போய்விடவே நின் சீரும் அழிந்துபோயிற்று. பிற நாட்டினரின் மதிப்பும் மறைந்துபோயிற்று. நீ பிறநாட்டினர் முகத்தில் விழிக்கவும் வெட்கித் தலைகுனிந்து செல்லவேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டது. அன்று பளிச் பளிச்சென்று கண்ணைப் பறிக்கும் ஒளியையும், இன்று நினைக்கக்கூட முடியாத வேலைப்பாடுமமைந்த சேலை

நம் நாட்டுத் திரவியம் நம் நாட்டிலேயே சுழலும்படியான தொழில்களை வளர்க்க வேண்டும்.

யுடுத்தி உலவினாய். இன்றோ காலச் சுழற்சியால் பொலிவிழந்து, மங்கி, கிழிந்த அதே சேலையைப் பல 'ஒட்டு'களுடன் கட்டிக்கொள்ள வேண்டிய கதி வந்துவிட்டதே.

ஒவ்வொரு தையலும் ஒரு காலத்தில் அச் சேலை மிக அழகுடன் விளங்கியதையும், அதைப்போன்ற பல அழகிய உடைகள் நின் ஸ்பரிசத்தைப் பெற்ற பண்டைச் சீரையும், தற்கால எளிமையும் நினக்குக் காட்டுகின்றதோ? அதனால்தான் நீ வெட்கித் தலைகுனிகின்றனையோ? நின் மனம் எத்தனை பாடுபடுகிறதோ? என்ன என்னவெல்லாம் நினைத்துருகுகிறதோ? ஆ! நின் கண்கள் எத்தனை ஆற்றுப் பெருக்கை உகுக்கின்றனவோ!

அவர்கள் வழிவந்த நாங்களோ ஓயா வாயாடிகளாய் விட்டோம். தாழ்வைக் கருதாக் கயவர்களாகிவிட்டோம். மண்ணில் இன்பங்களை விரும்பிச் சுதந்திரத்தின் மாண்பினை யிழந்தோம். களிப்பிலும், வீண் வாதப் போரிலும், அற்ப விஷயங்களிலும் எங்கள் சக்திகளைச் சிதறவிட்டோம். எங்களுக்கு ஆழ்ந்த யோசனை, சலியா உழைப்பு முதலியன குதிரைக் கொம்பாகிவிட்டன. உருப்படியான நிர்மாண வேலைக்கு லாயக்கற்றவர்களாய்ப் பல சின்னஞ்சிறு கதைகள் பேசி வேடிக்கை மனிதர்களாய் வீழ்கிறோம்.

உன் நலத்தை அடியோடு மறந்துவிடவில்லை. நின் சுதந்திரத்திற்காக எண்ணிறந்த மகாநாடுகள் கூட்டினோம். வீராவேசத்துடன் நீண்ட சொன்மாரிகள் பொழிந்தோம். அளவற்ற திட்டங்கள் வகுத்தோம். ஜாதி மத பேதத்தையறுக்க எவ்வளவு அழகிய உருக்கமான பிரசங்கங்கள்—வழிகள்! இந்தியனின் வறுமையைக் களைய எத்தனை பொருளாதாரத் திட்டங்கள் செய்தோம்! எத்தனைவிதக் கிராமச் சீர்திருத்த முறைகள்! அடைந்த உருப்படியான பலன் என்ன? வெகு வெகு சொற்பமே. ஏட்டுச் சுரக்காய் கறிக்குதவுமா? எத் திட்டம் சிறந்தது எனும் வாதப் போரிலேயே எங்கள் சக்தியெல்லாம் சிதறிப் போயிற்றே. பஞ்சிற் பற்றிய தீ 'பொஸ்' என்று கண நேரத்தில் எரிந்து தணிந்துவிடுவதைப்போல். நிர்மாண வேலை எங்கிருக்கிறது!

நாட்டில் வகுக்கப்படும் எண்ணிறந்த திட்டங்களையும், கோலும் வழிகளையும் கவனித்தால், தேச முன்னேற்றத்தைவிடத் தாங்கள் ஓர் பெரிய திட்டத்தை வகுத்த பெரியோர்களாகக் கருதப்படவேண்டுமென்ற எண்ணமே தலைசிறந்து விளங்குவதாய் ஐயமேற்படுகிறதே. எல்லாரும் பேசாமடந்தைகளாகவேண்டுமென்பதல்ல என் கருத்து. தனது கருத்துக்களையும், உள்ளக் கிடக்கைகளையும் மற்றவர்களின்

குடிசைக் கைத்தொழில்களே நாட்டை உயர்த்தவல்லன. நமது கிராமங்களில் பல குடிசைத் தொழில்களின் சின்னங்கள் உள்ளன.

மனதிற் பதியவைக்கப் பேச்சு—தெளிவான, மனதிற் தைக்கக்கூடிய பேச்சு முழக்கம் மிக மிக அவசியமே. சபைக் கோழையைப்போன்ற பரிதாபகரமான பிராணி உலகத்திலேயே வேறு இல்லை. வீண் வெற்றுரை வீரனைப்போன்ற வெறுக்கத்தக்க பிராணியும் இல்லை. ஆகவே பேச்சு, கட்டுப்பாட்டிற்கு அடங்கியதாய்த் தக்க சமயத்தில் உதவுவதாயிருக்க வேண்டும். அளவிற்கு மேற்பட்டதாய் அனாவசியமாயிருத்தலாகாது.

நாங்கள் பொதுவாக மூன்று பிரிவுகளில் கட்டுண்டு கிடக்கிறோம். முதற் பிரிவு பேச்சு வீரர்களை, பகட்டு வீரர்களை, நிர்மாண வேலைக்கு லாயக்கற்றவர்களைக் கொண்டது. இரண்டாம் பிரிவினர், 'அவர் என்ன அருமையாகப் பேசினார்' என்று கூறிவிட்டு, அத்துடன் காரியத்தை மறந்துவிடுபவர்கள். நாட்டைப்பற்றியோ பொது விஷயங்களைப்பற்றியோ கவலைப்படாத அசிரத்தையாளர்கள்; 'எது எக்கேடு கெட்டாலென்ன' என்றிருப்பவர்கள் மூன்றாம் பிரிவினர். இப் பிரிவுகளுக்கப்பால் கர்ம யோகிகளாய்ச்—செயலாற்றுபவர்களாய்—உண்மைத் தேசபக்தர்களாய்—சீர்திருத்தவாதிகளாய் விளங்குபவர்கள் நின் புதல்வர்களில், பதினாயிரத்தில்—லக்ஷத்தில் இல்லை, கோடியில் ஒருவர்தான். இதனாலன்றோ

"நெஞ்சி லுரமு மின்றி
நேர்மைத் திறமு மின்றி
வஞ்சனை சொல்வா ரடி—கிளியே
வாய்ச் சொல்லில் வீரரடி"

என்று எங்கள் புலவர் சிகாமணியும் சாட்டையடி கொடுத்தார். அந்த அடி ஏன் எங்களுடலில் உறைக்கப்போகிறது? நாங்கள்தான் காண்டாமிருகத்தின் தோலைப் போர்த்தவர்களாயிற்றே.

* * * * *

ரிஷிகள் வழி வந்து, இன்று அடிமைகளாய்க் கோழைகளாய் வாழும் தோழர்களே! நாடு விடுதலைபெற வேண்டுமா? செழிப்புற வேண்டுமா? பண்டைச் சிறப்பையும், ஞானத்தையும், புதுமைச் செல்வங்களையும் பெறவேண்டுமா? அப்படியானால் 'மோனமென்பது ஞான வரம்பு' என்ற உண்மையை உணர்வோம். 'பேச்சு வெள்ளி; பேசாமை பொன்' என்பதை மனதிலிருத்துவோம். ஆரவாரத்தை யகற்றுவோம். ஆழ்ந்து ஆலோசிக்கப் பழகுவோம். நிர்மாண வேலையில் சலியா துழைப்போம். பகட்டை நீக்குவோம்.

* * * * *

முயற்சி யெடுத்தால் வீடுதோறும் ஒவ்வொரு கைத்தொழில் விளங்கச் செய்துவிடலாம்.

புதுமையில் காதல்.

ஜனப் எஸ். சையத் அஹமது அவர்கள்.

பழையன கழிதலும் புதியன புகுதலும் இயற்கை விதி. காலச் சக்கரத்தின் சுழலுக்கேற்ப மாறுதல் இன்றியமையாததாகும். மாறுதலின்றி முன்னேற்றமில்லை. ஏதாவதொன்று என்றென்றும் நிலைத்திருக்க வேண்டுமானால், அது தினே தினே முன்னேற்ற மடைந்துகொண்டே போகவேண்டுமானால், தோன்றல், திரிதல், கெடுதல், நீளல், நிலைமாறுதல் ஆகியவைகளுக்கு உட்பட்டே ஆகவேண்டும்.

மனிதனின் வாழ்க்கையும் இத்தகையதேயாகும். நமது வாழ்க்கை மேலும் மேலும் அபிவிருத்தி யடைந்துகொண்டே போக வேண்டுமானால், தினம் ஒரு உற்சாகம், ஒரு புது ஊக்கம் உண்டாக வேண்டும். அத்தகைய உற்சாகத்தை உண்டாக்க வல்லது புதுமையே.

புதுமை நம்மைத் தட்டி எழுப்பும்; சோர்ந்துபோன மனசுக்கு சாட்டை தரும். நாம் விழிப்படைந்து ஊக்கங் கொள்ளுவோம். நமது வாழ்வு முன்னேற்ற மடைந்துகொண்டே போகும். இல்லையேல் சிறையுண்ட நீரைப்போல் நமது வாழ்வு கெட்டுவிடும் என்பதில் ஐயம் இல்லை.

என்று நம் சக்திகளை ஒன்று திரட்டி இவ் வழிகளிற் செலுத்துகிறோமோ அன்றே நீளிரவு கழிந்துவிடும். நமது கொடிய துன்பத்திற்கெல்லாம் முடிவு காலம் வந்துவிடும். அன்றே நம் விடுதலைப் பரிதியின் முதற் கிரணங்களைப் பார்மிசைக் காண்போம்.

"என்று தணியும் எங்கள் பேச்சினில் மோகம்
என்றெம தன்னை கைவிலங்குகள் போகும்
என்றெம தின்னல்கள் தீர்ந்து பொய்யாகும்."

வாழ்வு தூய்மைப்பட வேண்டும். பிறகே சுதந்திரம் இயலும், அதன் பின்பு சமரஸம் வரும்.

இந்தியா நாகரீகத்தின் உச்சஸ்தானத்தில் இருந்தபோது, சர்வ கலாசாலைகள் நிறுவி ஓவியத்திலும், காவியத்திலும் சிறந்து விளங்கியபோது மேனாட்டார் காட்டுமிராண்டிகளாய் இருந்தார்கள் என்று சொல்லிப் பெருமை பீத்திக்கொள்ளுகிறோம். அத்தகைய நிலையில் இருந்தவர்கள் இன்று நம்மைப் பின்னால் விடுத்துக் கண்ணுக்கெட்டாத தூரம் முன்னேறிச் சென்றுவிட்டது ஏனோ? இதைச் சிந்திப்பது கிடையாது. இதற்குக் காரணம் புதுமையில் அடங்காக் காதல் அவர்கள் கொண்டுள்ளதேயாகும்.

விடிந்து எழுந்தால் அன்று ஏதாவது ஒரு புதுமையைக் காண வேண்டும் அல்லது செய்யவேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள். எழுத்தாளர்கள், ஏதாவது ஒரு புதிய சிந்தனை தங்கள் மூளையில் புஷ்பித்துவிடவேண்டும் என்று அவாவுகின்றனர். உண்ணும் உணவிலும், உடுக்கும் உடையிலும், இருக்கும் இடத்திலும் புதுமையைப் புகுத்த விரும்புகின்றனர். வாழ்க்கை முறையையும் புதுப்புது விதமாக அமைத்துக்கொண்டே செல்லுகின்றனர். எங்கு நோக்கினும் மேனாட்டில் நேற்றைவிட இன்று முன்னேற்றமே காணப்படுகிறது. புதுமையே காட்சியளிக்கிறது. ஒருவர் விமானத்தில் பறந்துகொண்டே விவாகம் செய்துகொள்ளுகிறார்; ஒருவர் சமுத்திரத்தினடியில் மூழ்கி மறைந்துகொள்ளுகிறார்; ஒருவர் நடந்துகொண்டே கலியாணம் செய்துகொள்ளுகிறார்; பாதிரியும் நடந்துகொண்டே அச் சடங்கை நடத்துகிறார். இவ்விதமாக ஏதாவதொரு புதுமையைச் செய்கிறார்கள். ஓட்டமும், ஓட்டத்தில் புதுமையும் அவர்கள் வாழ்க்கையின் நாட்டமாயிருக்கிறது. இத்தகையோர் நம்மைப் பின்னே விடுத்து ஏன் முன்னேறிச் செல்ல முடியாது?

மேனாட்டில் தினம் ஒரு புதுமை நடப்பதைக் கேள்விப்படுகிறோம். மூக்கு முனையில் விரலை வைத்து, ஆ! இந்தமாதிரி நாம் செய்ய முடியுமா என்று வீண் தளர்ச்சியடைகிறோம். எண்ணமே செய்கைக்குத் தாய். இன்று நாமும் எண்ணங் கொண்டால் செய்து முடிப்பது பெரிய காரியமல்ல.

புத்தம் புதிய சிந்தனை முத்துக்கள் நிரம்பிய நூல்கள் மேனாட்டில் தினசரி வெளியாகின்றன. அரிய பெரிய வீரச் செயல்கள் நிகழ்கின்றன. வாழ்க்கையைப் பூரணமாக அனுபவிப்பதற்கு வேண்டிய சாதனங்கள் அபரிமிதமாய் உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்தியாவிலோ ஏதாவது பழைய சிறந்த காப்பியமொன்று இருந்தால் கழுகுகள் பிணத்தைச் சூழ்ந்துகொள்ளுவதைப்போல்

இதுவே தக்க தருணம்; இதுவே சோதனைக் காலம். தேசீயப் பணியாற்ற முன் வாருங்கள். நம் பாரத நாடு உங்களால் சுதந்திரம் அடையட்டும்.

எல்லாரும் அதைச் சூழ்ந்துகொண்டு அதன் ருசியைப்பற்றியே—அதன் அழகைப்பற்றியே எழுதுகிறார்கள்—பேசுகிறார்கள். அதில் அழகு காணுவதை நான் குறை கூறவில்லை. எல்லாரும் கூடிக்கொண்டு ஒரே பல்லவியைப் பாடிக்கொண்டிருந்தால், அத்தகைய—ஏன் அதைக்காட்டிலும் சிறந்த மற்றொரு நூலை இயற்றுவதில் கவனம் செலுத்துவது எப்போது? வாழ்க்கைக்குப் புதிய ஊக்கம் அளிப்பதெப்போது? ஒவ்வொருவரும் பேனாவைப் பிடித்தால் அதன் முனையிலிருந்து புத்தம் புதிய எண்ணங்களே சுரக்கவேண்டும் என்று ஆசைப்படவேண்டும். நமது நாடும், கலைகளும் எந்த நிலையில் இருக்கின்றனவோ அவைகளை, நாம் இறப்பதற்கு முன் ஒரு படி முன்னேற்றிவிட்டே இறக்கவேண்டும் என்று சபதம் செய்துகொள்ளவேண்டும். அஃதன்றி நமது மூதையர் விட்டுச் சென்ற நிலையிலேயே யாவையும் வைத்துக்கொண்டு வீண் பெருமை பேசுவதில் அர்த்தமில்லை.

நமது தற்கால வாழ்க்கையோ உற்சாகமற்று விளங்குகிறது. அழகில்லை; வளர்ச்சியில்லை; வளருவதற்கு மார்க்கமுமில்லை. அடிமைப்பட்டுக் கிடக்கிறோம்; அவதியுறுகிறோம். காரணமென்ன? நாம் ஒருவித வாழ்க்கையை நிரந்தரமாக அமைத்துக்கொண்டோம். ஒரு வரையறையை ஏற்படுத்திக்கொண்டு, அதை மீறிச் செல்லாமல் சிறையுண்ட நீரைப்போல் கிடக்கிறோம்.

காலையில் எழுந்திருக்கவேண்டியது; வேலை செய்யவேண்டியது; உண்ணவேண்டியது; உறங்கவேண்டியது. மறுநாள் எழுந்திருக்கவேண்டியது; வேலை செய்யவேண்டியது; உண்ணவேண்டியது; உறங்கவேண்டியது. இப்படியாகவே வருஷம் முழுதும் செய்து வருகிறோம். செக்கு மாடு எப்படித் திரும்பித் திரும்பி ஒரே இடத்தைச் சுற்றிக்கொண்டிருக்கிறதோ அதைப்போலவே நாமும் சுற்றிக்கொண்டிருக்கிறோம். இது ஒரு வாழ்வாமா? இல்லவே இல்லை. இக் காரணத்தாலேயே ஒரு புதிய காரியத்தைச் செய்யவேண்டுமானால் நமக்குத் தளர்ச்சி ஏற்படுகிறது. உடனே அதைச் செய்வதற்கு வேண்டிய ஊக்கம் பிறப்பதில்லை. ஏன்? ஒரேவித வாழ்க்கையில் செக்கு மாட்டைப்போல் பழகிவிட்டதே காரணமாகும்.

இன்று 'விர்'ரென விசையாய்ப் பறந்து செல்லும் விமானத்தின் சிறகில் நிற்கவேண்டும். நாளை ஒரு உயரிய மலையின் சிகரத்தில் தொத்தித் தொத்தி ஏறவேண்டும். இன்று சமுத்திரத்தைக் கிழித்துக்கொண்டு ஓடும் 'ஸ்டீம் லாஞ்சில்' மேலே நின்று உணவு

கிராமங்கள் தோறும் வாலிப சங்கம் நிறுவி, வாலிப இயக்கத்தைப் பற்றிப் பெரும் பிரச்சாரம் செய்து, வாலிப வீரத்தைப் பெருக்குங்கள்.

உட்கொள்ளவேண்டும்; நாளை ஓடும் மோட்டாரிலிருந்து ரயிலில் தாவவேண்டும் என்னும் ஆசை நம்மவருக்கு உண்டாகவேண்டும். சின்னஞ்சிறு செயலாயினும், மாபெரும் வீரச்செயலாயினும் அதில் நமது தேசமே—நாமே சிறந்து விளங்கவேண்டும் என்று ஆத்திரங் கொள்ளவேண்டும்.

ஒரு விமான வீரரோ, ஒரு சினிமா நடிகரோ வந்துவிட்டால் மேனாட்டில் ஆவலுடன் ஜனங்கள் பார்க்க வருகிறார்கள். இடித்துத் தள்ளிக்கொண்டு திரள் திரளாக வந்து குழுமிவிடுகிறார்கள். கைக்குட்டைகளை ஆட்டியும், தொப்பிகளை வீசியும் ஆரவாரம் செய்கிறார்கள். ஒரு புதுமையைச் செய்தவர் வந்துவிட்டால் பிரவேசக் கட்டணம் செலுத்தியும் அவரைப் பார்த்து ஆனந்திக்கின்றனர். இத்தகைய வீரர் வணக்கம் நமது நாட்டிலும் ஏற்படவேண்டும்.

மேனாட்டுக்குச் சென்றுவந்த எனது நண்பரொருவர் இங்கிலாந்தில் விமான வீரர்களாகிய 'மாலிஸன்' தம்பதிகளை அங்குள்ளோர் வரவேற்ற காட்சியை மணிக் கணக்காக எடுத்துச் சொன்னார். சிறு குழந்தைகூட அதிசயிக்கத்தக்க ஆவேசத்தோடு 'மை ஆமி! மை மாலிஸன்!' (என்னுடைய ஆமி! என்னுடைய மாலிஸன்!) என்று தலைகால் தெரியாது குதித்ததாம்!

நமக்கும் அத்தகைய உணர்ச்சி வேண்டும். அத்தகைய புதுமையில் காதல் வேண்டும். உயிர் போனாலும் சரியே, அகண்ட பயங்கரமான சமுத்திரத்தைத் தன்னந்தனியே விமானத்தின் மூலம் தாவிவிடவேண்டும். தூரதேசத்தைக் குறுகிய காலத்தில் அடையவேண்டும் என்று ஆவல்கொள்ளவேண்டும்.

மனிதன் இரண்டு நாள் வாழ்ந்தாலும் அழகிய வாழ்வு—இன்ப வாழ்வு வாழவேண்டும். ஆயிரக்கணக்கான வருஷம் செக்குமாட்டைப்போல் சுற்றிக்கொண்டிருப்பதில் என்ன பயன்? காகிதத்தால் செய்த மலர் எத்தனை ஆண்டுகள் இருந்தாலுமென்ன? 'கம கம' வென உள்ளங் குளிர மணக்கும் இயற்கை மலருக்கு ஈடாகுமா? அது இரண்டு நிமிஷம் இருந்து வாடிவிட்டாலும் பரவாயில்லை. புதுமையில் காதல்கொள்வோம். தினம் புதிய இன்பம் துய்ப்போம். இரண்டு நாளில் மடிய நேர்ந்தாலும் மடிவோம். நூறு வருஷ சோம்பேறி வாழ்வை விட அத்தகைய வாழ்வே சிறந்ததாகும்.

எதிலும் நினைத்தபடியெல்லாம் ஒழுங்கற்று வேலை செய்யாது, நிர்மாண திட்டத்துடன் தொண்டு புரியுங்கள்.

சுதந்திர வீரா!

திரு. மு. த. வேலாயுதம் அவர்கள்.

இந்திய சுதந்திர வீரனே! உறங்கினகாலம் போதும் போதும். எழுந்திடுவாய்! இன்னுந் துஞ்சுவதென் கொல்? சுறுசுறுப்பைக் காட்டு! இந்திய மக்கள் எல்லோரையும் ஓர் குலமாகக் கூட்டு. உனக்கின்னல் புரியும் கசடர்களை உதறித் தள்ளி நின் வீரத்தால் வாட்டு. எதற்கும் தளர்வுறாதே. அஞ்சேல்! அஞ்சேல்! அலைகடல் பொங்கி அணுகி வந்திடினும் அஞ்சேல்! குடதிசை ஞாயிறு குணதிசை உதிப்பினும் அஞ்சேல்! அஞ்சுவதென்பது உனது அகராதியில் இல்லையென்பதாய்ச் சொல். ஆளை உருட்டி ஜெயங்கொள்வோமென்னும் மனப்பாங்குடையோர்க்குத் தக்க உதாரணங் காட்டு. எத்தகைத்தும் தளர்வுறாதே. உஷார்!

மனிதன் முதல் சிறு ஜந்துக்கள் ஈறாய பல்வகை உயிரும் சுதந்திரங்கொள விழைகிறதெனின் நீ எத்தகைத்த மனிதனாய்க் காணப்படவேண்டுமென்பதைச் சிறிது சிந்தித்துப் பார்! சுதந்திரமின்றி உயிர் வாழ்வதினும் உயிர்நீத்தலே சிறப்புள்ளதென்பதாய்க் காட்டு. சுதந்திரம் என்னும் ஒண்பொருளுக்கு உறுபகைஞராரேயாயினும், அன்னோர் சொல் "மதிப்பேனல்லேன்" என்று திடமாய்ச் சொல். மானமழிந்து வாழ்வதினும், மண்ணில் வீழ்ந்து மாய்வதே சிறப்புள்ளதெனச் சாற்று. இனிப்புக் காட்டி ஏய்த்திடும் மக்களை ஏறிட்டுப் பாராதே! அன்னோர் சொல்லை நஞ்செனக்கொள். சுதந்திர உலகத்திற்கு அச்சமில்லை; நாணமில்லை; தாழ்மையில்லை; கீழ்மையில்லை; உயர்வு தாழ்வில்லை.

ஏ சுதந்திர வீரா! சில காலமாக, நின் சுதந்திரம் மங்கிப் போயினதென்கொல்! அடக்கி ஆள எண்ணங்கொள்ளும் அற்பர்களுக்கு அஞ்சேல்! அஞ்சேல்! "தோன்றிற் புகழொடு தோன்றுக; அஃதிலார் றோன்றலிற் றோன்றாமை நன்று" என்னும் வள்ளுவனார் வழுத்திய சொல்லைக் கடைப் பிடி. மனிதனாய்ப் பிறந்தவ

எதிலும் கட்டுப்பாடுகளும் சட்ட திட்டங்களும் தேவை.

னுக்குச் சுதந்திரம் பெரிதும் வேண்டும். அதனாற் கண்ணியனாய்த் திகழ்தல்வேண்டும். சுதந்திரம் பிறர் கொடுக்க வாங்குவது என்னும் விழுமிய சொல்லை வீழ்த்து. மனிதனுக்கு இயற்கையாய் அமைந்தது சுதந்திரம் என்பதாய்க் கூறு. நின் சுதந்திரத்தில் சிறிதளவேனும் ஒன்னலர் ஒளிக்கக் கண்டால் ஒறுத்து. பூர்ண சுதந்திரம் பூண்பது அழகு என்பதாய் மார்பு தட்டு. சுதந்திரத்தைப் பறிமுதல் செய்வோர் பாதத்தில் விழுந்து பல்லை இளித்துக் காட்டாதே. ஒரு பதிவிரதையானவள் எங்ஙனம் கற்பைக் காப்பதில் சிரத்தை கொள்கின்றாளோ, அங்ஙனமே சுதந்திரத்தைக் கொள்வதில் அவாவுறு. இஃதே நின் ஜீவியத்தில் லக்ஷியமாய்க் கொள்.

நீ உட்கொள்ளும் உணவு ஒரு பிடியாயினும் சுதந்திரமாய்க் கொள். கேவலம் வயிற்றுப் பிழைப்பிற்காகச் சுதந்திரபங்கம் செய்யாதே. இவ்வுலகிலுள்ள சுதந்திர வீரர்களைச் சற்றே சிந்தித்துப் பார். அப்பொழுது சுதந்திரத்தின் தத்துவம் இத்தகைத்து என்பது நன்றாய்ப் புலப்படும். அடிமைகளாய் விலங்குகளாய் இருந்து வந்த தேசமக்களைச் சற்றே சிந்தித்துப் பார்! அடிமை வாழ்வில் வாழ்ந்துவந்த தேயங்கள், இன்றை நாள் சுதந்திர அமிர்தத்தை உட்கொண்டு மாசற்ற வாழ்க்கை நடத்தி வருகின்றனவெனின், சுதந்திர தேசத்திற் பிறந்த உனக்கு எவ்வளவு தைரியம் வேண்டும்? எவ்வளவு மனப்பான்மை வேண்டும்? எவ்வளவு வீரம் வேண்டும்? நீயே உணர்ந்துபார்.

எவ்வளவு கொடிய வன விலங்குகளாயினும் யதேச்சையாய் இருக்க விழைகின்றன. கூண்டிற் குள்ளிருக்கும் பறவைக்குப் பாலும் பழமும் பகிர்ந்தளித்த போதிலும் அடிமை வாழ்விலிருந்து விடுபட யெத்தனிக்கிறது. சுதந்திர வாழ்வில் கொள்ளும் உணவு அற்பமாயினும் பெரிதாக மதிக்கிறது. அடிமை வாழ்வில் உட்கொள்ளும் உணவு அமிர்தமாயினும் வெறுக்கிறது. உலகில் சுதந்திரத்தைப்பற்றி எழுந்திட்ட புத்தகங்களைப் பார்! எங்கும் சுதந்திரவொலி. யாண்டும் சுதந்திரப் பேச்சு. சுருங்கக் கூறினால் இவ்வுலக முழுமையுமே சுதந்திரமென்கிற ஆரவாரம்.

ஒவ்வொரு தேயமும் சுதந்திரத்திற்காக ரத்தத்தைச் சிந்தினது, சிந்துகிறது. அமெரிக்காவைப் பார். பிராஞ்சு தேசத்தை நோக்கு. அயர்லாந்தைக் கவனி. பிலிப்பைன், சயாம், கூபா முதலிய தேசங்களின் போக்கைப் பார். அடிமைக் குழியில் அசப்பட்டுழன்ற தேயங்கள் யாவும் இற்றை நாள் சுதந்திரமடைய மார்பு தட்டிக்கொண்டு முன் வருகின்றன. சுதந்திர வீரா! நினக்கு

அன்ன விசாரத்தைத் தவிர வேறு ஆத்ம விசார முண்டோ?

வீரம் இருந்தால் நாம் எல்லோரும் "இந்திய நாட்டு மன்னர்" என்னும் எண்ணம் இருந்தால் உன்னை அடக்கி ஆள ஒருவராலும் இயலாது. அப்பொழுது நீயே செல்வன்; நீயே மன்னன்; நீயே சர்வாதிகாரி. உழைப்பு நினதாகும்; ஊதியம் நினதாகும்; தேடப்படும் செல்வம் நினதாகும்; உண்டு களிப்பதும் பிறவும் நினதேயாகும். இலவு காத்த கிளிபோல் காத்திருந்து மோசம் போக வேண்டியதில்லை. நெற்றி வியர்வை நிலத்தில் விழும்படி உழைத்து, உண்டு களிப்போர்க்கே அர்ப்பணஞ் செய்ய வேண்டியதில்லை. நீ எத்தகைத்தும் அநியாயத்தை அகற்ற அச்சப்பட வேண்டியதில்லை. பசியால் அவதியுற வேண்டியதில்லை. பசியின் கொடுமையை எடுத்துக் கூற அஞ்ச வேண்டியதில்லை. வாய் புதைத்துக் கைகட்டிக்கொண்டு அடிமைகளாய் வாழவேண்டியதில்லை. இவைகளையெல்லாம் சிந்தித்துப் பார். சுதந்திரமின்றி நாட்டையே ஆள்வதாயினும் சுதந்திரத்துடன் ஓட்டைக்கொண்டு இரந்து சாப்பிடுவதே மேல்.

நம் நாடு க்ஷேமமடைய வேண்டுமாயின்—பரிணாம விர்த்தியடைய வேண்டுமாயின், பசிப் பிணியை நாடு கடத்த வேண்டுமாயின், வறுமையைப் போக்க வேண்டுமாயின், இந்திய மக்கள் ஒவ்வொருவரும் இந்திய நாட்டு மன்னர் ஆகவேண்டுமாயின், இந்திய சுதந்திர வீரா! நின்னால்தான் ஆகவேண்டும்.

சுதந்திர வீரனெனப் பேர் எடுத்துக் கோழையாய் விளங்காதே! அடிமை விலங்கை நின் சுதந்திர ஒளியால் துகளாகச் செய். எந்த நாளில் நின் சுதந்திர ஒளியை யாண்டும் பரவச் செய்கின்றாயோ அந்த நாளே 35 கோடி மக்களுக்கும் புத்துயிர் அளித்து, வறுமையை ஒழித்த நாளாகும்; அடிமைத் தளையினின்று அகன்ற நாளாகும்; அந் நாள் ஓர் பெரும் நாளாகும். அன்றியும் அந்நாள் உலக சரித்திரத்தில் நினது பேர் பொன்னெழுத்தால் ஆக்கப்படும். இஃது நிச்சயம்.

"பாரதி"
ஓர் செந்தமிழ் மாதப் பத்திரிகை.

மாலை 5	ஸ்ரீமுக-மாசி 1934ஆம் பிப்ரவரி-மார்ச்சுமீ	மணி 11

பொருள் செயல் வகை.

பண்டித திரு. ஊ. சா. வேங்கடராம ஐயர் அவர்கள்.

1. முன்னுரை.

அறிவும் ஆராய்ச்சியும் மிக்க மனிதர்களுள் "வளம்பட வேண்டாதார் யார் யாரும் இல்லை" அந்த வளம் அறம், பொருள், இன்பம் என்ற மூன்று நெறிகளும் கைவரப் பெறுவதால் நிறைவேறுவதாகும். அவை கைவருவது:

"வடுவிலா வையத்து மன்னிய மூன்றில்
நடுவண தெய்த விருதலையும் எய்தும்."

"முனிவரும் மன்னரும் முன்னுவ பொன்னான் முடியும்."

என்றபடி இடைப்பட்டதாகிய பொருள் கைவருவதையே பொறுத்ததாகின்றது.

"பொருளிலார்க் கிவ்வுலக மில்லை."

"குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்
றுண்டாகச் செய்வான் வினை."

என்பனவும் இக் கருத்தை வற்புறுத்தும் இம் முறையே நோக்க ஒவ்வொரு மனிதனும் முதற்கண் முயல வேண்டியது. அறநெறி பிறழாத பொருள் செயல் வகை பற்றியே என்பது தவறாகாது. பொருள் செயல்வகை—பொருளைத் தேடும் வழி.

2. தமிழர் பொருள் செய்த வகை.

(அ) பொது.

"பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள்."

என்பது தமிழர்கள் பொருளைப் பற்றிக் கொண்ட மேல் வரிச் சட்டமாகும். இங்ஙனம் பொருளை மிகச் சிறந்ததாக மதித்ததற்கேற்ப அவர்கள் அதனை எப்படி எப்படிப் பெருக்கிக் கொள்ளலாம் என்பதிலும் தக்கவாறு முயன்று பயன் பெற்றார்கள். அங்ஙனம் அவர்கள் பயன் பெறுவதற்குத் துணையாயிருந்த துறைகள் பல. அவற்றுள் உழுதொழில், கைத்தொழில், வாணிகம் என்பன தலையாயவை.

(ஆ) உழுதொழில்.

"உழன்றும் உழவே தலை" என்ற உறுதிப்பாட்டினுடைய தமிழர்கள் உழுதொழிலில் பெரிதும் முன்னேற்றம் பெற்றிருந்தார்கள்.

"தொடிப்புழுதி கஃசா வுணக்கிற் பிடித்தெருவும்
வேண்டாது சாலப் படும்."

"ஏரினு நன்றா லெருவிடுதல் கட்டபின்
நீரினு நன்றதன் காப்பு."

என்றுள்ள குறட்பாக்கள் தமிழர்கள் உழுதொழிலிற் கொண்ட தேர்ச்சியை அறிவிப்பன. இவ்வாறு மிகச் சிறந்த முயற்சிகளைச் செய்து வருந்திப் பாடுபட்டு உணவளிக்கும் உழவர்களைத் தமிழர்கள் போற்றிப் புகழ்ந்திருப்பது வியப்பன்று.

"பலகுடை நீழலுந் தங்குடைக்கீழ்க் காண்பர்
அலகுடை நீழ லவர்."

"உழவினார் கைம்மடங்கி னில்லை விழைவதூஉம்
விட்டேமென் பார்க்கு நிலை."

என்பன உழவரது மேன்மையை இனிது விளக்குவன.

(இ) கைத்தொழில்.

"நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளந்தரும் நாடு."

என்பது தமிழர்களின் கைத்தொழிலைப் பற்றிய மகா மந்திரம். இதன் பொருள், தன்னிடத்து வாழ்கின்ற மக்களுக்குத் தேவையானவற்றைப் பிற நாட்டாரிடமிருந்து தனக்கு வேண்டிய பொருள்களைப் பெற வேண்டிய நிலைமையிலிருக்கும் நாடு நாடாக மாட்டாது என்பதாம். பண்டைக் காலத்திலே சோழர்க்குத் தலைநகராக இருந்த காவிரிப்பூம்பட்டினம் தண்டமிழ் நூல்களில் சிறப்பிக்கப்பட்டுள்ளது அங்கே பல திறப்பட்ட தொழில்களையும், தொழிலாளர்களையும் பற்றிக் கூறுவன இக் காலத்தவர்க்குப் பெரு வியப்பைத் தருவன. ஒரு நாடு சிறப்புற எத்துணைத் தொழிலினர் வேண்டும் என்பதை அவற்றைப் படிப்போர் எளிதில் உணர்ந்துகொள்ளலாகும். தமிழர்கள் மானத்தைக் காக்கும் உடைகளை நெய்து கொள்வதில் நிகரற்றவர்களாயிருந்தார்கள்; பருத்தி, பட்டு, நார், மயிர் முதலியவற்றால் ஆடைகளை அமைத்துக் கொண்டார்கள். அத் தொழில் வீடுதோறும் ஓரளவு பரவி யிருந்தது. உலோக வகைகளினாலும் தமிழர்கள் தொழிலியற்றி வந்தார்கள்; சங்கு போன்ற கடல் படு பொருள்களால் தொழில் புரிந்தார்கள்; உப்பு, பான வகை முதலியவற்றிலும் பழகியிருந்தார்கள். நகர அமைப்பு, சாலை, ஏரி, குளம் முதலிய இன்றியமையாச் சாதனங்களை அமைத்துக்கொள்வதிலே தமிழர்களின் திறமை குறைந்திருக்கவில்லை. காவிரிப்பூம்பட்டினத்தின் அமைப்பு, கல்லணை முதலியன இக் காலச் சிற்பிகளும் வியக்கத்தக்கன. கோட்டைகளில் பகைவர் நெருங்குவதற்கு அஞ்சுமாறு பல திறப்பட்ட பொறிகளும், படைக்கலங்களும் அமைக்கப்பட்டிருந்தன என்றும் கேட்கப்படுகிறது. கப்பல், மோட்டார், ஆகாய ரதம் போன்றனவும் இருந்தன. "பூணியின்றிப் பொறியின் இயங்கும்" என்பது மோட்டார்க் காரைக் குறிக்காதா? "வலவனேவா வானவூர்தி" என்பது ஆகாயதத்தையல்லவோ தெரிவிக்கின்றது? இவற்றால் நாட்டின் பொருள் வளர்ச்சிக்குக் கைத்தொழிலின் பெருக்கம் இன்றியமையாத தொன்றும் என்பதைத் தமிழர்கள் நன்கு உணர்ந்திருந்தார்கள் என்பது மிகையாகாது.

(ஈ) வாணிகம்.

நாட்டின் பொருள் வளர்ச்சியைக் கருதித் தங்களுக்கு வேண்டும் பொருள்களைத் தாங்களே படைத்துக்கொள்ளும் வன்மையினைப்

பெற்றிருந்த தமிழர்கள், அப் பொருள்களைத் தாங்கள் பயன்படுத்திக் கொண்டதுடன் அயல் நாடுகளுக்கும் அனுப்பி வந்தார்கள்; கப்பல்களின் வழியாகவும், வண்டிகளின் வழியாகவும் பண்டமாற்றுச் செய்து வந்தார்கள்; அக்கால் கொடுப்பதிலே குறைவில்லாமலும், கொள்வதிலே அதிகப்படாமலும் பெரிதும் பார்த்து வந்தார்கள். எந்தக் காரணம் பற்றியும் நடுவு நிலைமை தவறலாகாது என்பதே அவர்களது முக்கியமான கருத்துப் போலும்!

“நன்றே தரினும் நடுவிகந்தா மாக்கத்தை
அன்றே ஒழிய விடல்.”

என்பது வாயுறை வாழ்த்து. தேவையான—இன்றியமையாத பொருள்களையே கொடுப்பதும், கொள்வதும் செய்வது வழக்கமாயிருந்தது. தேடிப் பார்த்தாலும் வேண்டாப் பொருள்களைக் காண்பதரிது. பெரிய பட்டணங்களில் நாளங்காடி, அல்லங்காடி என இரண்டு வகைப்பட்ட கடை வீதிகள் இருந்தன. நாள்—பகல், அல்—இரவு. பகற் காலத்திலே திறந்து வைக்கப்பட்ட கடைவீதி இராக் காலத்திலே மூடப்பட்டிருக்கும்; இராக் காலத்திலே திறக்கப்படும் கடைவீதி பகற் காலத்திலே மூடப்படும். இம் முறை வேற்று நாடுகளிலிருந்து வரும் யாத்திரீகர்கள், வியாபாரிகள் போன்றவர்களுக்கு எவ்வளவு சௌகரியத்தை அளிக்கும் என்பது கவனிக்கத் தக்கது. இன்னும் “இந்த இடத்திலே இன்ன பொருள் கிடைக்கும்” என்று பல நாட்டு மொழிகளிலும் வரையப்பட்ட விளம்பரங்கள் அடங்கிய பல திறப்பட்ட வர்ணக் கொடிகள் ஆங்காங்குத் தொங்கிக்கொண்டிருக்கும். ஒவ்வொரு பொருளுக்கும் வியாபார அடையாளம் உண்டு. “இன்னார் இன்னார் இன்ன இன்ன பொருளை வியாபாரம் செய்வர்” என்பதை அறிந்துகொள்ளவும் இடமிருந்தது. கூல வாணிகன், அறுவை வாணிகன் என்ற சிறப்புப் பெயர்களை யுடைய தமிழ்ப் புலவர்களும் இருந்தார்கள். கூலம்—தானியம், அறுவை—ஆடை. இனி வேண்டாப் பொருள்களின் குவியலும், போட்டித் தொல்லையும் அக் காலத்திலே இருந்ததாக அறியப்படவில்லை. ஆடம்பரமற்ற உண்மையான வாணிகமே நடைபெற்று வந்தது. அதனை இக் காலத்துச் சிறப்பாகக் கூறப்படும் கூட்டுறவு முறையிலுள்ள பிரித்துக்கொள்ளும் வகையைச் சேர்ந்ததாகவே கூறலாம். மேலும், அக் காலத்தில் பெரிதும் பண்டமாற்று முறையே நடைபெற்றதாதலின் இக் காலத்தில் உண்டாகும் நாணயமாற்றுத் தொல்லைகளும், வேண்டாப் பொருள்களின் சேர்க்கையில் வரும் நஷ்டங்களும், பிற இன்னல்களும் உண்டாவதில்லை. வியாபாரிகளும், பொது ஜனங்களும் ஒன்றுபட்ட குடும்பத்தினர் போல வாழ்ந்து வந்தார்கள்.

3. பொருட் பயன்

இவ்வாறு வருந்தி உழைத்துப் பொருளைத் தேடிய தமிழர்கள், அதனை எப்படிப் பயன்படுத்துவது என்பதையும் நன்கு தெரிந்து கைக்கொண்டிருந்தார்கள். “பொருளில்லார்க் கின்பமில்லை; புண்ணியமில்லை” அங்ஙனமே புகழுமில்லை; அறிவுமில்லை அன்னார் நடைப்பிணம் எனவே உலகினரால் கருதப்படுவர். ஆனால், இவற்றிற் கெதிராகப் பொருளுடையோர் எவ்வளவு குறைபாடுகளை உடையவராயினும் சிறிதும் பழிப்புக்குள்ளாவதில்லை. அவரிடத்திலுள்ள பொருட்செல்வம் அவை யனைத்தையும் மறைத்துப் பலரும் மெச்சுமாறு செய்கின்றது. இவ்வளவு சிறப்புக்கள் பொருட் செல்வத்திற்கு உண்டு என்பது தமிழர்கள் அறிந்ததே. எனினும், அவர்கள் “பொருட்செல்வம் ஓடுகின்ற தண்ணீரிலே மீன் போன வழியைப் போல விரைவில் அழியக் கூடியதே. அஃது “அககுறயார் மாட்டும்” நில்லாதது. ஆதலின், செல்வத்தாலாகிய பயன் தம்மிடம் வந்து இரப்போர்க்கு இல்லை யென்னாது கொடுத்தலே. அங்ஙனமின்றித் “தாமே அனுபவித்து விடலாம்” என்பது பல குற்றங்களுக்கு உள்ளாக்குவது. கடல் சூழ்ந்த உலகத்தைப் பொதுச் சொல் இன்றி ஏகசக்காதிபதியாய் இருந்து ஆண்டு வரும் அரசர்க்கும், இரவு பகல் தூங்காமல் வேட்டையாடும் தொழிலையே மேற்கொண்டொழுகும் மறவர்க்கும் உணவுக்கு வேண்டியது நாழி அரிசியே. உடைக்கு வேண்டியது நான்கு முழமே. பிறவற்றிலும் ஒரே விதமேதான். ஆதலின், பொருளைப் படைத்தவர் தம்மை இந்திரனாக எண்ணிச் செருக்குக் கொள்ளாமல் ஈத்துவக்கும் இன்பத்தில் வாழ்வது மேலானது என்ற கொள்கையினை யுடையவர்களாகவே வாழ்ந்து வந்தார்கள். கடையெழுவள்ளல்களின் வரலாறுகள் இவ் வுண்மையைப் பெரிதும் வற்புறுத்துவன. இன்னும் பெருஞ் சித்திரனார் என்ற புலவர் தாங்கொணா வறுமைத் துன்பத்துடன் தளர்வுற்றார்; பல இன்னல்களுக்கு உள்ளாகிக் குமணனை அடைந்தார்; அவனிடமிருந்து பெரும் பொருளைப் பரிசாகப் பெற்றார்; தமது மனைவியிடம் அதனைக் கொடுத்தார். அக்கால், அவர் கூறியன யாவை? “எனது அருமைத் தலைவியே, இவை குமணவள்ளல் கொடுத்த பொருள்கள். இவற்றை “முற்றும் நாமே பயன்படுத்திக் கொள்வோம்” என்று எண்ணாதே. இப் பொருளை முன்னம் உபகாரம் செய்தார்களுக்குக் கொடு. உன்னைக் கேட்டவர்களுக் கெல்லாம் கொடு. கேளாதிருப்பினும் தேவையுள்ளவர்களுக் கெல்லாம் கொடு. சுற்றத்தார் முதலிய பலர்க்கும் கொடு. “என்னைக் கேட்டுத்தான் கொடுக்க வேண்டும் என்று கருதாதே” என்பனவே அவை. தமிழர்கள் இவ்வளவு சிறந்த ஆராய்ச்சி நிறைந்த

அறிவுடன் விளங்குகிறார்களாதலின், அவர்கள் பொருளை நல்ல வழிகளாலேயே தேடி வந்தார்கள்; தவறான வழிகளிலே சம்பாதிக்கப்படும் பொருள், பச்சை மண்ணாகிய குடத்துள் நீரை நிறைத்து வைத்தாற் போன்றதாம் என்பது அவர்களது கருத்து. அறிவுடைய பெரியோரிடம் இருக்கும் செல்வம் ஊருணியில் நீர் நிறைந்திருப்பதற்கும், அறிவற்ற கீழ் மக்களிடம் இருக்கும் செல்வம் பலரும் செல்லும் வழியில் விஷத்தன்மை வாய்ந்த மரம் பழுத்திருப்பதற்கும் சமமாகும் எனப் புகழ்ந்தும், இகழ்ந்தும் பேசப்படுவது வழக்கமா யிருந்தது. சுருக்கமாகக் கூறின் "ஈதற்குச் செய்க பொருள்" என்பதே தமிழர்கள் பொருளைப் பற்றிக் கொண்டிருந்த சிறந்த கொள்கையாகும் அவர்களுடைய செய்கைகளும் அக் கொள்கைக்கு ஒத்தனவாகவே இருந்தன.

4. நமது நிலை.

இவ்வளவு சிறந்த முறைகளையும், கொள்கைகளையும் பெற்றுத் திகழ்ந்த நமது நாடு இக் காலம் எவ்வித நிலைமையிலிருக்கின்றது? இதை விளக்க அதிகம் கூற வேண்டியதில்லை. ஒருவர் ஆங்கிலப் பார்லிமெண்டு சபையிலே நமது நாட்டைப் பற்றிப் பேசுகின்ற காலத்திலே "மான்செஸ்டரிலுள்ள எல்லாத் தறிகளும் ஓயாமல் வேலை செய்துகொண்டிருக்க வேண்டுமாயின் அதற்கு இந்தியக் கிராமவாசிகளின் விவசாய நிலைமை உயர வேண்டும்; வாங்கும் வன்மை—வேற்று நாடுகளிலிருந்து சாமான்களை விலைக்கு வாங்கும் பொருட் சக்தி—அதிகமாதல் வேண்டும். விவசாயம் வளர வேற்று நாட்டுக் கருவிகள் வேண்டும். நீர்ப்பாசன முறையும் வேற்று நாட்டுக் கருவிகளாதல் வேண்டும். இவை நிறைவேற நாம் முயலுதல் வேண்டும்" என்று கூறுகிறார். இஃது "ஆடு நனைகிறதெனக் கோணாய் குந்தி அழுகிறதாம்" என்ற பழமொழிக்குப் பொருத்தமாகக் காணப்படுகிறது. மேல் நோக்காகப் பார்க்க இவ்வுரை நம்முடைய கிராமவாசிகளின் செல்வ நிலைமையை உயர்த்துவது போலக் காணப்படலாம். ஊன்றி நோக்க அஃது அத்தனையும் நமது நாட்டை வறுமைக் குழிகள் அழுத்துங் கருத்துடையதே. இவர் கருத்துப்படி நடைபெறுவதாயின் நம்மவர் வருந்தி முயன்று விளைவித்த மூலப் பொருள்களையும், அரும் பாடுபட்டுத் தேடிய பெரும் பொருள்களையும் வேற்று நாட்டினரிடம் கொட்டிக் கொடுத்துவிட்டுத் தமக்கு வேண்டிய பண்டங்களுக்கு அயல் நாட்டினரை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருக்க வேண்டியது தான் பயனாகும். தன்னிடத்திலே விளையும் மூலப் பொருள்களுடன் நம்மிடத்திலுள்ள மூலப் பொருள்களையும் விலைக்கு

வாங்கிப் பண்டங்களாக மாற்றிப் பொருள் தேடவே அந் நாடுகள் முயலுகின்றன. இந்த விதி நமது நாட்டிற்கு விலக்காக மாட்டாது; பொருந்தியதே. விவசாயம், நீர்ப்பாசனம் முதலியவற்றிற்கும் நமக்குப் பிற நாட்டுக் கருவிகள் முற்றும் வேண்டப் படுவனவாகா. "பத்துப் பிள்ளைகளைப் பெற்ற பாட்டியாருக்கு முதற் பிள்ளையையும் பெறாத மூன்றாவது பேத்தி மருத்துவம் பார்க்க முற்படுவது போல" இருக்கின்றது. உழு தொழிலையே உயிர்த் தொழிலாகக் கொண்ட நம்மவர்க்குச் செய்யும் இந்த உபதேசம்! இக் குறிப்பால் நாம் பொருளாதாரத் துறையில் எவ்வளவு தாழ்ந்த நிலைமைக்கு வந்திருக்கிறோம் என்பது விளங்கும்.

5. நமது கடமை.

ஒரு நாட்டிற்கு அரசியல் விடுதலையைக் காட்டிலும் பொருளாதார விடுதலை இருப்பது முதற்கண் வேண்டப்படுவது. இது மிகப் பொருத்தமானதே என்பது பல தேசாபிமானிகளின் கருத்தாகும். அம் முறையில் நமது நாட்டின் பொருளாதார விடுதலையை விரும்புவோர் அஃதாவது பொருள் செயல் வகையை அறிந்து கைக்கொள்ள முயல்வோர் முதலிலே "பத்தும் பசி வந்திடப் பறந்துபோம்," "யோசிக்கும் வேளையிற் பசி தீர உண்பது," "உண்டி முதற்றே உடலின் பிண்டம்" என்ற ஆன்றோர் வாக்கியங்களை உணர்ந்துகொள்ள வேண்டும். "நமது நாட்டிலே எவ்வளவு பேர் உண்டு உயிர் வாழ வேண்டியவர்களா யிருக்கின்றனர்? அதற்கு எவ்வளவு உணவுப் பொருள்களை விளைவித்தல் வேண்டும்? எப்படி முயன்றால் அவற்றை விளைவிக்கலாம்? நாட்டினரின் தேவைக்குப் போதிய வுணவுப் பொருள்களை விளைவித்துக்கொள்ளாமல் அவற்றிற்கும் வேற்று நாட்டை எதிர்பார்த்தல் இழிவாகாதா?" என்று கருதிப் போதிய அளவு உணவுப் பொருள்களை உண்டாக்குவதிலே கண்ணுங் கருத்துமா யிருத்தல் வேண்டும். இதனோடு உடை; இன்றியமையாத் தொழில்கள் முதலியவற்றிற்குப் பயன்படும் பொருள்களையும் விளைவிக்கலாம். இங்ஙனம் முயன்று வருங்கால் நம்மவரையும், நாட்டையும் வறுமைத் தொல்லைக்கு உள்ளாக்கும் வேண்டாப் பொருள்களை விளைவிக்கலாகாது.

உணவுக்கு அடுத்தபடியாக மக்களுக்கு வேண்டியது உடையே. "ஆடை யில்லாதவன் அரை மனிதன்" என்பது பழமொழி. எப்படி ஒருவன், தனக்கு வேண்டிய உணவுக்கு அயல் நாட்டை எதிர்பார்க்கலாகாதோ அப்படியே அவன் தனது உடைக்கும் அயல் நாட்டை எதிர்பார்க்கலாகாது. இம் முறையில் நாட்டின் பொருளாதாரத்திற்கு

அதிகம் துணைபுரியக் கூடியது உடைகளை அமைத்துக் கொள்வதே. அவையும் "பெரும் பாலார் துன்பத்தையும் வறுமையும் அனுபவித்து, ஒரு சிலர் இன்பத்தையும் செல்வத்தையும் அடைவதற்குத் துணை செய்யும் இயந்திர முறையாகவே இராமல், ஒரு வேளை உணவுக்கும் வழி யில்லாமல் பட்டினி கிடக்கும் ஏழை மக்களுக்குப் பயன்படும் துறையில் குடிசைத் தொழில் முறையாகவே இருத்தல் சாலச் சிறந்த தாம். இதனால் பெரிய தொழிற்சாலைகளை வெறுத்ததாகாது. முத லிலே பல நாட்களாகப் பட்டினி கிடப்பவர்க்கு உணவளித்துப் பின் னர்த் தினந் தினம் உண்பவர்க்கு உணவளிக்கலாம் என்பதே.

உணவு, உடை என்ற இரண்டானுலும் விடுதலை பெற்று வேற்று நாட்டினரிடம் அடிமைப்படாத நிலைமை எய்திய பிறகு வாணிகத்தி லும் முயலலாம். அப்பொழுதும் உள் நாட்டிற்குத் தேவையான பொருள்களை உண்டுபண்ணிக் கொள்ளவே முழு முயற்சியும் இருத்தல் வேண்டும். மூலப் பொருளாக ஏற்றுமதி செய்வதிலும் செயற்கைப் பொருளாக ஏற்றுமதி செய்வது நாட்டின் செல்வ நிலையின் உயர்ச் சிக்குக் காரணமாகும். அங்ஙனமே இறக்குமதியிலும் ஏற்றுமதி செய்வதே சிறந்ததாகும். இம் முறை கைவருவதில் "சின்ன மீனைப் பெரிய மீன் தின்பது" போன்ற இடையூறுகள் இருத்தலாகாது. இங்ஙனம் முயன்று பயன்படுவது நியாயமும் கடமையுமாகும். அற நெறியிற் கடமையை நிறைவேற்ற முயலுங்கால் பல இடையூறுகள் தோன்றுதல் கூடும். இது பற்றியே ஆசிரியர் திருவள்ளுவர்,

"வாரி பெருக்கி வளம்படுத் துற்றவை
ஆராய்வான் செய்க வினை"

எனத் திருவாய் மலர்ந்தருளியுள்ளார்.

6. பெரியார் வாக்கு.

நமது நாட்டின் பொருளாதார நிலைமையைப் பற்றி ஆசிரியர் ஸர். ஜகதீசசந்திர வஸு அவர்கள் கூறியுள்ள செவ்வுரை இங்கே சிந்திக்கத் தக்கதாம். அஃது "இந்தியாவிலே காணப்படும் அமைதி யின்மை முக்கியமாகப் பொருளாதாரத் துன்பத்தினுலேயே தோன்றி யிருக்கின்றது. இந்தியாவின் பொருளாதார நிலைமை சிக்கலானதாக வும், மற்றைத் தேசங்களைவிடக் கஷ்ட சாத்தியமானதாகவும் இருக் கின்றது; வேலை யில்லாத் திண்டாட்டத்தையும் கவனிக்க வேண்டி யிருக்கின்றது. தற்கால சாந்தியாகச் செய்யப்படும் சில்லரை முயற்சி களினுல் எவ்வித நன்மையும் உண்டாகிவிட மாட்டாது. நாட்டிலே

காணப்படும் நிறைந்த மூலப் பொருளாதாரங்களைச் சாஸ்திர உதவி கொண்டு முழு நன்மைக்கும் உபயோகப்படுத்திக் கொள்வதனுலேயே இந்தியாவின் தொல்லை நிவர்த்தி செய்யப்படலாம். மிகவும் நுட்பமாக நான் காட்டிய பல வேறு கருவிகளும் இந்தியாவிலேயே இந்தியக் கைத்தொழிலாளர்களாலேயே செய்யப்பட்டவை. இதனால் இந்திய ஜனங்கள் அபூர்வமான விஷயங்களைக் கண்டுபிடிக்கும் ஆற்றலை இயற் கையிலேயே பெற்றிருக்கின்றனர் என்பது நன்கு அறியப்படும். இங்ஙனம் புதிய உண்மைகளைக் கண்டுபிடிப்பதிலேயே இந்தியாவின் எதிர்கால க்ஷேமம் அமைய வேண்டியதா யிருக்கின்றது. இந்தியா வில் தேசீய உணர்ச்சியும், தேச பக்தியும் பெருகிக்கொண்டே வரு கின்றன. தேசீய மூலாதாரங்களைப் பெருக்க வேண்டும் என்ற அவாவும் மிகுந்து வருகின்றது. நம்பிக்கையுடன் முன் சென்று தொழில்களை நடத்திப் பொது நன்மையைப் பெருக்க வேண்டிய வசதிகள் இருக்கின்றன. இந்தியாவிலே இந்தியாவின் வளர்ச்சியை யும் இந்தியர்களின் நன்மையையுமே கருதிச் செலவிடுவதானுல் அதற் காக வேண்டிய பொருள் இந்தியரிடமிருந்தே கிடைக்க வேண்டும்" என்பது. இதுபற்றிய பெரியோர் வாக்குக்களாக எத்துணையோ பல உள.

7. முடிவுரை.

இத்துணையுங் கூறியது கொண்டு நமது நாட்டிலே "முற் காலத் தினர் எம் முறையிலேயே பொருளைத் தேடி வந்தனர்; இக் காலத்தி னர் எம் முறையிலே முயல வேண்டும்" என்பன ஒரு சிறிது புலனும். பொருளின் உயர்வையும், பொருள் செயல் வகையின் அருமையையும் விளக்கவே ,'செய்க பொருளை" என்று தேவர் விளக்கிக் கூறியுள்ளார். இவ் வுண்மை நம்மவரால் இனிது உணர்ந்து கைக்கொள்ளப்படுவதாக.

"தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு."

நந்தா விளக்கு. *

திரு. பெ தூரன் அவர்கள்.

அந்தியின் சாயை விழ ஆரம்பித்து விட்டது. கல்கத்தாவின் ஒரு சந்தில் ஒரு இளைஞன் வேகமாகப் போய்க்கொண் டிருந்தான். அவன் உடை கிழிந்தும், அழுக்கடைந்தும் இருந்தது; ஆனால் அவன் ஒரு பெரிய மனிதன் என்பதை அவன் முகத்தைப் பார்த்த யாரும் சந்தேகிக்க மாட்டார்கள். அவன் முகம் பெருந்தன்மையும், பெருங் குடிப் பிறப்பையும் காட்டிய போதிலும் கவலையால் வாடி யிருந்தது.

அந்தச் சந்தின் கோடியிலிருந்த ஒரு வீட்டின் முன் அவன் நின்றான். கதவு சாத்தப்பட்டிருந்தது. உள்ளே வெளிச்சத்தைக் காணோம். கதவை மெதுவாகத் தட்டி "சாரதா, சாரதா" என்று அவன் கூப்பிட்டான்.

ஒருவரும் பதில் சொல்லவில்லை. அவன் கொஞ்சம் வேகமாகத் தட்டி, "அம்மா, அம்மா" என்று மறுபடியும் கூப்பிட்டான். இம் முறை கதவு கோபத்துடன் திறக்கப்பட்டது. அந்த இளைஞன் ஜாக்கிரதையாக உள்ளே நுழைந்து, "ஏன் அம்மா இன்னும் விளக்கு வைக்கவில்லை? இருட்டிவிட்டதே" என்றான்.

"நான் வெந்தால் தான் வெளிச்சம். அந்த நாசமாகப் போனவன் என்னை இக் கதிக்காளாக்கி விட்டுப் போய்விட்டானே" என்று அவன் தாயார் கோபத்தை அடக்கிக்கொண்டு சொன்னாள்.

தகப்பனை இவ்வளவு மரியாதையாகப் பேசியது அவன் வாயை மூடிவிட்டது. அவன் மெதுவாக மெத்தை மேல் ஏறினான். முதல் மாடியிலிருந்த ஒரு சிறு அறையில் 14 வயது சிறுவனொருவன் வியாதியாகப் படுத்திருந்தான். ஒரு மெழுகுவர்த்தித் துண்டு எரிந்துகொண்டிருந்தது. சிறு பெண் ஒருத்தி கீழே வழியும் மெழுகைச் சேகரித்துக்கொண் டிருந்தாள்.

* ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்த்தது.

இளைஞன் உள்ளே நுழைந்ததும், "சாரதா என்ன செய்கிறாய்" என்று கேட்டான்.

"புதிய மெழுகுவர்த்தி செய்வதற்கு மெழுகை எடுத்து வைக்கிறேன்" என்றாள் அந்தப் பெண்.

வியாதியோடு கிடக்கும் பையன், "அண்ணா, எனக்கு தின்பதற்கு ஏதாவது வாங்கி வந்தாயா" என்று கேட்டான்.

"நீ இன்னும் ஒன்றும் சாப்பிடவில்லையா" இளைஞன் விசனத்தோடு வினவினான்.

இவ்வாறு அவன் சொல்லிக் கொண்டிருக்கும் பொழுதே அவன் தாயார் உள்ளே நுழைந்தாள். "சாப்பிட என்ன இருக்கிறது? காலையில் தின்றது போகக் கொஞ்சம் பழைய சாதமிருந்தது. அதில் உனக்குக் கொஞ்சம் வைத்துவிட்டு சாரதா சாப்பிட்டுவிட்டாள். இவனுக்குக் கொஞ்சம் பார்லிக் கஞ்சி வைத்தேன். ஆனால் இந்த நவாப்பு மகனுக்கு அது இறங்கவில்லை; திராக்ஷைப் பழம் வேணுமாம்."

அந்த இளைஞன் மெதுவாக அறையை விட்டு வெளியே வந்தான். "நாராயணா எங்கே போகிறாய்? சாப்பிடவில்லையா?" என்று அவன் தாய் கேட்டாள். "தம்பி தினகரனுக்கு ஒன்றுமில்லை. அவன் பட்டினி கிடக்கையில் எனக்கு என்ன சோறு வேண்டி யிருக்கின்றது............... சாரதா அந்த மெழுகுவர்த்தியைக் கொஞ்சம் எடுத்துக் கொண்டுவா. இங்கே ரொம்ப இருட்டா யிருக்கின்றது."

நாராயணன் வீட்டை விட்டு வெளியே வந்தான். சிறிது நேரம் சந்திலேயே நின்றுகொண்டு ஆகாயத்தை அண்ணாந்து பார்த்தான். அது ஒரு புகைத் திரையால் மூடப்பட்டிருந்தது; அவனுக்கு ஒரு ஆறுதலுமுண்டாகவில்லை. பிறகு நடக்க ஆரம்பித்தான்.

நாராயணன் தன் வீட்டைப் போலவே வறுமையில் ஆழ்ந்து கிடந்த மற்றொரு வீட்டின் முன் நின்றான். சமையலறையில் ஒரு லாந்தர் எரிந்துகொண்டிருந்தது. ஒரு இளம் பெண் காயரிந்து கொண்டிருந்தாள் அவளுக்கு வயது பதினாறு இருக்குமோ பதினைந்து இருக்குமோ நிச்சயமாகச் சொல்ல முடியாது. அவள் சேலை அழுக்கடைந்தும், கிழிந்து மிருந்தது. உடம்பில் ஒரு ஆபரணமாவது இருப்பதாகத் தெரியவில்லை. கைகளில் மட்டும், வெகு நாளாய்ப் போட்டு நிறம் மங்கிப்போன இரண்டு தந்த வளையல்களிருந்தன. அந்தப் பெண் அழகுடையவளாகக் காணப்படவில்லை. விகார ரூப

முடையவளுமல்ல. சரியானபடி கவனிக்கப்பட் டிருந்தால் அவள் பார்ப்பதற்கு நன்றாக இருந்திருப்பாள் என்பதில் சந்தேகமே யில்லை.

நாராயணன் சமையலறைக் கதவண்டை நின்றுகொண்டு, "ஸரசு, ஜகதீசன் எங்கே?" என்று கேட்டான்.

அந்தச் சிறுமி திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள். "எப்படி வந்தாய்? எனக்குத் தெரியவே யில்லையே. கதவு திறந்தா கிடக்கிறது?"

"ஆமாம்" என்றான் நாராயணன். "இப்படி திறந்து வைக்காதே, திருடன் வந்தால் கூடத் தெரியாதே."

அந்தப் பெண் சிரித்தாள். "திருடன் வருவதற்கு இங்கே என்ன கொட்டிக் கிடக்கிறது. உடைந்து போன ஐந்தாறு பாத்திரங்கள், கொஞ்சம் அரிசி, காய்கறிகள் இதற்கா திருடன் வருகிறான்."

"ஜகதீசன் எங்கே போனான்?" என்று நாராயணன் மறுபடியும் கேட்டான்.

"அவன் வீட்டில் தங்குவதே யில்லையே; வேலை வேலை என்று அலைந்துகொண் டிருக்கிறான்."

"அவனுக்கு ஒரு ஆபீசிலும் வேலை கிடைக்கவில்லையா? நான் அவனுக்கு வேலை கிடைத்துவிட்டது என்று நினைத்துக்கொண் டிருந்தேன்."

"வேலையாவது, மண்ணாவது. இந்த ஒரு வாரமாகக் கடன்காரர்கள் வந்தால், அவர்களைப் பார்க்கவே பயமாக இருக்கிறது."

இந்த வார்த்தைகளைக் கேட்டதும் நாராயணன், "ஸரசு, உங்களை விடத் தரித்திரம் பிடித்தவர்கள் இந்த உலகத்தில் ரொம்ப பேர் இருக்கிறார்கள். எங்கள் வீட்டில் எல்லோரும் பட்டினி. என் தம்பிக்குக் காயலா. அவனுக்குச் சோறும் இல்லை, தண்ணீருமில்லை. கொஞ்சம் பணம் கிடைத்தால், அதற்காக நான் இப்பொழுது எவ்வளவு அவமானமானாலும், பொறுத்துக்கொள்ளத் தயார்.— சரி, உன் வேலை கெடுகிறது; நான் போகிறேன், கதவைச் சாத்திக் கொள்" என்றான்.

"அண்ணன் சீக்கிரம் வந்தாலும் வரலாம். ஐந்து நிமிஷம் பொறேன்."

"பரவாயில்லை. நான் வந்ததாகச் சொல்லு; அவன் தெரிந்து கொள்வான்."

197897
சென்னை-600 00

ஸரசு பேச்சை மாற்றினாள்; நாராயணன் பணத்திற்காக வந்திருக்கிறான் என்று அவளுக்குத் தெரியும். ஜகதீசனோ ஒன்றும் கொடுக்க முடியாது. இருவரும் உதவியற்றவர்கள். வறுமை என்னும் பேய் அவர்களை இறுக்கிப் பிடித்துக்கொண் டிருக்கிறது.

நாராயணன், போகலாமா இன்னும் கொஞ்ச நேரம் இருக்கலாமா என்று ஒரு முடிவுக்கும் வராமல், தயங்கிக்கொண் டிருந்தான். அவனது வாழ்க்கை என்னும் அந்தகாரமான வானில் ஸரஸ்வதி தான் ஒரு நக்ஷத்திரம் போல் பிரகாசித்துக்கொண் டிருந்தாள். அவள் பக்கத்தில் இருப்பதைத் தவிர வேறு ஒரு இன்பத்தையும் அவன் அறிந்ததில்லை. "உன் படிப்பை நிறுத்தி விட்டாயா?" என்று அவளைக் கேட்டான்.

"ஆமாம், படிப்பென்றால் பணம் வேண்டும்; எங்கே போவது? மேலும் தாயாருக்கு உடம்புக்குச் சரியில்லை; வீட்டை கவனிக்க வேறொருவருமில்லை; அதனால் படிப்பை நிறுத்திவிட்டேன்."

அந்த சமயத்தில், சமையலாச்சா?" என்று யாரோ மேல் மெத்தையிலிருந்து கேட்டார்கள்.

"ஆச்சு" என்றாள் ஸரஸ்வதி. நாராயணன் விரைந்து வெளியே வந்துவிட்டான்.

வீதிக்கு வந்ததும் அவன் யோசிக்கலானான். வீட்டுக்குத் திரும்பிப் போவதா அல்லது வேறு எங்காவது போய்ப் பார்ப்பதா? தம்பியின் வாடிய முகம் அவன் மனக்கண் முன்பு தோன்றியது. அவனிடம் வெறுங் கையோடு போவதற்கு நாராயணனுக்குக் கொஞ்சமும் விருப்பமில்லை. ஆனால் என்ன செய்வது; எல்லோருக்கும் அவன் கடன் கொடுக்க வேண்டும்; அவனுக்குக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் யாருமில்லை. இந்த பூமண்டலத்திலேயே இரண்டு பேர் தான் அவனுக்குச் சிறிது பொருள் கொடுக்க வேண்டும். ஒருவன் ஜகதீசன். அவனைக் கேட்பது கொடுமையே அன்றி வேறில்லை. மற்றொருவன் பெரிய பணக்காரன்; கஷ்டத்தையே அறியாதவன்; அதனால் பிறர் கஷ்டத்தையும் உணர்ந்துகொள்ளாதவன். கடைசியாக நாராயணன் அவனிடம் தான் போகவேண்டும்.

"எங்கே இவ்வளவு அவசரம்? அதுவும் இந் நேரத்திலே" என்று பின்னாலிருந்து ஒரு குரல் கேட்டது.

நாராயணன் திரும்பிப் பார்த்தான். அவனது சிநேகிதன் ஆறுமுகன்; "வா, டீ சாப்பிடலாம்" என்று கூறிக்கொண்டே வந்தான்.

நாராயணனுக்குப் பசியால் கிறுகிறுப்புத் தட்டிக்கொண்டிருந்தது. அவனுக்கு வேண்டியதெல்லாம் சாதமே, ஷோக்காக ஒரு கப் டீ அல்ல. இருந்தாலும் தன் சிநேகிதனோடு டீ கிளப்பிற்குள் நுழைந்தான்.

ஆறுமுகன் புத்தி கூர்மையுள்ள இளைஞன். ஆதலால் நாராயணனுடைய நிலைமையை உணர்ந்துகொண்டு அவனுக்குச் சோறு போடும்படி உத்தரவிட்டான். நாராயணனுக்குத் தன் தம்பியின் நினைவு வந்தது. அவன் பசியால் வாடிக்கொண்டிருக்கிறான். ஆனால் நாராயணனும் பட்டினி கிடப்பதால் அவனுக்கு எத்தனை நன்மையும் ஏற்படப் போவதில்லை. நாராயணன் திடமாக இருந்தாலாவது அவனுக்கு ஏதாவது செய்ய முடியும்.

இவ்வாறு நினைத்துக்கொண்டே நாராயணன் சாப்பிட ஆரம்பித்தான். ஆறுமுகன் டீ குடித்துக்கொண்டே ஏதேதோ சொல்லிக்கொண்டே போனான். அதெல்லாம் அவன் காதில் விழவேயில்லை.

கொஞ்ச நேரத்தில் இருவரும் பிரிந்தார்கள். நாராயணன் அப்பாய் நாயுடு வீட்டை நோக்கி நடந்தான்.

அப்பாய் நாயுடுவின் வீடு இருட்டானதும் சாத்தப்பட்டு விடும். அதன் பிறகு உள்ளே போவதென்றால் சாமான்யத்தில் முடியாது. நாராயணன் கதவைத் தட்டலானான்.

வெகு நேரம் தட்டிய பிறகு, "யார் அது?" என்ற சப்தம் கேட்டது.

"அப்பாய் நாயுடு வீட்டிலா?"

"இல்லை அவர் வருவதற்கு இன்னும் இரண்டு மூன்று மணி ஆகும்."

நாராயணன் மறுபடியும் வீதி வீதியாக நடக்கலானான். அவ்விடம் கடிகாரம் இல்லை. அதனால் சில சமயம் இரண்டு மணி ஆய்விட்டது போல் தோன்றும்; சில சமயம் ஐந்து நிமிஷம் தான் ஆனது போல் தோன்றும். போலீஸ்காரன், கடைக்காரர்கள், வழியில் செல்பவர்கள் அனைவரும் அவனைச் சந்தேகத்தோடு பார்ப்பதாக அவனுக்குப் பட்டது.

பத்து மணி அடித்தது. நாராயணன் அப்பாய் நாயுடு திரும்பி வந்திருப்பான் என்று நினைத்துப் புறப்பட்டான். வராவிட்டால் வீட்டிற்காவது போய் விடுவதென்று அவன் நிச்சயப்படுத்தி விட்டான்; நடந்து நடந்து அவன் சலித்துப் போனான்.

அப்பாய் நாயுடு வீட்டை அணுகியதும் நாராயணன் கதவை ஓங்கித் தட்டினான். அது தாளிடப்படவில்லை. ஆதலால் தானே திறந்துகொண்டது. இது ஒரு ஆச்சரியமான சம்பவம். அப்பாய் நாயுடு வீட்டுக் கதவை சுமார் இருபது தரமாவது தட்டி, அக்கம் பக்கத்தை எல்லாம் எழுப்பு முன்னால் திறப்பதென்பதை யாரும் கண்டதே யில்லை. அதனால் கதவு உடனே திறந்ததைக் கண்டு, நாராயணன் பிரமித்து, உள்ளே நுழையத் தயங்கினான். உள்ளே ஒரே இருட்டாக இருந்தது.

கொஞ்ச நேரத்தில் அவன் உள்ளே நுழைய நிச்சயித்தான். அந்த வீட்டில் அப்பாயும், இரண்டு கிழவிகளும் வசித்து வருவது அவனுக்குத் தெரியும். ஒருத்தி அப்பாயின் தாய். மற்றவள் வேலைக்காரி. வேலைக்காரி பகலெல்லாம் ஓயாமல் உழைத்து விட்டு இரவானவுடன் தன் வீட்டுக்குப் போய்விடுவாள். அதனால் நாராயணன் உள்ளே போனபொழுது அங்கு ஒருவரு மில்லாததைக் கண்டு அவன் ஆச்சரியப்படவில்லை. வேலைக்காரி தன் வீடு சென்றிருப்பாள். அப்பாயின் தாயாரோ செவிடி; கண்ணும் தெரியாது. அவள் இதற்குள் தூங்கி இருப்பாள். இருந்தாலும் அந்த வீடு திறந்திருப்பது ஆச்சரியமே.

நாராயணன் மெதுவாக முதல் மாடிக்குச் சென்றான். அப்பாயிருக்கும் அறையில் விளக்கில்லை; ஆனால் அது திறக்கப்பட்டிருந்தது. நாராயணன் தன் ஜேப்பிலிருந்த நெருப்புப் பெட்டியை எடுத்து ஒரு குச்சியை உரைத்தான்.

அடுத்த நிமிஷத்தில் அவன் கலவரத்தோடு மாடிப் படிக்கட்டுகளை நோக்கித் தாண்டி ஏறினான். நெருப்புக் குச்சி அணைந்து விட்டது; ஆனால் அவன் வேறொன்றை உரைக்கத் துணியவில்லை. அந்த அறைக்குள் கண்ட காட்சி அவன் மூளையில் பயங்கரமான தோற்றங்களுடன் எரிந்துகொண்டிருந்தது.

அந்த அறையில் எல்லாம் தாறுமாறாகக் கிடந்தன. புத்தகங்களும் காகிதங்களும் இதர சாமான்களும் தரையில் சிதறுண்டு கிடந்தன. மேஜை தலை கீழாகக் கிடந்தது; லாந்தர் ஒரு புறம் உடைந்து கிடந்தது. ஒரு மனிதன் தன் கையில் பணப் பெட்டியைப் பிடித்துக்கொண்டு தரையில் விழுந்து கிடந்தான். அவன் உடல் முழுதும் காயங்கள்; கண்களில் ஒளி யில்லை.

நாராயணன் கடந்த விஷயங்களைச் சீக்கிரம் உணர்ந்துகொண்டான். அப்பாய் நாயுடு ஒரு பெரிய பணக்காரன் என்றும், பெரிய லோபி என்றும் அக்கம் பக்கத்திலுள்ள எல்லாக் கொலை பாதகர்களுக்கும் தெரியும். வெகு ஜாக்கிரதையாக வாழ்ந்தே அவன் இது

வரை தப்பித்துக்கொண்டு வந்தான். எப்படியோ இன்று யாரோ அவன் உயிரையும் பொருளையும் கொள்ளை கொண்டு போய்விட்டனர். பக்கத்தில் அநேகர் வசித்தும் ஒருவரும் ஒரு சத்தத்தையும் கேட்காதது அதிசயமே. அதிக நேரங்கூட ஆகிவிடவில்லை; அக் கொலைகாரன் எப்படித் தப்பி ஓடியிருக்க முடியும்.

நாராயணன் பயத்தால் நடுங்கினான். ஒரே ஓட்டமாக வெளியே பாய்ந்தான். சுற்றிலும் மிரண்டு மிரண்டு பார்த்தான்! யாராவது தன்னைக் கவனிக்கிறார்களா என்று பார்த்துக்கொண்டே வேகமாக நடக்கலானான். கொலையுண்டு கிடக்கும் கிழவனது உருவம பின்புறத்திலிருந்து தன்னை துரத்துவது போலிருந்தது. அப்பாயுக்கும் நாராயணன் குடும்பத்திற்கும் உள்ள விரோதம் எல்லோருக்கும் தெரிந்ததே. இந்தச் சமயத்தில் யாராவது அவன் அப்பாய் நாயுடு வீட்டிலிருந்து ஓடுவதைக் கண்டால் உடனே சந்தேகம் கொள்வதில் சந்தேகமில்லை.

நாராயணன் அந்தத் தெருவின் கோடியை அடைந்துவிட்டான். அப்பொழுது ஒருவன் எதிரில் வந்து அவன் மேல் முட்டிக்கொண்டான். நாராயணன் கலவரத்தோடு ஒரு பக்கமாக ஒதுங்கி அங்கிருந்த லாந்தர்க் கம்பத்தைப் பிடித்துக்கொண்டு நின்றான்.

“யார்? நாராயணா! இங்கு என்ன பண்ணுகிறாய்? அப்பாய் வீட்டுக்குப் போனாயோ? என்ன ஏதாவது கிடைத்ததா?” என்று அந்த மனிதன் கேட்டான்.

வந்தவன் ஆறுமுகம்தான். “ஒன்றும் கிடைக்கவில்லை” என்று அவனுக்குச் சொல்லியும் சொல்லாமலும் நாராயணன் துரிதமாக அவனை விட்டு நீங்கினான். அவனுக்கு ஒரு உத்தேசமுமில்லை; சும்மா ஓடினான்; கடைசியாகக் களைப்பினால் நிற்க வேண்டியதாயிற்று. அவனால் நடக்கவும் முடியவில்லை; அப்படியே நடைபாதையில் விழுந்து விட்டான்.

சிறிது நேரம் சென்றது. அவன் எழுந்து உட்கார்ந்தான். மூளை குழம்ப ஆரம்பித்து விட்டது. அவனுக்கு என்ன நேர்ந்தது? மூன்று மணி நேரத்திற்கு முன்னால் “தரித்திரமே! தலை விதியே!” என்று அவன் வழி நடந்துகொண்டு இருந்தான். சிறிது காலத்திற்குள், அவன் ஒரு பாவமும் அறியாதவனாக இருந்தது போய் ஒரு குற்றவாளியாகத் தண்டனைக்குப் பயந்து ஓடவேண்டியவனாகி விட்டான். அவன் ஒரு குற்றமும் செய்யவில்லை. கொலை நடந்தது இதற்குள் தெரிந்திருக்கும். அவன் அப்பாய் நாயுடுவைத் தேடிச் சென்றதை ரூபிக்க சாக்ஷிகளிருக்கின்றன. ஆறுமுகன், இவன் அப்பாய் வீட்டிலிருந்து ஓடுவதையும் பார்த்துவிட்டான். அவன்

பார்க்கும் போது நாராயணன் எப்பொழுதும் போலிருக்க வில்லை. அதனால் அவன் குற்றவாளி என்று ஏற்படுவது அநேகமாக நிச்சயமே. அவன் மூளை கலங்கலாயிற்று. அவன் இப்பொழுது என்ன செய்வது?

அவன் எங்கேயாவது ஓடி ஒழிந்து கொள்ள வேண்டியதுதான். ஆனால் அவன் கையில் ஒரு காசுகூடக் கிடையாது; நண்பர்களுமில்லை. அவன் ஓடிவிட்டால் அநாதைகளான தாய் தங்கை, தம்பி இவர்களின் கதி என்னவாகும்? நாராயணன் இருந்தாலும் இனிமேல் அவர்களுக்கு ஒரு வகையிலும் உதவி செய்ய முடியாது. அவன் ஒரு கொலை பாதகன் என்று தண்டிக்கப்படுவான். பிறகு உலகத்திற்கும் அவனுக்கும் ஒரு சம்பந்தமுமிருக்க முடியாது; கடவுள்தான் அவர்களைக் காக்க வேண்டும்.

நாராயணன் எழுந்து நின்றான். தாய், தம்பி, தங்கை இவர்களின் நினைப்பு வந்தது. அவர்களோடு அவன் உள்ளத்தில் மற்றொரு இள முகமும் தோன்றியது. ஸரஸ்வதியை நினைக்கும் பொழுது அவன் நெஞ்சு நெக்குருகி விட்டது. இன்றுதான் கடைசி. இனிமேல் அவளைப் பார்க்க முடியாது; அவளை தன் மனைவியாக்கிக் கொள்ள வேண்டுமென்ற நம்பிக்கையும் போய்விட்டது.

ஒரு குடிகாரனைப் போலத் தள்ளாடிக்கொண்டு நடக்கலானான். இன்றிரவே அவன் எங்கேயாவது ஓடி ஒழிந்துகொள்ள வேண்டும். ஆனால் எப்படி? அவனுக்கு ஒன்றும் புலப்படவில்லை.

அவன் தன்னை அறியாமலே தன் வீடிருக்கும் பாகத்திற்கு வந்துவிட்டான். ஸரசுவின் வீடு முன்னால் தெரிந்தது. ஏதோ ஒரு மறைந்து நிற்கும் சக்தி அவனை அங்கு இழுத்துச் செல்வது போலிருந்தது. ஸரசுவை கடைசியாக ஒரு தடவை பார்க்க விருப்பங்கொண்டான். நிரந்தரமான இருள் அவனது எதிர்கால வாழ்க்கையை மூடிக்கொண்டிருக்கிறது. அந்த இருளில் வழி நடக்க ஒரு **நந்தா விளக்கை** ஆதாரவாகக் கொள்ள முயற்சிப்பது குற்றமாகுமா?

அவன் மெதுவாகக் கதவைத் தட்டி, “ஸரசு, ஸரசு” என்று கூப்பிட்டான். அந்த இளம் பெண் இன்னும் சமையற் கட்டில் பாத்திரங்களைத் தேய்த்துக்கொண் டிருந்தாள். அவளுக்கு அந்தக் குரல் நன்கு தெரியுமாகையால், கதவைத் திறக்க ஓடினாள். அவள் முகம் சந்தோஷத்தால் பிரகாசித்தது; அவள் சிரித்துக்கொண்டே கேட்டாள்: “உனக்கென்ன ஜோசியம் தெரியுமா?”

நாராயணன் தடுமாறினன்: "ஏன்?"

"மறுபடியும் இங்கு வந்தால் ஏதாவது கிடைக்கு மென்று உனக்கு எப்படித் தெரியும்? அதிருக்கட்டும் ஏன் இப்படிக் களைத் திருக்கிறாய்?" என்று ஸரஸ்வதி கேட்டாள்.

"என்ன கிடைக்கும்? சொல்" என்றான் நாராயணன்.

"உள்ளே வந்து உட்கார்ந்தால் தான்" என்று ஸரசு புன்முறுவலோடு கூறினாள்.

நாராயணன் ஒரு விநாடி தயங்கினான். பின் உள்ளே நுழைந்து உட்கார்ந்தான். ஸரசு மேல் மாடிக்கு ஓடிச் சில கரன்ஸி நோட்டுகளைக் கொண்டுவந்து காட்டினாள்: "அண்ணன் உனக்குக் கொடுக்கும்படி சொன்னான்."

நாராயணன் அவற்றை வாங்கி எண்ணிப் பார்த்தான்; நூறு ரூபாய்கள். "அவனுக்கு ஏது?"

"அப்பா ஒருவருக்கு இருநூறு ரூபாய் கொடுத்திருந்தார். அவர் இத்தனை நாளாய்க் கொடுக்காமல் இப்பொழுது வந்து கொடுத்தார். அதில் பாதியை உனக்குக் கொடுக்கும்படி அண்ணன் சொன்னான்."

நாராயணனுக்கு என்ன சொல்லுவது என்று தோன்றவில்லை. அன்பும் உதார குணமும் இந்த உலகத்தில் உண்டென்பதையே அவன் மறந்து விட்டான். ஆனால் அந்த ஊற்று இன்னும் ஊறிக் கொண்டிருப்பது அவனுக்குப் புலப்பட்டது. பத்து ரூபாயைத் தான் எடுத்துக்கொண்டு பாக்கியைத் தாயிடம் கொடுத்துவிடுவதென்று அவன் தீர்மானித்தான். அது அவர்களுக்கு இரண்டு மாதங்களுக்குத் தாட்டும். அப்புறம் கடவுள் விட்டபடி ஆகிறது.

அவன் போவதற்கு எழுந்தான். ஸரசுவின் முகத்தை உற்று நோக்கினான்; அவன் தன்னை மறந்து விட்டான. நாராயணன் அவள் கையைப் பிடித்துக்கொண்டு, "ஸரசு என்னை மறந்துவிடாதே. இந்த உலகம் என்னைக் குற்றவாளி என்று நினைக்கும்; நீ அப்படி நினைத்து விடாதே" என்று கதறினான்.

ஸரஸ்வதி, "இப்பொழுது எங்கே போகப் போகிறாய்" என்று நடுக்கத்துடன் கேட்டாள்.

"என் விதி யெங்கு தள்ளிக்கொண்டு போகுமோ அங்கெல்லாம்" என்று நாராயணன பதில் அளித்து விட்டு வேகமாக வெளிக் கிளம்பினான். ஸரசு கண்ணீருடன் அந்த அறையில் தனியாக நின்றுகொண்டிருந்தாள்.

நாராயணன் அன்றிரவே மறைந்து விட்டான். ஒருவரிடமும் அவன் ஒன்றும் சொல்லவில்லை. மறுநாள் நண்பர்களும், விரோதிகளும் அவனைத் தேடலானார்கள்; ஆனால் ஒரு துப்பும் கிடைக்கவில்லை.

"ஸரசு, ஓ ஸரசு! கதவைத் திற. என்ன காது செவிடாகவா போச்சு? அரை மணியாகக் கத்துகிறேனே."

ஸரசு கோபமாகக் கதவைத் திறந்தாள். "ஏன், எனக்குக் கொஞ்சங்கூட ஓய்வு ஒழிச்சல் வேண்டாமா? ஏன் இப்படிக் கத்துகிறாய்?"

மகளின் கோப த்வனி தாயின் சுபாவமான மூர்க்கத்தைத் தணிக்க முடியவில்லை. ஆனால் அவள் தானே கோபத்தை அடக்க முயன்றுகொண்டு, "மாப்பிள்ளை வீட்டார் இன்றைக்கு வருகின்றார்கள். எதிர்த்த வீட்டு ஸகியை உனக்குச் சடை போட வரச் சொன்னேன்; அதற்குத்தான் கூப்பிட்டேன்" என்று கூறினாள்.

"எனக்கா ஜடை? இந்த அழகுக்கு ஜடை வேறையா?

"ஏன் உனக்கென்ன? அழகுக்குக் குறைச்சலா? செல்லமாக வளர்ந்திருந்தால் எப்படி யிருப்பாய்?"

"செல்லமாய் வளர்த்திருந்தால்தானே? அழகிருந்தாலும் வரதக்ஷிணை ஏராளமாய் வேண்டுமே; எனக்கு எங்கே வரதக்ஷிணை? மாதத்தில் பாதி நாள் பட்டினி, கல்யாணமெப்படி ஆகிறது?" என்று மகள் கேட்டாள்.

"நான் என்ன பண்ணட்டும்? ஜாதியை விட்டுப் போகட்டுமா? உனக்கு வயதாகவில்லை யென்று பொய் சொல்லாத நாள் கிடையாது. நீயோ பனைமரமாட்ட வளர்ந்துவிட்டாய்; பதினாறு வயசுப் பெண்ணென்று யார் சொல்லுவார்கள். அவர்களுக்குப் பெரிய பெண் வேண்டுமாம்; உன்னைப் பிடிச்சாக்க ஒருவேளை வரதக்ஷிணை கேட்க மாட்டா."

ஸரசு ஒன்றும் பேசவில்லை. பக்கத்து வீட்டுக்காரியிடம் மாப்பிள்ளையைப்பற்றி விசாரித்தாள். அவன் ஒரு 'தொண்டு'. அவனை வீட்டை விட்டுப் போகாமலிருக்கச் செய்வதற்காக அவன் குடும்பத்தார் அவனுக்கு ஒரு பெரிய பெண்ணைத் தேடிக்கொண் டிருக்கின்றனர். இந்தக் கல்யாணத்தை நினைக்கும்போதெல்லாம் ஸரசு வெட்கத்தாலும் விசனத்தாலும் பீடிக்கப்பட்டாள். நாள் ஆக ஆக அவளுக்குத் தன் பேரிலேயே வெறுப்பு ஏற்பட்டுவிட்டது; தன் பந்துக்கள் சுகமடைவதனால் அதற்காகத் தனக்கு என்ன நேர்ந்தாலும் சரி

என்று நினைக்க ஆரம்பித்தாள். ஆனால் தன் பெண்மையைத் தியாகம் செய்ய அவளால் முடியவில்லை. அவள் தன் உள்ளத்தை ஒருவனுக்கு அர்ப்பணம் செய்துவிட்டாள்; அவளை இன்று குடும்பத்தின் க்ஷேமத்திற்காக வேறொருவனுக்கு விற்கிறார்கள். இவ்வளவுதானா இந்து மாதர்களின் கற்புக்கு ஆதரவு? ஒரு பெண் தன் உள்ளத்தை ஒருவனுக்கு அர்ப்பணம் செய்ய முடியும்; தன் தேகத்தை முடியாது.

ஸரசு தன் தாயின் விருப்பத்திற்கு இணங்க உறுதி கொண்டாள். இதனால் தனது சகோதரர்களும் சகோதரிகளும் ஒருசமயம் சுகப்பட முடியலாம். நாராயணன் இறந்துபோனானோ என்னமோ; இரண்டு வருஷங்களாகியும் அவனைப்பற்றி ஒரு சேதியும் கிடைக்கவில்லை. அவன் தாயார் தனது மற்ற மக்களின் உதவியைக்கொண்டு ஒருவாறு காலந் தள்ளி வந்தாள்.

இந்தச் சமயத்தில் ஸுகி சிங்காரிப்பதற்கு வேண்டியதையெல்லாம் எடுத்துக்கொண்டு வந்து சேர்ந்தாள். ஸரசுவின் தாயார் கொஞ்சம் நகைகள் இரவலாக வாங்கி வைத்திருந்தாள். ஸுகி ஸரசுக்குப் புது தினுசாக வகுடெடுத்து ஜடை போட்டாள். வாசனைப் பொடி தாராளமாக உபயோகிக்கப்பட்டது. பிறகு ஒரு பொன் நிறமான சேலையைக் கட்டவே ஸரசு அழகாக விளங்கினாள். அவள் தாயாருக்குத் தான் இரவல் வாங்கிவந்த நகைகளையெல்லாம் போடவேண்டுமென்ற ஆசை. ஸுகி ஒரே அடியாக "முடியாது" என்றுவிட்டாள். "என்ன ஷராப் கடையில் நகை அடுக்கி வைக்கிறுப்போலே, அது கூடவே கூடாது."

மாப்பிள்ளை வீட்டுக்காரர் வந்து சேர்ந்தார்கள். அவர்களுக்குப் பெண் பிடித்துவிட்டது. இனி இந்த வியாபாரத்தில் பணப் பேச்சுதான் பாக்கி. முதலில் மாப்பிள்ளை வீட்டார் ஒன்றும் கேட்பதில்லை என்று சொல்லியிருந்தார்கள்; ஆனால் இப்பொழுது கலியாணச் செலவிற்காக நானூறு ரூபாய் கொடுக்கவேண்டுமென்றனர். பெண்ணுக்கு வைதீகக் கல்யாண வயது கடந்துவிட்டதை அவர்கள் கண்டுகொண்டனர்; அதனால் பணந்தட்ட ஆசை பிறந்துவிட்டது. என்ன செய்வது? எப்படியாவது பணம் கொடுத்துத்தான் ஆகவேண்டும். ஸரசுவின் தாயார் இந்தச் சங்கதியைக் கேட்டதும் சத்தம்போட்டு அழ ஆரம்பித்தாள். ஸரசுவின் உள்ளத்தில் ஒரு சிறு நம்பிக்கை குடிபுகலாயிற்று. ஒரு சமயம் அவள் தப்பித்துக்கொள்ளலாம். ஆனால் அந்தோ! அவள் தாய் முன்னூறு ரூபாய் கொடுப்பதாகச் சொல்லியனுப்பினாள்; மாப்பிள்ளை வீட்டாரும் குதூகலத்துடன் போய்விட்டார்கள். ஸரசு இரவல் நகைகளையெல்லாம் கழற்றி எறிந்துவிட்டுத் தாயிடம் சென்று, "முன்னூறு ரூபாய்க்கு என்ன செய்யப்போகிறாய்? நம்மையெல்லாம் விற்றாலும் கிடைக்காதே?" என்று சொன்னாள்.

"உன் சிற்றப்பனுக்கு எழுதுகிறேன். அவர் இந்தச் சமயத்திற்கூடக் கொடுக்கமாட்டாரா?"

ஸரசு விசனச் சிரிப்புச் சிரித்தாள். "அம்மா உனக்கு இன்னுமா இந்தப் பைத்தியம்? நாம் பட்டினி கிடப்பதைக் கேட்டு அவர் ஒரு சல்லி கொடுத்தாரா? ஜாதி கெட்டுப்போவது பெரிய காரியம் தான்; ஆனால் உயிர்போவது அதைவிடப் பெரிதில்லையா? நீ அவர்களுக்குப் பணம் கொடுப்பதாகச் சொல்லியிருக்கப்படாது."

தாயாருக்குக் கோபம் வந்துவிட்டது, "நான் என்னபண்ணித் தொலைக்கட்டும்? நீ நாசமாப்போக, ஏன் இப்படி எதற்கெடுத்தாலும் நச்சு நச்சென்று பேசுகிறாய்?"

சரஸ்வதி பேசாமல் சமையலறைக்குள் நுழைந்தாள்.

கல்யாணத்திற்கு நிர்ணயித்த சுபயோக சுபமுகூர்த்த நாள் வந்தது. கல்யாணத்திற்கு ஒன்றும் பிரமாதமாகத் தயார் செய்யப்படவில்லை; ஏதோ சில சாமான்கள் சேகரித்து வைக்கப்பட்டன. சலீசான விலையில் ஒரு சிவப்புச் சேலை வாங்கினார்கள். ஸுகி பட்டு ரவிக்கை ஒன்று பரிசளித்தாள். தாயார் இரண்டு தங்கக் காப்புகள் வைத்திருந்தாள். இவ்வளவுதான் ஆபரணங்கள். விருந்துச் செலவுக்கென்று ஜகதீசன் எப்படியோ நூறு ரூபாய் ஏற்பாடு செய்து வைத்திருந்தான். வரதக்ஷிணைக்குத்தான் வழியைக் காணோம்.

"அம்மா நீதான் எப்படியாவது சரிபண்ணவேண்டும். என்னால் ஆனதைச் செய்துவிட்டேன். இந்தத் தொல்லைக்கு நீதான் காரணம்; நீயே அதைத் தீர்க்கவேண்டும்."

தாயார் வயிற்றிலும், வாயிலும் அடித்துக்கொண்டு ஒப்பாரி வைத்துக்கொண் டிருந்தாள். அவன் ஒரு பதிலும் சொல்லவில்லை. ஸரசு மணக்கோலமாய் மூலையில் உட்கார்ந்திருந்தாள். அழுவதா, ஆனந்தப்படுவதா? என்று அவளுக்குத் தெரியவில்லை. கற்பைக் காக்க வேண்டுமானால் ஜாதி போய்விடும்; ஜாதி போனால் குடும்பமே நாசமடையவேண்டியதுதான்.

வீட்டில் சந்தடியே அடங்கிவிட்டது. வரதக்ஷிணை கொடுக்காததால் மாப்பிள்ளை வீட்டார் கோபத்தோடு போய்விட்டார்கள்.

ஜகதீசன் சொன்னவைகளைக் கேட்ட அவன் தாயார் அதிக சத்தம்போட்டு அழலானாள்: "நான் எப்படிச் சரிபண்ணுவது? கைம்

பெண், நான் எங்கே போக? நீதான் எப்படியாவது நம்ம ஜாதியைக் காப்பாற்றவேண்டும்.''

''கல்யாணப் பேச்சுப் பேசும்போதும் என்னை ஏன் கேட்கப் படாது? இந்தக் கல்யாணம் வேண்டாமென்று ஆயிரம் தடவை சொன்னேனே. இப்போ நான் எங்கே போய்ச் சாவது?''

அவன் வீட்டை விட்டு வெளியே ஓடினான். திடீரென்று யாரோ அவனைக் கையைப் பிடித்தார்கள்.

ஜகதீசன் சட்டென்று திரும்பிப் பார்த்துப் பதுமைபோல் நின்றுவிட்டான். கடைசியாக அவன், ''நீயா நாராயணா?'' என்று பெருமூச்சுடன் கேட்டான்.

''ஆமாம், நான்தான். என்னால் ஒழிந்து திரிய முடியவில்லை. தூக்குமரம் எனக்காகக் காத்துக்கொண்டிருக்கிறது என்று தெரியும்; இருந்தாலும் வந்துவிட்டேன்—எல்லாரும் சௌக்கியமா?''

''சௌக்கியத்திற்கு என்ன குறைச்சல்?'' ஜகதீசன் மன முடைந்து கூறுகிறான், ''நீ, யார் க்ஷேமத்தைப் பெரிதும் நாடுவாயோ அவளுக்காகத்தான் நான் இப்படிப் பைத்தியம் பிடித்தவன்போல் ஓடுகிறேன்.''

நாராயணன் முகம் இருண்டது; ''ஸரசுக்கு என்ன நேர்ந்தது'' என்று ஆவலுடன் கேட்டான்.

''அவளால் நாங்கள் ஜாதிப் பிரஷ்டம் செய்யப்படப்போகிறோம் இன்றிரவு அவள் கல்யாணம் நடக்கவேண்டியது. வரதக்ஷிணை கொடுக்காததால் மாப்பிள்ளை வீட்டார் திரும்பிப் போய்விட்டார்கள். நான் இப்பொழுது பணத்துக்கு அலைகிறேன். என்னை யாராவது அடிமையாக வைத்துக்கொண்டாலும் சரி, பணம் கிடைத்தால் போதும்.''

''இப்பொழுது என்ன செய்யப்போகிறாய்?'' என்று நாராயணன் அளவு கடந்த விசனத்தோடு வினவினான்.

''அடுத்த தெருவில் ஒருவருக்கு ஊமைப் பெண் ஒருத்தி யிருக்கிறாள். அவளைக் கல்யாணம் செய்துகொண்டால் அவர் ஆயிரம் ரூபாய் கொடுப்பதாகச் சொன்னார். இஷ்டமிருந்தால் வேறு கல்யாணமும் செய்துகொள்ளலாம்; அந்தப் பெண்ணை ஆதரிக்கக்கூட வேண்டியதில்லை. நான் முன்பு மறுத்துவிட்டேன். இப்போது வேறு கதியில்லை; நமது சமூக வழக்கத்திற்கு என்னைத் தியாகம் செய்யப்போகிறேன்.''

''போய்ப் பார்த்துவிட்டு வா. நான் இங்கேயே இருக்கிறேன்.''

ஜகதீசன் ஓட்டத்திலேயே போனான். நாராயணன் ஒரு சுவற்றின்மேல் சாய்ந்துகொண்டு நின்றான். பெருமூச்சுக்கள் அவன் மார்பைப் பிளந்து சென்றுகொண் டிருந்தன.

ஐந்து நிமிஷங்களில் ஜகதீசன் திரும்பிவிட்டான். ''எனது தியாகத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. ஒரு நாயைப்போல என்னை வெளியே துரத்திவிட்டு விட்டார்கள். வேறொருத்தன் கல்யாணஞ் செய்துகொள்ளத் தயாராயிருக்கிறானாம். இனி நமக்கு ஒரு திக்குமில்லை; தற்கொலை செய்துகொள்ள வேண்டியதுதான்.''

''ஜகதீசா, என்னோடு வா, நான் பணங் கொடுக்கிறேன்'' என்று கடைசியாக நாராயணன் கூப்பிட்டான்.

''நீ எப்படிக் கொடுக்க முடியும்?'' என்று ஜகதீசன் ஆச்சரியத்தோடு கேட்டான். நாராயணன் பதிலளிக்காமல் ஒரு ஜட்கா வண்டியை வரவழைத்தான். இருவரும் அதில் ஏறிக்கொண்டனர். நாராயணன் வண்டியைப் பக்கத்திலிருக்கும் போலீஸ் ஸ்டேஷனுக்கு ஓட்டும்படி சொன்னான். இதைக் கேட்டதும் ஜகதீசன் திடுக்கிட்டு, ''நிறுத்து, நிறுத்து; நான் வரமாட்டேன். நாராயணா, உனக்கென்ன பயித்தியமா? நான் உன்னைத் தூக்கு மரத்திற்குக் கொண்டுபோகவே மாட்டேன்'' என்று சத்தமிட்டான்.

நாராயணன் அவனைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு, ''முட்டாள்தனமாக உளராதே. நான் போலீஸில் நேரில் ஆஜராகத் தீர்மானித்தே இங்கு வந்தேன். ஒழிந்து திரிந்து சாகமுடியவில்லை. நான் ஆஜராவதில் ஸரசுக்கு நன்மை ஏற்படுமானால் ரொம்ப நல்லதாச்சு'' என்று சொன்னான்.

வண்டி போலீஸ் ஸ்டேஷனுக்கு முன் நின்றது. நாராயணன் கீழே இழங்கியதும் ஜகதீசனைத் தழுவிக்கொண்டான்: ''எனக்காக வருந்தாதே, ஸரசுவுக்கும் சொல். இப்படி வாழ்வதைவிட இறப்பதே நல்லது.'' இருவரும் ஸ்டேஷனுக்குள் போனார்கள். அரை மணி நேரத்திற்குப் பிறகு ஜகதீசன் மட்டும் வெளியே வந்தான். நாராயணனைப் பிடித்துக் கொடுத்ததற்காக அவனுக்கு வெகுமதி கிடைத்தது.

ஆனால் அன்று ஸரஸ்வதி மணக்க அதிர்ஷ்டமில்லை. ஜகதீசன் வீட்டிற்கு வந்தபோது அங்கு எல்லாம் ஒரே அழுகையாக இருந்தது. அவன் பிரமித்து நின்றான். இன்னும் என்ன சங்கடங்களோ? அவன் தம்பி ஓடிவந்தான்: ''அண்ணா, போனால் போகிறது; நாமெல்

லாம் கிறிஸ்தவர்க ளாகிவிடலாம். நம்ம சமூகமும், அதன் குரூர வழக்கங்களும் நாசமாகப் போகட்டும்.''

"என்ன சங்கதி?'' என்று ஜகதீசன் வினவினான்.

''அந்த நாசமாப்போன மாப்பிள்ளை ராமநாதனுடைய ஊமைப் பெண்ணைக் கல்யாணம் செய்துகொண்டான். பிறகு நாம் எப்படி அக்காளைக் கொடுப்பது? முகூர்த்தமும் தப்பிப்போச்சு.''

"ஐயோ இதற்கா நாராயணனைப் பலிகொடுத்தேன்!'' என்று ஜகதீசன் கதறினான்.

''என்ன?'' என்று கேட்டுக்கொண்டே அனைவரும் அவனிடம் ஓடிவந்தார்கள். ஸரசு இதைக் கேட்டதும் பிணம்போல் மூர்ச்சித்து விழுந்தாள்.

* * * * *

நான்கு நாட்கள் கழிந்துவிட்டன. ஸரஸ்வதி முகமெல்லாம் வெளுத்துப்போய்ப் படுத்த படுக்கையாகக் கிடக்கிறாள். அவள் தாய் அவசர அவசரமாகச் சமையலறையில் காரியங்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறாள். அந்தத் தருணத்தில் ஜகதீசன் ஸரசுவின் படுக்கையறையில் நுழைந்தான். அவன் முகம் களிப்பால் பிரகாசித்துக் கொண்டிருந்தது.

''அண்ணா ஏதாவது நல்ல சேதி உண்டா?'' என்று ஸரசு ஆவலோடு கேட்டாள்.

"கடவுள் ஒருவருண்டு, என்று இப்பொழுதுதான் நம்புகிறேன். வயதுசென்ற கைதி ஒருவன் சாகுந் தருவாயில், தான் அப்பாய் நாயுடுவைக் கொலை செய்ததாக ஒப்புக்கொண்டான். கொலை செய்ததை ரூபிக்க இரண்டு சாக்ஷிகளு மிருக்கிறார்கள். நாராயணனை விடுதலை செய்துவிட்டார்கள்.''

ஸரசுவின் கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் முத்து முத்தாக உதிர்ந்தன.